பதிவு இலக்கம் : 105267

வார இதழ்

# தீபம்

14.07.2019 தீபம் – 190

பக்கங்கள் - 24 விலை ரூபா 30.00



**HOTEL SELLA REST**

Wifi / TV /AC / Conference Hall / Double Bed Rooms
Single Rooms / Hall / Kitchen Facility & Parking
என சகல வசதிகளுடனும் கிளிநொச்சியில் அமைந்துள்ளது.

வசதிகள் மற்றும் அமைவிடம்

சுற்றுலா பயணிகளுக்கான சகல ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும். மத்தியில் அமைந்துள்ளதால் அனைத்து பகுதிகளுக்கும் இலகுவாக பிரயாணிக்க முடியும். சமைத்து சாப்பிடுவதற்கான வசதிகள் மிகவும் அமைதியான மற்றும் இயற்கையான சூழல். சுற்றுலா பிரயாணிகளுக்கு சைக்கிள் வசதிகள் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

தரமான உணவுகளை உங்கள் விருப்பத்துக்கு ஏற்ப சுவைத்து மகிழ இன்றே நாடுங்கள் . நியாயமான கட்டணத்தில் தரமான சேவை..!

Tel : 0777 442 846, 021 492 5665, 021 228 5613
46, உதயநகர் மேற்கு, கனகபுரம் வீதி, கிளிநொச்சி


## குடாநாட்டு மக்கள் எதிர்கொள்ளப்போகும்

# அறிவியல் ஆபத்து..!


பக்கம்
12 - 13






# மழலையர் முற்றம்

## இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பு

| | |
|---|---|
| அரசியல் மாகாணம் | - 9 (மாகாண சபையால் ஆளப்படுகிறது) |
| நிர்வாக மாவட்டம் | - 25 அரசாங்க அதிபரால் நிர்வகிக்கப்படுகிறது) |
| தேர்தல் மாவட்டம் | - 22 |
| கல்வி மாவட்டம் | - 31 |
| பிரதேச செயலாளர் பிரிவு | - 312 |
| கிராமசேவகர் பிரிவுகள் | - 1500 (அண்ணளவாக) |
| கிராமங்கள் | - 38259 |
| உள்ளூராட்சி சபைகள் | - 330 |
| மாநகர சபைகள் | - 18+ (புதியவை - 5) = 23 |
| நகர சபைகள் | 42 |
| பிரதேச சபைகள் | - 270 |

# உடைந்த பானை!



பொன்மார் காட்டில், அழகிய புளிய மரம் ஒன்று இருந்தது. அதில், இரண்டு காகங்கள், கூடு கட்ட துவங்கின. முதலில், பாதுகாப்பான ஒரு கிளையை தேர்வு செய்தன. பின், அங்குமிங்கும் பறந்து, மெல்லிய குச்சிகளை எடுத்து வந்தது. ஒன்றோடு ஒன்று பிணைத்து, கூடு கட்ட ஆரம்பித்தன.

காகங்கள் கூடு கட்டுவதை, வேப்ப மரத்திலிருந்து, கவனித்த குயில், "இன்னும் சில நாட்களில், முட்டையிட வேண்டும். ஆனா... கூடு கட்ட தெரியாதே... எங்கே போய் முட்டையிடுவேன்" என ஏங்கியது. பின் சற்று பொறுமையாக யோசித்தது. "காகங்கள் கட்டும் கூடு பெரிதாகத்தானே இருக்கிறது... அதில், முட்டையிட அனுமதி கேட்கலாமா" என்று புளிய மரத்திற்கு பறந்து வந்தது.

"காக்கை அக்கா... சில நாட்களில், அழகான கூடு கட்டிவிடுவீர் கள்... அதில் முட்டையிடுவீர்கள்... ஆனா, எனக்கு கூடு கட்டத் தெரியாது நான் உங்க கூட்டுல முட்டையிடலாமா..." என்று கேட்டது.

பெண் காகம், அந்தக் குயிலை சில நாட்களாக கவனித்து வந்தது. அதிகாலையும், மாலையிலும் அதன் இனிய பாடலைக் கேட்டு ரசித்து வந்தது.

குயில் கேட்டதும், பெண் காகத்தின் மனதில், "நான் இந்த குயிலிடம் பாட்டு கற்று, என் குஞ்சுகளுக்கும் சொல்லி கொடுக்கலாமே... பின், எங்கள் பாட்டை கேட்டு, காடே மயங்கிப் போகும்" என்று நினைத்தது.

"குயிலே... என் கூட்டில் முட்டையிட அனுமதிக்கிறேன் ஆனால், அதற்கு கைமாறாக, பாட்டு பாட கற்றுத் தர வேண்டும் செய்வாயா..." என்றது.

மகிழ்ச்சியுடன் சம்மதித்தது குயில்.

தினமும் அதிகாலையில் பாட்டு வகுப்பு நடந்தது. ஒவ்வொரு நாளும், இனிய குரலில், பயிற்சி கொடுத்தது குயில்.

கடும் பயிற்சி செய்தது பெண் காகம். ஆனால், இனிமையாக பாட இயலவில்லை. குயிலைப் போல பாட நினைத்து வாயைத் திறந்தால், "கா...கா" என்ற கொடூர குரல் தான் வந்தது.

குயிலின் யோசனைப்படி, கழுத்தளவு தண்ணீரில் நின்று பயிற்சி செய்தது காகம். ஊஹூம்... அப்போதும், குரலில் மாற்றம் தெரியவில்லை. இப்படியே ஒரு மாதம் கடந்தது.

திடீரென்று, "இந்த குயில் ஏமாற்ற நினைக்கிறதோ... எனக்கு பாட்டு கற்றுத் தந்தால், நானும் அழகாக பாட துவங்கி விடுவேன். பின், காட்டில் தன் மதிப்பு குறைந்துவிடும் என்று ஏமாற்றுகிறதோ" என்று நினைத்து, கோபம் கொண்டது பெண் காகம்.

மறுநாள் வழக்கம்போல், பாட்டு கற்று கொடுக்க வந்தது குயில்.

"குயிலே... கற்று கொடுத்தது போதும் ஒரு மாதம் கற்றும், பாட்டு வரவேயில்லை. நீ முறையாக கற்று கொடுக்காமல், ஏமாற்றுகிறாய்... அதனால், என் கூட்டில் முட்டையிட அனுமதிக்க மாட்டேன்," என்று கோபத்துடன், விரட்டிவிட்டது காகம்.

ஏமாற்றத்துடன் பறந்தது குயில்.

சில நாட்களில், காக்கை கூடு தயாராகி விட்டது. அதில், பெண் காகம், முட்டைகளை இட்டது அவற்றை ஆண் காகமும், பெண் காகமும்

மாறி மாறி அடைகாத்தன. சில நாட்களில் முட்டைகள் பொரிந்தன் குஞ்சுகள் இனிய வாய் திறந்து சிரித்தன.

ஆண் காகம் அங்குமிங்கும் பறந்து, இரை தேடி வர, பெண் காகம் குஞ்சுகளுக்கு ஊட்டி வந்தது.

ஒரு வாரத்திற்குப்பின், குஞ்சுகளை கொஞ்ச வந்த ஆண் காகத்திற்கு, ஆச்சரியம் காத்திருந்தது. காக்கை குஞ்சுகளின் நடுவே, ஒரு குயில் குஞ்சும் இருந்தது.

"அன்று குயிலை விரட்டி விட்டாய்... ஆனால், குயில் உன்னை ஏமாற்றி நம் கூட்டில் முட்டையிட்டு போய் விட்டது பார்த்தாயா..." என்றது ஆண் காகம்.

"ஏமாறவில்லை... எல்லாம் எனக்கு தெரியும். அந்த குயில் முறையாகத்தான் பாட்டு சொல்லி தந்தது. ஆனால், நம் இனத்தின் குரல் மாறாது என்பதை புரிந்துகொண்டேன்.

"பாவம்... இவ்வளவு இனிய குரல் இருந்தும், குயிலுக்கு நம்மை போல் கூடு கட்டத் தெரியவில்லையே... ஒவ்வொருத்தருக்கும், ஒவ்வொரு திறமை இருக்கும்... அதை பொறாமையோடு பார்க்க கூடாது என்பதை புரிந்துகொண்டேன்.

"சில தினங்களுக்கு முன், அந்த குயில் புளிய மரத்தையே சுற்றி சுற்றி வந்தது. அதன் நிலமை புரிந்து, நான்தான் இங்கு முட்டையிட அனுமதித்தேன். பாவம்... நம் குஞ்சுகளுக்கு உணவு கொடுத்து, குயில் குஞ்சை மட்டும் பட்டினியாக தவிக்க விட முடியுமா...

"இந்த குயில் குஞ்சு வளர்ந்து, இனிமையாக பாடும் போது, என் பிள்ளைதான் பாடுகிறது என்று பெருமையாக சொல்ல முடியும் அல்லவா," என்றது பெண் காகம்.

இதை கேட்டு, மனம் நெகிழ்ந்த ஆண் காகம், "உனக்கு குயிலை போல, பாடத் தெரியவில்லை என்றால் என்ன... உன் கருணை நிறைந்த மனம், ஆயிரம் மடங்கு உயர்ந்தது..." என்றது.

அவை குயில் குஞ்சுக்கும் உணவு ஊட்டி மகிழ்ந்தன. இந்த பந்தம் காலங்காலமாக தொடர்கிறது.

குட்டீஸ்... உங்களால் முடிந்த உதவியை, மற்றவர்களுக்கு செய்யுங்கள். அவரவருக்கு தனித் திறமை உண்டு அதை மதியுங்கள்!

## பொதுஅறிவு வினாக்கள்

1. உலகில் உள்ள ஒரே ஒரு இந்து நாடு எது ?
2. அடிப்படை உரிமை கிடையாதது எது?
3. அடிப்படை கடமைகள் அடங்கியுள்ள பிரிவு என்ன?
4. ஆளுநரை நியமிக்கும் அதிகாரம் யாரிடம் உள்ளது?
5. பூஜ்ஜிய நேரம் என்றால் என்ன ?
6. மன்னர் மானியம் எந்த ஆண்டு ஒழிக்கப்பட்டது?
7. எது பாலைவனம் இல்லாத கண்டம்?
8. உலகின் மிகப்பெரிய தீவு எது?
9. பல் துாரிகை கண்டுபிடித்தவர் யார்?
10. உலகின் மிகப்பெரிய நன்னீர் தீவு?

## 07.07.2019 பொதுஅறிவு வினாவிற்கான விடைகள்

1. 1900
2. கெப்ளர்,
3. ரஷ்யர்கள்,
4. 1860,
5. ஜனவரி 3,
6. எருசேலம் நாட்டில்,
7. லிக்னோஸ்,
8. இர்வின் லாங்முர்,
9. ஜப்பான்.
10. 1909

தீபம்,
பொது அறிவு வினாப் போட்டி,
இல.10, வில்வந்தெரு
ஒழுங்கை கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு
அனுப்பி வைக்கவும்.

க.மகிழன்,
ஐயனார் கோவிலடி,
யாழ்ப்பாணம்

இந்த வினாக்களுக்குரிய சரியான விடைகளை எழுதி ரூபா 500 பணப் பரிசினை வெல்லுங்கள்!

## பழ மொழிகள்

1. அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்.
2. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
3. அடாது செய்தவன் படாது படுவான் .
4. ஆழம் அறியாமல் காலை விடாதே
5. ஆறிலும் சாவு நூறிலும் சாவு
6. ஆறின கஞ்சு பலங்கஞ்சு
7. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
8. இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்
9. இறக்க போனாலும் சிறக்கப்போ
10. உடையவன் பாரா வேலை ஒரு முழங்கட்டை

## 3D படம்

நன்றாக உற்றுப் பாருங்கள் உங்களை ஆச்சரியப்படுத்தும் ஒன்றைக் காணுவீர்கள். அது என்ன என்பதைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.



## வேண்டுகோள்

காக்கா கூட்டமே காக்கா கூட்டமே
கிட்ட வராதீங்க
காய வச்ச நெல்லு மேல
வாய வைக்காதீங்க
குருவிக் கூட்டமே குருவிக் கூட்டமே
கிட்ட வராதீங்க
கூடைக்குள்ளே கூழாங்கல் இருக்குது
கிட்ட வராதீங்க
கோழிக் கூட்டமே கோழிக் கூட்டமே
கிட்ட வராதீங்க
அம்மா பார்த்தால் ஆத்திரம்
கொள்வாள்
கிட்ட வராதீங்க
அணில் கூட்டமே அணில் கூட்டமே
கிட்ட வராதீங்க
அடிவாங்கி அலைய வேண்டாம்
கிட்ட வராதீங்க
அந்திக்குள்ளே உலர்ந்து போகும்
கிட்ட வராதீங்க
அதுவரைக்கும் பொறுத்திருங்க
கிட்ட வராதீங்க



தீபம்
"யாமார்க்கும் குடியல்லோம்"
14.07.2019 இதழ் -190
gmail:- newsdeepam19@gmail.com
விநியோகம் / விளம்பரம் TP:- 021 4927542, 0771989445

# நம்ப நடவுங்கள்... நம்பி நடக்காதீரகள்!

இவ் வாரத்திற்கான ஆசிரியர் தலையங்கத்தை எழுதிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அரசுக்கெதிராக நாடாளுமன்றத்தில் மக்கள் விடுதலை முன்னணியினரால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லாப் பிரேரணை தொடர்பான வாக்கெடுப்பில், அரசு மீதியிருக்கும் சொற்ப காலத்திற்கான தனது பதவி இருப்பைத் தக்க வைத்துக்கொண்ட செய்தி வெளிவந்துள்ளது. இது ஒன்று எதிர்பார்க்காத ஒன்றல்ல. நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடைய அதனை எதிர்த்து வாக்களித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் முடிவும் ஆச்சரியமூட்டும் விடயமல்ல...

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சம்பந்தர் அணி தன்னைக் காப்பாற்றும் என்று சொன்ன நம்பிக்கை வார்த்தைகள் வீண்போகவில்லை. சம்பந்தர் அணியினர் எந்த நம்பிக்கையின், வாக்குறுதியின் அல்லது உடன்பாட்டின் அடிப்படையில் அரசுக்கு ஆதரவு வழங்கினார்கள் என்பது தற்போதைக்கு சிதம்பர ரகசியமே!. அது எதுவாக இருந்தாலும் ரணில் அதைக் காப்பாற்றாது, காலம் கடத்தி ஏமாற்றி விடுவார் என்பது சர்வ நிச்சயம். அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு சில தனிப்பட்ட சலுகைகளை வழங்கி சமாளித்து விடுவார். இது கடந்த கால வரலாறு கற்பித்த பட்டறிவுப்பாடம்.

நிச்சயமாக இதில் தமிழ்மக்களின் உரிமைகள் தொடர்பான தீர்வு குறித்து எந்தப்பேரமும் நடந்திருக்காது என்பதும் நிஜமே. அப்படி ஒரு உடன்பாட்டை மேற்கொள்ளவோ, உறுதிமொழிகளை வழங்கவோ அடுத்தடுத்து தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய சூழலில் ரணில் ஒன்றும் அரசியல் தந்திரோபாயம் அறியாத தலைவருமல்ல... அவர் சராசரி பௌத்த சிங்கள பேரினவாத சிந்தனைகளுக்கு கட்டுப்பட்ட பெரும்பான்மை இன அரசியல்வாதி மட்டுமே.

இன்னும் தெளிவாகக் கூறுவதானால் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை முற்றாக நிராகரித்து தமிழின அழிப்புக்கு முழுமையான ஆதரவை வழங்கிய ஒருவர் மட்டுமே ரணிலோ, மகிந்தவோ, மைத்திரியோ இவர்கள் யாவருமே தமிழ் மக்களை, அவர்களின் வாழ்வியல், அரசியல், சமூகவியல் உரிமை களை அங்கீகரித்து கௌரவிக்கும் தார்மீக சிந்தனை கொண்டவர்களல்ல.

இதனைக் கூட்டமைப்பினர் புரிந்து கொள்ளாதவர்களல்ல. இந்த நிலையில் தங்களையும் ஒட்டு மொத்த தமிழினத்தையும் இரண்டாம் தர பிரஜைகளாக இழிவுபடுத்தும் பௌத்த சிங்கள அடிப்படைவாதிகளின் ஆசிகளைப் பெற்று அவர்களின் ஆலோசனைக்கமைய ஆட்சியில் அதிகாரம் செய்யும் இவர்களை பாதுகாப்பதில் எவ்வித ராஜதந்திர மூலோபாயமும் கூட்டமைப்பினருக்கு இருக்கப்போவதில்லை.

நாட்டின் ஆட்சிப் பீடத்தில் நடக்கும் இன்றைய மோதல்கள் யாவும் சிங்களத் தலைமைகளுக்கு இடையேயான அதிகார அபிலாஷைகளை வெல்வதற்கான போட்டியேயன்றி இதில் எவர் வென்றாலும் சரி தோற்றாலும் சரி தமிழ் மக்களின் உரிமை தொடர்பான விடயத்தில் எந்த மாற்றமும் நிகழப்போவது கிடையாது. மாறாக மேலும் மேலும் ஏமாற்றங்களை சந்திக்கும் அவல நிலையே தொடரப்போகிறது என்பதை தென்பகுதியின் சமகால அரசியல் நிகழ்வுகள் மிகத் தெளிவாக உறுதி செய்கின்றன.

இந்த நிலையில் அரசை ஆதரிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் முடிவின் வெளிச்சக்திகளின் அழுத்தங்களும் நெறிப்படுத்தல்களும் இருக்கும் என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாகும். இதுவே உண்மையும் கூட.

தமிழ் மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்ட சுயசிந்தனையின் பாற்பட்ட முடிவொன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எடுக்கக் கூடிய தார்மீக பலம் அற்றவர்கள் என்பதை அவர்களின் கடந்தகால நடவடிக்கை நிரூபித்துள்ளது.

எதுவானாலும் தமிழர் கூட்டமைப்பினரை அதிகார பீடத்தவர் மீண்டுமொரு தடவை கறிவேப்பிலையாக பயன்படுத்தியுள்ளனர். என்பதை வருங்காலம் அவர்களுக்கு உணர்த்தியே தீரும்.
ஐயா சம்பந்தரே...! அரசு நீங்கள் தங்களை காப்பாற்றுவீர்கள் என்று உங்கள்மீது வைத்த நம்பிக்கையை காப்பாற்றி விட்டீர்கள்.
ஆனால் –

அரசு உங்களையோ, தமிழினத்தையோ காப்பாற்றும் என நம்பி ஏமாந்துவிடாதீர்கள்... இதுவும் உங்களுக்கு வரலாறு கற்றுத்தந்த பாடமேயாகும்.

தந்தை செல்வா அவர்கள் கடவுள்தான் இனி தமிழினத்தை காப்பாற்ற வேண்டும் என்று சொன்னதாகக் கூறும் வார்த்தைகளை உங்களுக்கு நினைவு படுத்துவது இச்சமயத்தில் அவசியம்போல் தெரிகிறது.







(1970 களில் சிரித்திரன் ஆசிரியர் சுந்தர் அவர்கள் வரைந்த கருத்துச் சிரிப்பு ஓவியம் இது. பாருங்கள் இன்றும் இதே நிலைதான்...)




எடுத்த காரியம் யாவினும் வெற்றி
எங்கு நோக்கினும் வெற்றிமற் றாங்கே
விடுத்த வாய்மொழிக் கெங்கணும் வெற்றி
வேண்டி னேனுக் கருளினள் காளி
தடுத்து நிற்பது தெய்வத மேனும்
சாரு மானுட மாயினும் அஃதைப்
படுத்து மாய்ப்பள் அருட்பெருங் காளி
பாரில் வெற்றி எனக்குறு மாறே.

எண்ணு மெண்ணங்கள் யாவினும் வெற்றி
எங்கும் வெற்றி எதனினும் வெற்றி
கண்ணு மாருயி ரும்மென நின்றாள்
காளித் தாயிங் கெனக்கருள் செய்தாள்
மண்ணும் காற்றும் புனலும் அனலும்
வானும் வந்து வணங்கிநில் லாவோ?
விண்ணு ளோர்பணிந் தேவல்செய் யாரோ
வெல்க காளி பதங்களென் பார்க்கே?

# ஈரான் மீதான அமெரிக்க தாக்குதல் சாத்தியமானதா?

கலாநிதி கே.ரி.கணேசலிங்கம்



ஈரான்-அமெரிக்க மோதல் போக்கு நீடிக்கின்றது. இது ஒரு போரை ஏற்படுத்துமா? என்ற சந்தேகம் வலுத்துள்ளது. அமெரிக்காவுக்குத் தற்போது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட போர் அவசியம் என்பதைக் கடந்த கட்டுரைகளில் குறிப்பிட்டிருந்தமை கவனிக்கத்தக்கது. அதனைச் செய்வதில் அமெரிக்கா எவ்வளவு கவனம் கொண்டிருக்கிறதோ அந்தளவுக்கு ஈரானும் அதனைத் தவிர்க்க முயலுகின்றமையை அவதானிக்க முடிகிறது. இது ஒருவகை அரசியல் போராக மாறிவிட்டது என்பதே தற்போது தெரிகின்ற விடயமாகும். இராணுவப் போருக்கு முன்பான அரசியல் போர் தவிர்க்க முடியாதது தான் என்பது கடந்த கால அனுபவமாக அமைந்தது. ஆனால் இதுவோ சற்று மாறுபட்டு தந்திரோபாய நகர்வுகளாக அமைந்துள்ளது. அதிலும் ஈரான் தந்திரோபாயமாக செயல்படும் நிலையை திறந்துள்ளது. இக்கட்டுரையும் மட்டுப்படுத்தப்பட்ட போர் அமைவது போல் இரு நாடுகளதும் தந்திரோபாய நகர்வையும் புரிவதற்கான முயற்சியாக அமையவுள்ளது.

அமெரிக்கா ஈரானுடன் மட்டுப்படுத்தப்பட் போரை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளியுள்ளமைக்கான காரணங்கள் சிலவற்றை பார்த்திருந்தோம். அத்தகைய போர் அணுவாயுதத்தை அழிப்பதாகவே அமையவுள்ளது. ஒரு பொரும் போரை செய்ய அமெரிக்கா தயாராக இருந்தாலும் உலகம் தயாராக இல்லை. அதனால் ஒரு பெரும் போரைத் தவிர்த்து விட்டு சிறிய போர்களை முதன்மைப்படுத்துவதும் சிறிய நாடுகளை அடிமைப்படுத்துவதும் வல்லரசுகளிடம் ஏற்பட்டுவரும் மாறுதலாகும். அதனை சரிவர கையாளத்திட்டமிட்டுள்ள அமெரிகா ஈரானின் அணு உலைகளை அழிப்பதன் மூலம் அதன் அணுவாயுத வல்லமையை மீண்டும் ஓர் அரைநூற்றாண்டுக்குப் பின்தள்ளத் திட்டமிட்டுள்ளது. ஈரானின் அணுக்குண்டினை இஸ்லாமிய அணுக்குண்டு என்றே மேற்குலகம் அழைக்கின்றது. காரணம் பாகிஸ்தானை இந்தியா அப்படி கருதினாலும் மேற்கு அப்படி பாகிஸ்தான் பொறுத்து உணரவில்லை. ஆனால் ஈரான் 1979 இல் நிகழ்த்திய இஸ்லாமியப் புரட்சியின் பின்பு அமெரிக்காவுக்கு மட்டுமல்ல மேற்குலகத்திற்கே ஈரான் ஆபத்தானதாக அமையும் என்பதில் தெளிவுடன் மேற்கு காணப்படுகியது. இஸ்லாமிய அடிப்படைவாதம் வளர்ந்ததுடன் அரபுலகத்தின் இருப்பினையும் மரபினையும் பாதுகாத்து வைத்திருப்பது ஈரான் மட்டும் என்றே மேற்குலகம் கருதுகிறது. ஈரானை நீண்டகாலமாக அமெரிக்கா துடைத்தழிக்க வாய்ப்புத் தேடுகிறது. ஆனால் எல்லா சந்தர்ப்பத்திலும் ஈரான் தப்பிக்கொள்கின்றது என்பதில் அமெரிக்காவுக்கு ஏமாற்றமாகவேயுள்ளது. இதனாலேயே ட்ரம்ப்ன் ஈரான் தொடர்பான கொள்கையை வெற்றிகரமானதாக மாற்ற அமெரிக்க நிர்வாகம் முனைகின்றது. அதற்கான ஏற்பாட்டினை செய்துள்ள அமெரிக்கா டியாகோகார்சியாத் தீவில் இரு இராட்சத விமானங்களைத் தயார் நிலையில் வைத்துள்ளது. ஈரானின் அணு உலைகளைத் தாக்கி அழிப்பதற்கு. 1980 களில் ஈரான் எடுத்த ஒரு அணுவாயுத தயாரிப்புக்கான முயற்சியை இஸ்ரேல் அழித்தது போல் இன்னும் பலமடங்கு அழிவை ஏற்படுத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அதற்காகவே ஈரானின் நடவடிக்கையை தூண்டிவிடும் பாணியில் எதிர்மறையான செயல்களில் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது. அதன் மூலம் ஈரானைத் தூண்டிவிட்டு அணுவாயுதத்தைத் தயார் செய்ய அனைத்து நடவடிக்கையையும் நிகழச்செய்வதுடன் அதன் முழுமை சாத்தியப்படும் இறுதி தறுவாயில் அதனை முற்றாக தகர்த்து அழிப்பதாகவே அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அதனால் தான் ட்ரம்ப் ஈரானை சீண்டுவது மட்டுமல்ல போருக்கு அழைப்பு விடுத்துவிட்டுத் தமது தந்திரோபாய நகர்வு எனக்கூறியமை அண்மையில் ஈரான் பாதுகாப்பாக இருக்குமாறு தெரிவித்தமை என்பன கவனிக்கத்தக்கதாகும். இவை அனைத்தும் வெறும் உரையாடல்கள் அல்ல இவை அனைத்தும் அரசியல் தந்திரத்தின் உச்சாடனங்களாகும். இவற்றுக் கூடாக ஈரானுக்கு உலகத்திற்கும் அதிகமான செய்திகளை ட்ரம்ப் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார் என்பதாகும்.

ஈரானைப் பொறுத்தவரை அணுவாயுதத்தைத் தயார் செய்யவும் வேண்டும் அதே நேரம் அமெரிக்காவிடமிருந்து தப்பிக்கொள்ளவும் வேண்டும் என்ற இரட்டை இலக்கை நோக்கி நகர்கிறது. இரண்டும் அணுவாயுதத் தயாரிப்பிலுள்ளது என்பது உலகம் அறிந்த செய்தியாகும். அணுவாயுதம் தயாரித்துவிட்டால் ஈரானிடம் அமெரிக்கா மோதலைத் தவிர்க்க முயலும் என்பது வடகொரியா ஒரு பாடமாகும். அதனால் அணுவாயுதம் தயாரிப்பதில் குறியதாக உள்ளது ஈரான். ஆனால் அத்தகைய நடவடிக்கை ஈரானுக்கு இலாபகரமான விடயமாக அமைவதென்பது கடினமே. அதனை எப்போது எந்தச் சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டும் என்பது தான் முக்கியம். அதற்கான கட்டத்தை ஈரான் பயன்படுத்துவதை விட அணுவாயுதத்தை எப்படியாவது தயாரிக்க வேண்டும் எனக்கருதுவது போல் ஈரான் செயல்பட முனைகிறது. ஈரானின் மீதான காலக்கெடுவை விமர்சித்த ஈரான் ஒவ்வொரு 60 நாட்களும் அணுவாயுத உடன்பாட்டிலிருந்து விலகுவதாகவும் ஐரோப்பிய நாடுகள் மீது விமர்சனத்தையும் தொரிவிப்பதில் ஈரான் கவனம் செலுத்துகிறது. ஆனால் ஈரானுக்கு வலுவான சக்தியே ஐரோப்பிய நாடுகள் என்பதை உணரவேண்டும். அமெரிக்க கூட்டாளிகளை வைத்துக் கொண்டே அமெரிக்காவைக் கையாளவேண்டும். அமெரிக்கா விரும்புவதனைச் செய்வதைவிட அமெரிக்காவுக்கு ஈரான் விரும்புவதனை ஐரோப்பிய நாடுகளை வைத்துக் கொண்டு செய்ய முனைய வேண்டும். அணுவாயுதத்தைத் தயாரிப்பதற்கான யூரேனியம் செறிவூட்டலை ஈரான் ஆரம்பித்துவிட்டதாக அமெரிக்கா குற்றம்சாட்டுகிறது. இதனை ஈரானிய ஜனாதிபதியே குறிப்பிடும் போது ஈரான் அணுவாயுத உடன்படிக்கையிலிருந்து வெளியேறுவதாகத் தெரிவித்துள்ளார். அவ்வாறன்றி மறுவளமாக ஈரான் ஜனாதிபதியின் வெளிப்பாடு அமைந்திருக்கக வேண்டும். தொடர்ச்சியாக உடன்படிக்கையிலிருந்து வெளியேறாது காட்டிக் கொள்ள வேண்டும். அதற்குத் துணையாக ஐரோப்பிய நாடுகளை பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நிறைவடையும் வரை அத்தகைய சூழலை ஈரான் கடைப்பிடிக்குமாயின் ஈரான் அணுவாயுதம் காப்பாற்றப்படுவதுடன் எதிர்கால ஈரானின் இருப்பும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும். இதற்கு சிறந்த அண்மைய பதிவொன்றைக் குறிப்பிடுத்ல் பொருத்தமானதாக அமையும். ஒபாமா நிர்வாகத்தில் இருந்து இறங்குவதற்கும் ட்ரம்ப் பதவிக்குச் செல்வதற்கும் இடையில் தேர்தல் காலம் ஒன்று நிலவிய போது ரக்ஷ்ய ஜனாதிபதி புடின் சிரியாவின் துறைமுகமான ரோட்டஸ்யைக் கைப்பற்றியமை கவனிக்கத்தக்கது. அதுவே மேற்காசிய அரசியலை மாற்றம் செய்வதில் அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தது. அவ்வாறு ஈரான் நகருவதே பொருத்தமானது.

தற்போது பிரான்ஸ் ஜனாதிபதியின் முயற்சியை பிடித்துக் கொள்வது அவசியமானது. ஐரோப்பிய நாடுகள் ஈரானுடன் கொண்டுள்ள உறவை முதன்மைப்படுத்தும் ஈரானின் நடவடிக்கைகள் அவசியமானவை. அமெரிக்கா நிராகரித்த அணுவாயுத உடன்பாட்டினை ஐரோப்பிய நாடுகளுடன் ஈரான் சீர்செய்து செயல்பட வேண்டும். அதனைப் போல் ஐரோப்பிய நாடுகளின் கப்பல்களை மிரட்டுவது போல் செயல்படுவதனைத் தவிர்த்துக் கொள்ளுதல் அவசியம். பிரித்தானியாவின் எண்ணெய்தாங்கிக் கப்பல் ஒன்று ஹோமோஸ் வளைகுடாவுக்கு வருவதற்குத் தயங்கி சவுதியரேபியாவின் கடற்பகுதிக்குள் அடைபட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அவ்வாறே சிரியாவுக்கு சென்ற ஈரானின் கப்பலை பிரிட்டன் கைப்பற்றியிருப்பதுவும் அது பற்றிய மோதலைத் தவிர்த்து உரையாடலை ஏற்படுத்துவதுவும் ஈரானுக்கு அவசியமான நகர்வாகும்.



எனவே ஈரான் - அமெரிக்காவின் தற்போதைய போக்கு விரைவாக ஒரு போரை எட்டிவிடுமா? என்ற சந்தேகத்தை உறுதிப்படுத்துகிறது. அது அமெரிக்காவின் ஜனாதிபதியையும் சேர்த்து உருவாக்கும் வல்லமையை ஏற்படுத்தக் கூடியதாகும். கிழக்காசியாவில் கைகொடுத்துக் கொண்டு மேற்காசியாவில் போர் தொடுப்பதற்கான சூழலை நோக்கிய தந்திரத்தினை அமெரிக்கா நகர்த்துகிறது. இதன் விளைவுகள் மேற்காசியாவுக்குள் அமைவதுடன் அதிலும் ஈரானுடன் மட்டுப்படுத்தப்படுவதாக அமைக்க அமெரிக்கா விரும்புகிறது. ஈரானினது தந்திரோபாய நகர்வுகள் தற்போதைய சூழலில் காணப்பட்டாலும் அது இன்னும் அதிகரிக்கப்படுதல் அவசியமானது. அதனை நோக்கி ஐரோப்பிய நாடுகளும் சீனா ரக்ஷ்சியா போன்ற நாடுகளையும் ஈரான் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். சீனாவும் ரக்ஷ்சியாவும் ஈரானின் நட்பு சக்திகளாயினும் அடிப்படையில் அவை சர்வதேச சக்திகளாக அவை அமைந்துள்ளன. அவற்றினுடனான உலக அரசியல் பலத்தை ஐரோப்பியக் கூட்டுக்களுடன் இணைத்தே ஈரான் பயன்படுத்தி வருகிறது. ஆனால் அதனையும் தாண்டி அவற்றின் அணுகுமுறையை தனித்துவமான நெருக்கத்திற்குள் கொண்டுவருவதனை அமெரிக்காவுக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.




எனவே ஈரான் அமெரிக்க முரண்பாட்டின் போக்கு அதிக நெருக்கடியை எண்ணை அரசியலிலும் பொருளாதாரத்திலும் ஏற்படுத்தப் போகிறது.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்; நம்பிக்கை இல்லாத் தீர்மானமும்

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மாநில மாநாடு சென்ற கிழமைதான் நடைபெற்றது. அதில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் அதில் நிறைவேற்றப்பட்ட நான்கு தீர்மானங்கள் குறிப்பிடக் கூடியளவு முக்கியம் பெறுகின்றன. அரசியல் தீர்வு ஒன்றை இவ்வாண்டுக்குள் ஏற்படுத்த வேண்டும், ஐநாவின் மனித உரிமைப் பேரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்,





இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்களை விடுவிக்க வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வு என்பன அத்தீர்மனங்களாகும். அத்துடன் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றியும் ஒரு தீர்மானம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது..

விடுதலை புலிகளின் போர் மௌனிக்கப்பட்டு பத்தாண்டுகள் கடந்த நிலையில் தமிழரசுக் கட்சி இப்பொழுது இத் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. போர் மௌனிக்கப்பட்ட அடுத்த ஐந்து ஆண்டுகள் மகிந்த ராக்ஜபக்சா ஆட்சியில் இருந்தார். அவர் எதுவும் தமிழ் மக்களுக்குச் செய்யவில்லை என்று கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் ரணிலை ஆட்சியில் இருத்தினர். அவர் ஆட்சிக்கு வந்த பின்னரும் மேற்குறிப்பிட்ட விடங்களில் ஆக்கபூர்வமான தீர்வு எதனையும் செய்யவில்லை என்பதால் மாநாட்டில் மேலே கூறப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதே நேரம் இவற்றுக்கான தீர்வை மூன்று திங்களுக்குள் நிறைவேற்றத் தவறினால் அறவழியில் மக்களைத் திரட்டிப் போராடுவதென்றும் மாநாடு தீர்மானித்துள்ளது. இத்துடன் போராட்டத்தை முன் எடுப்பதற்காக கட்டமைப்போடு ஒருமைப்பாட்டுடன் முன்னெடுக்கத் தேசிய சபை ஒன்றையும் உருவாக்குவது என்று மாநாடு தீர்மானம் நிறைவேற்றி இருந்தது.

இவற்றை நோக்கும் பொழுது ரணிலின் அரசு தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்று த.தே.கூ ஏற்றுக்கொள்வது தெரிகிறது. சுருங்கக் கூறினால் ஆட்சியில் நம்பிக்கை இழந்தபடியால் தான் காலக்கெடு விதித்துப் போராட்டத்தை முன் எடுக்க முடிவு செய்தது த.தே.கூ. ஆனால் இப்பொழுது ஜே.வி.பி எனப்படும் மக்கள் விடுதலை முன்னணி அரசு மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்துள்ள நிலையில் ஆட்சியின் மீது நம்பிக்கை இல்லாத தமிழரசுக்கட்சி தடுமாற்றத்தை வெளியில் காட்டுகிறது. நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரிப்பதா விடுவதா என்று ஆலோசனை செய்யப்படும் என்று கூறியுள்ளது. இது ஒரு வேடிக்கையான கூற்றாகும். ஆட்சிக்கு எதிராகப் போராட்டத்தை அறிவித்த கட்சிக்கு ஆட்சியில் நம்பிக்கை இருக்கிறது என்றுகூற முடியுமா? முடியாது. ஆனால் அவசர அவசரமாக போராட்டம் அது இது அறிவித்து மக்களை ஏமாற்ற எடுத்த முயற்சிகளுக்கு ஜே.வி.பி யின் நம்பிக்கை இல்லாத் தீர்மான விவாதம் குழப்பத்தையே கொடுத்துள்ளது. இதனால் தான் அவசர அவசரமாக ரணிலைச் சந்தித்துள்ளனர் சம்பந்தன் தரப்பினர்.ரணிலின் அரசைக் காப்பாற்றுவதாக முடிவெடுத்துள்ளனர். இதை ரணிலுக்கு உறுதிப்படுத்தி விட்டு ரணில் தோற்றால் மகிந்த வந்துவிடுவார் என்ற பழைய பல்லவியையும் சிறிதரன் மூலம் தெரிவித்துள்ளனர்..

இதேபோன்று ஆட்சிகளின் அமைச்சர்களின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானங்கள் முன்பு செல்வா காலத்தில் கொண்டுவரப்பட்ட காலங்களில் எவ்வாறு அவற்றைச் சந்தித்தனர் என்பதை இங்கே குறிப்பிடுவது பொருந்தும் என்பதால் அவற்றில் ஒன்றிரண்டு இங்கே பதிவிடப் படுகிறது.அன்று தமிழரசுக்கட்சி எவ்வாறு நடந்தது இப்போது அதன் நிலை என்ன? என்பதனை இதன் மூலாம் தெளிவாக்க லாம் .




**நாதன்**

1956 இல் சிங்களம் மட்டும் நாட்டின் உத்தியோக மொழி என்று நிறைவேற்றப்பட்ட பின், திருகோணமலையில் அதே ஆண்டு தமிழரசுக்கட்சியின் மாநில மாநாடு நடாத்தப்பட்டது. இம்மாநாடு ஒரு வரலாற்றுப் பெருமையுடைய மாநாடாகும். தமிழ் மண்ணின் ஐந்து பெரும் நகர்களில் இருந்து தலைவர்களும் மக்களும் நடையாக திருமலை நோக்கி மாநாட்டிற்குச் சென்றனர். இதை வரலாறு 'திருமை யாத்திரை' என்று பதிவு செய்துள்ளது. யாழ்ப்பாணம், மன்னார் வவுனியா மட்டக்களப்பு, பருத்தித்துறை ஆகிய இடங்களில் இருந்து அப் பாத யாத்திரை தொடங்கி மாநாட்டுத் திடலை அடைந்தன. பல்லாயிரக்கணக்கான மக்கள் இதில் கலந்துகொண்டு வரலாற்றுப்பதிவு செய்தனர். இம்மாநாட்டில் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க ஓராண்டு காலக் கெடு ஆட்சிக்குக் கொடுக்கப்பட்டது. ஓராண்டுக்குள் தீர்வு இல்லையென்றால் அறவழியில் போர் என்று எச்சரிக்கையும் கொடுக்கப்பட்டது. திருமலை யாத்திரையையும், மக்களின் ஆதரவையும் கண்ட பண்டாரநாயக்கா அரசு தமிழரசுக்கட்சியுடன் சுமுகமாகப் பேசத் தொடங்கியது. இதே நேரம் தமிழரசுக்கட்சி தொண்டர்களைத் திரட்டி அவர்களுக்குச் சீருடைகளும் கொடுத்து அறவழி போராட்டத்துக்கான பயிற்சிகளையும் அளித்து வந்தது. கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கம், இரும்பு மனிதர் நாகநாதன் போன்றோர் இப்பயிற்சிகளையும் போராட்ட வழிகளையும் விளக்கித் தொண்டர்களைத் தயார்ப்படுத்தினர். அரசுடனான பேச்சு ஒருபுறம் போராட்ட முனைப்பு மறுபுறம் என்றுதான் செயற்பாடுகள் இருந்தன. இவ்வாறுதான் மாநாட்டுத் தீர்மானங்கள் இருக்க முடியும்.ஏனெனில் கட்சியின் மிக உயர்ந்த முடிவுகளை மாநாடே எடுக்கும். அதனையே கட்சித் தலைமை முன் எடுத்துச் செல்லவேண்டும்.

இம்மாநாட்டுக் காலக்கெடுவை அடுத்து தமிழரசுக்கட்சிக்கும் ஆட்சியாளருக்கும் தொடர்ந்து பேச்சுகள் நடைபெற்று பண்டாரநாயக் காவுக்கும், தந்தை செல்வாவுக்கும் ஒப்பந்தம் கைஎழுத்தாயிற்று. இது தான் 1957 இல் ஏற்பட்ட பண்டா செல்வா ஒப்பந்தம் என்று இன்றுவரை பேசப்படும் ஒப்பந்தமாகும். ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் கட்சி அதை அப்படியே ஏற்கமுடியாது. ஏனெனில் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை அடுத்து ஏற்பட்ட ஒப்பந்தத்தை கட்சியின் மாநாடே ஏற்கவேண்டும். அதுதான் நீதியுமாகும். எனவே 1957 இல் நடந்த மட்டக்களப்பு மாநாட்டில் ஒப்பந்தம் வைக்கப்பட்டு அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது தான் கட்சியின் மக்களாட்சித் தத்துவ. மாகும். இதனை இங்கே குறிப்பிடுவதன் நோக்கம் தற்பொழுது மாநாட்டில் தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு ரணிலுடன் யார் அழைத்து? யார் பேசப் போனார்களோ? என்று தெரியாமல் பேசிவிட்டு ஆட்சியை நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திலிருந்து காப்பாற்ற முனைப்புகள் எடுக்கும் நிலையில் செல்வா காலத்துத் தமிழரசுக்கட்சியின் சனநாயக அணுகு முறையை மக்கள் அறிந்திருப்பது அவசிய மாகும் என்பதனாலாகும்

இதே காலப் பகுதியில் கொண்டுவரப்பட்ட ந ம்பிகை இல்லாத் தீர்மானம் ஒன்று பற்றி இங்கு குறிப்பிட வேண்டியதும் அவசியமாகும். பண்டாரநாயகாவின் அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்தவர் இஸ்டான்லி டி சொய்சா என்பவராகும். தந்தை செல்வாவின் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தவர். பண்டா செல்வா ஒப்பந்தம் ஏற்பட அயராது உழைத்தவர். இருபகு தியினனையும் பேச்சு மேசைக்குக் கொண்டுவர மிகுந்த முயற்சி எடுத்தவர் அவர். அவர் மீது எதிர்க்கட்சியினர் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தனர். தமிழரசுக்கட்சித்தலைவரின் மேல் பற்றுக்கொண்டவர்.ஒப்பந்தம் ஏற்படப் பாடுபட்டவர் என்பதால் அவர் மேலே கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை தமிழரசுக்கட்சி எதிர்க்கும் என்று ஏடுகள் எழுதின சில ஏடுகள் குழப்பமான செய்திகளை வெளியிட்டன. ஆனால் செல்வா உறுதியான நிலைப்பாட்டைத் தெரிவித்தார் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் அரசியல் ரீதியானது அது நட்புக்கு அப்பாற்பட்டது எனவே தமிழரசுக்கட்சி அரசியல் நோக்கில் அவர் மீதான நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரிக்கும் என்று கூறியதுடன் அனைவரும் வாக்களிப்பில் பங்குபற்றுமாறு பணிப்பும் கொடுக்கப்பட்டது. இதுதான் அன்றைய தமிழரசுக்கட்சி. இதே போல் டாக்டர் என் எம் பெரேரா நிதி அமைச்சராக இருந்தபொழுதும் ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அப்பொழுது என் எம் பெரேரா சிறிமாவோ அமைச்சரவையில் நிதி அமைச்சர்.ஆவர் அவர் மீது கிரிதர ஆலை பற்றிய நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. சமசமாசக் கட்சித் தலைவர் தமிழ்மக்கள் மேல் அக்கறை கொண்டவர் மொழிக்குச் சமகாலத்து அந்தஸ்த்து என்றவர் அவர் மீது கொண்டு வரப்படும் நம்பிக்கைஇல்லாத் தீர்மானத்தைத் தமிழரசுக்கட்சி ஆதரிப்பதா என்றெல்லாம் குரல்கள் எழுப்பபட்டன. ஆனால் தமிழரசுக்கட்சி நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்தே வாக்களித்தது.இவ்வ்று பல நம்பிக்கை இல்லாத்தீமானங்களை எதிர்கொண்டு நடந்து.வந்தது தான் அன்றைய தமிழரசுக்கட்சி..ஆனால் போராட்ட அறிவித்தல் கொடுக்கிறது காலக்கெடு விதிக்கிறது ஆனால் அலரிமாளிகையில் பிரதமை சந்திக்கிறது. யார் அழைத்தார்கள் எதற்க்காக அழைத்தார்கள் மாநாட்டுத் தீர்மனகளின் எதிரொலியா அச் சந்திப்பு என்று எதுவுமே தெரியாத நிலையில் மாநாட்டுத் தீர்மானங்ககளைப் புறந்தள்ளிவிட்டு தமிழரசுக்கட்சி ரணிலுடன் எதோ பேசியது என்று ஏடுகளுக்குச் செய்திகளைக் கசிய விட்டுள்ளனர்.

உண்மையில் போராட்டம் காலக்கெடு என்று சொல்லி மக்களை ஏமாற்ற எடுத்த பொழுது இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தமிழரசுக்கட்சியின் உண்மை முகத்தை வெளிக்கொண்டு வந்துள்ளது

மாநாடு என்பதும் தீர்மானங்கள் என்பதும் ஆட்சியின் மீது குற்றங்களைச் சுமத்திவிட்டு அதே ஆட்சியின் மீதான நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்து ஆட்சியைக் காப்பாற்றுவதும் தமிழினத்தை முற்றுமுழுவதுமாக ஏமாற்றும் அரசியலே ஆகும்.

**இக்கட்டுரை அரசுக்கு போகும் பேவை நாடாளுமன்றத்தில் அரசு மீதான நம்பிக்கையில்லா பிரேரணை தமிழ் தேசியக்கூட்டமைப்பின் ஆதரவுடன் தோற்கடிக்கப்பட்டதாக செய்திகள் வெளிவந்துள்ளது. இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் ரணில் அரசினதும் அரசியல் எதிர்காலம் குறித்தும், மக்களிடையே பல்வேறு கருத்தியல் சர்ச்சைகளை உருவாக்கும் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.**

# தமிழ்த்தேசியமும் சமூக மாற்றமும்

பகுதி II

சி.அ.யோதிலிங்கம்

**4. 1968–2009 வரையிலான காலகட்டம்**

1968 ஆம் ஆண்டு தமிழரசுக்கட்சியின் இணக்க அரசியலிலும் சமஸ்டிக் கோரிக்கையிலும் அதிருப்தி அடைந்த தமிழ் இளைஞர்கள் ஈழத்தமிழர் விடுதலை இயக்கம் என்ற அமைப்பை உருவாக்கினர். சமஸ்டி தமிழ் மக்களுக்கு கிடைக்கப்போவதில்லை. தனி நாடே ஒரு தீர்வு எனத் தீர்மானித்து அதனை முன்னெடுக்கத் தொடங்கினர். இவ் அமைப்பின் தோற்றத்துடன் தமிழ் அரசியலின் நான்காவது கட்டமும் ஆரம்பித்து விட்டது எனலாம். இக்கட்டம் அதிகாரத்தைக் கைப்பற்றுகின்ற கட்டமாக இருந்தமையினால் தமிழ் அரசியல் மெல்ல மெல்ல தமிழ் ஆயுதப் போராட்ட அரசியலுக்கு மாறியது. 1970ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழ் மாணவர் பேரவை இவ் ஆயுதப் போராட்டத்தை தொடக்கி வைத்தது. 1973 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழ் இளைஞர் பேரவையும் அரசியல் ரீதியாக தனிநாட்டு கருத்துருவாக்கத்திற்கு உதவியது. தமிழ் இளைஞர்கள் மத்தியிலும் அதனூடாக தமிழ் மக்கள் மத்தியிலும் இக்கருத்துருவாக்கம் வளர்ச்சி பெற்றமையும், 1970 ஆம் ஆண்டு முதலாவது அரசியல் குடியரசு யாப்பு. அரசியல் யாப்பு என்பன சட்டரீதியாக தமிழ் மக்களை ஒதுக்கியமையும் தமிழ் மிதவாத தலைமையையும் தனிநாட்டு தீர்மானத்தை எடுக்க வைத்தது.

1972 ஆம் ஆண்டு மிதவாத கட்சிகள் ஒன்று சேர்ந்து தமிழர் கூட்டணியை உருவாக்கின. 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டின் மூலம் இது தமிழர் விடுதலைக் கூட்டணி என மாற்றம் செய்யப்பட்டது. இம்மாநாட்டில் தனிநாட்டுத் தீர்மானமும் எடுக்கப்பட்டது. 1977 ஆம் ஆண்டு தேர்தலை தமிழ் ஈழத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி பிரச்சாரம் செய்தது. வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் இதற்கான அங்கீகாரத்தையும் வழங்கினர்.

மறுபக்கத்தில் ஆயுதப் போராட்ட இயக்கங்களும் வளர்ச்சி பெற்றன. பல்வேறு இயக்கங்கள் செயற்பட்ட போதும் தமிழீழ விடுதலைப் புலிகள் இதில் முன்னணியில் நின்றனர். 1987 க்கு பின்னர் ஏக இயக்கமாக இவர்களே செயற்பட்டனர்.

இவ் ஆயுதப் போராட்டம் இலங்கை மட்டம், பிராந்திய மட்டம், என்பவற்றைத் தாண்டி சர்வதேச மட்டத்திற்குச் சென்றது. இலங்கைத் தீவில் தமது புவிசார் நலன்களைக் கொண்ட வல்லரசுகள் தனிநாட்டுத் தீர்மானம் தமது புவிசார் நலன்களுக்கு எதிரானது எனக் கருதி ஆயுதப் போராட்டத்தை அழித்தன. 2009 மேயுடன் ஆயுதப் போராட்டமும் முடிவுக்கு வந்தது.

**5. 2009 க்குப் பின்னர்**

2009 ஆம் ஆண்டு மே மாதம் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் அரசியலில் இரு போக்குகள் வளர்ந்தன. ஒன்று இதுவரைகால தமிழ் அரசியலை ஏதோ ஒரு வகையில் தொடர்ந்தும் முன்னெடுப்பது. இரண்டாவது இதுவரை கால அரசியலைக் கைவிட்டு ஒரு இணக்க அரசியலுக்கு செல்வது. இவற்றில் சம்பந்தன் தலைமை இரண்டாவதை தேர்ந்தெடுக்க கஜேந்திரகுமார் முதலாவதைத் தேர்ந்தெடுத்தார். இவ் முதலாவது போக்கு தமிழ் மக்கள் பேரவையின் எழுக தமிழ் நிகழ்வுகளினால் வளர்க்கப்பட்டு 2018 உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தம்மையும் ஒரு தரப்பாக வலுவாக அடையாளப்படுத்தியது.

இரண்டாவது போக்கை பிரதிபலித்த சம்பந்தன் தலைமை சிறீலங்கா அரசாங்கத்துடன் இணக்க அரசியலுக்கு சென்றதும் அல்லாமல் அதன் உச்சமாக எதிர்கட்சித் தலைவர் பதவியையும் பொறுப்பேற்றது. தமிழர் தாயக ஒருமைப்பாட்டைக் குறிக்கும் வட-கிழக்கு இணைப்பையும் தமிழர் இறைமையை வலியுறுத்தும் சமஸ்டி கோரிக்கையையும் கைவிட்டு ஒற்றையாட்சிக்குட்பட்ட தீர்வுக்கு இணங்கியது. அதன் விளைவுதான் புதிய அரசியல் யாப்பிற்கான இடைக்கால அறிக்கையாகும்.

தமிழ் அரசியலின் சுருக்க வரலாறு இதுதான்.

**"தமிழ்த் தேசியம்" என்ற எண்ணக்கருவின் உருவாக்கமும், சமூகமாற்றமும்.**

தேச ஒடுக்கு முறைக்குள்ளாக் கப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டுப் பிரக்ஞையே தேசியம் ஆகும். தமிழ்த் தேசியம் என்பது தமிழ் மக்களின் கூட்டுப் பிரக்ஞை ஆகும். இக் கூட்டுப் பிரக்ஞை கூட்டிருப்பு, கூட்டுரிமை, கூட்டடையாளம் என்பவற்றின் கூட்டுத்தொகுப்பு ஆகும். தேசமாக சிந்திக்கின்ற உணர்வை மக்களுக்கு இக்கூட்டுப்பிரக்ஞையே கொடுக்கிறது.

தேச ஒடுக்கு முறை என்பது தேசத்திற்குப் புறத்தேயிருந்து வரும் ஒடுக்குமுறையாகும். இதனை முகம்கொள்வதற்கு முரண்பாடுகளுக்கு அப்பால் கூட்டாக இணைதல் அவசியமானதாகும். இக் கூட்டிணைதலுக்குத் தடையாக இருக்கின்ற அனைத்து விடயங்களும் அகற்றப்பட வேண்டும் என்பது தேசப் போராட்ட முன் நிபந்தனையாகும். மனிதவுரிமை விவகாரங்களுக்கு அப்பால் தேசப் போராட்டத்தை பொறுத்தவரை இதுவே முக்கியமானதாகும். இந்த இடத்தில்தான் சமூக மாற்ற அரசியல் என்பது முக்கிய இடம்பெறுகிறது. சமூக மாற்ற பண்புகளை உள்ளடக்காத ஒரு தேசியம் குறைத்தேசியமாக இருக்குமே தவிர முழுமைத் தேசியமாக இருக்கமாட்டாது.

தமிழ்த் தேசத்தைப் பொறுத்த வரை அகமுரண்பாடுகளாக பின்வருவன காணப்படுகின்றன.

**1. சாதிய முரண்பாடு**

சாதியம் என்பது பொதுவாகவே மரபான தொழில்களை அடிப்படையாகக் கொண்டதும், பிறப்பினால் ஏற்றத்தாழ்வு கற்பிக்கின்றதும், வேளாளர் தலைமையிலான அதிகாரப்படிநிலையை வலியுறுத்துவதுமான ஒரு சமூக ஒழுங்கமைப்பாகும். மத ரீதியான கருத்துக்கள் சாதியத்திற்கான சித்தாந்த நியாயப்பாட்டை வழங்குகின்றன. பொருளாதார ஏற்றத்தாழ்வு வர்க்க ஒடுக்கு முறையை இலகுவாக்குகின்றன. தமிழ்த் தேசத்தைப் பொறுத்தவரை யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே இச்சாதி முரண்பாடு அதிகமாகவுள்ளது. சாதியால் ஒடுக்கப்பட்ட மக்கள் ஒரே நேரத்தில் பொருளாதார ஒடுக்குமுறைக்கும் சித்தாந்த ஒடுக்கு முறைக்கும் உள்ளாக்கப்பட்டு வந்தனர். பொருளாதார ஒடுக்கு முறை வர்க்க ரீதியாக ஒடுக்க, சித்தாந்த ஒடுக்கு முறை தீண்டாமை என்ற பெயரில் புறக்கணித்தது.

தேசிய விடுதலைப் போராட்டம் காரணமாகவும் சாதிய ஒடுக்கு முறைப் போராட்டங்கள் காரணமாகவும் இலவசக் கல்வி, தாய்மொழிக்கல்வி, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் என்பன காரணமாகவும் இவ் ஒடுக்கு முறைகள்தற்போது மிகவும் தளர்ச்சியடைந்துள்ளன. ஆனாலும் ஒடுக்கு முறைகள் முழுமையாக அற்றுப் போகவில்லை. தமிழ்த் தேசியப் போராட்டம் தனது தொடர் வேலைத்திட்டங்களினூடாகவும் தமிழ்த் தேசியத்தை ஒரு வாழ்வு முறையாக பின்பற்றுவதன் மூலமும் இவ் ஒடுக்கு முறையை முழுமையாக அகற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

**2. பிரதேச முரண்பாடு**

தமிழ் மக்கள் மத்தியில் நீண்ட காலமாக தேச ஐக்கியத்தை சிதைத்து வரும் ஒரு அகக்காரணிப் பிரதேசவாதமாகும். யாழ்மைய வாதமானது இதன் மிகக் குறிப்பான வெளிப்பாடாகும். தமிழர் தாயகத்தில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களைத் தாழ்வாகக் கருதுவதும், அப்பிரதேசத்தினர் மீது ஆதிக்கம் செலுத்துவதும், இதன் வெளிப்பாடாகும். காலனித்துவ ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணப் பிரதேசம் மேல்நிலையாக்க வாய்ப்புக்களைப் பெற்றதும் ஏனையவை பெறாததும் இதனை ஊக்கவித்தது. இதன் எதிர் விளைவாக கடந்த காலத்தில் வன்னியிலும் மட்டக்களப்பிலும் "யாழ் அகற்றும் சங்கம்" என்ற பெயரில் அமைப்புக்கள் உருவாகியிருந்தன. தமிழ் மக்கள் மத்தியில் இருந்த இந்தமுரண்பாட்டை சிங்கள அரசும் அதன் தமிழ் விசுவாசிகளும் அவ்வப்போது பயன்படுத்தி தமிழ் தேசியத்தின் வளர்ச்சியைச் சிதைத்தனர்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் இவ் ஆதிக்கப் போக்கானது யாழ்ப்பாண இராட்சியத்தின் வரலாற்றை மட்டும் பேசிவிட்டு வன்னி இராட்சியம், கிழக்கு இராட்சியம், என்பவற்றின் வரலாறுகளைத் தவிர்த்து விடுவது, புலமைத்துவ மரபுகளை பேசும் போது யாழ், சைவ, வேளாள தமிழரின் பங்களிப்பை மட்டும் உயர்த்துவது.ஏனைய தமிழர்களின் பங்களிப்பைப் புறந்தள்ளுவது,தேச ஒடுக்கு முறையின் விளைவுகள் யாழ் தமிழரின் பிரச்சினையாக குறுக்கி தாயகத்திலும் சர்வதேச அளவிலும் முனைப்பாகக் காட்டுவது, வன்னி மற்றும் கிழக்குத் தமிழரின் அரசியல் பிரதிநிதிகளை தமிழ் கட்சிகளிலுள்ள யாழ் தலைமையே நிர்ணயிப்பது என்பவை மூலம் வெளிப்பட்டது.

இப்பிரதேச முரண்பாடு தமிழ் மக்கள் ஒரு பலமான தேசமாக எழுந்து நின்று தேசிய ஒடுக்கு முறைக்கு எதிராக தீவிர மான போராட்டத்தை நடத்த தடையாக இருக்கின்றது. தமிழ்த் தேசியப் போராட்டம் பொருத்தமான வேலைத்திட்டங்களினூடாக இம்முரண்பாட்டை களைவதற்கு முயற்சிக்க வேண்டும்.

**3. மத முரண்பாடு**

மதமுரண்பாடும் தமிழ் மக்கள் மத்தியில் நிகழும் அக முரண்பாடுகளில் ஒன்றாகும். சைவ மதத்தின் மேலாதிக்கமே இதற்குக் காரணமாகும். சைவ சமய பண்புகளே தமிழ்த் தேசத்தின் பண்புகளாக சித்தரிக்கும் போக்கு வளர்ச்சியடைந்துள்ளது. தமிழ்ப்பிரதேசத்தில் ஒரு பல்கலைக்கழகத்தை அமைத்தல் என்ற விடயம் வந்த போது அது இந்துப் பல்கலைக்கழகமாக இருக்க வேண்டும் என வற்புறுத்தப்பட்டது. தற்போதும் கூட பல்கலைக்கழகத்தின் சின்னமாக இந்து அடையாளமான நந்திக் கொடியே இருக்கின்றது. இந்து அல்லாத ஏனைய மதங்கள் தாம் ஒதுக்கப்படுவதாகவே கருதுகின்றன. தமிழ்த் தேசியப் போராட்டம் இம்முரண்பாட்டையும் கடந்து செல்ல வேண்டும்.

**4. பால் முரண்பாடு**

உலக சமூகங்களின் வரலாற்றில் முதலாவது ஒடுக்கு முறை பெண்கள் மீதான ஒடுக்குமுறையாகும். இவ் ஒடுக்கு முறையானது ஏனைய வர்க்க ஒடுக்கு முறைகளுக்கு முன்பே தோன்றி தொடர்ச்சியாக வந்த பல சமூக அமைப்புக்களிலும் நீடித்து இன்று வரை நிலைத்து நிற்கும் ஒரு தனித்துவமான ஒடுக்குமுறையாகும். இதுவரை காலமும் சமூகத்தில் இடம்பெற்ற புரட்சிகள் ஒடுக்குமுறைகள் பலவற்றிற்கு முடிவு கட்டிய போதும்,புதுப்புது வடிவங்களையும் பெற்று நிலைத்து நிற்கும் தன்மை இவ் ஒடுக்கு முறைக்கு உண்டு. சமூகத்தில் நிலவும் ஏனைய ஒடுக்கு முறை வடிவங்களுக்கு ஏற்ற வகையில் இவ் ஆண் ஆதிக்க ஒடுக்கு முறையானது தன்னை தகவமைத்துக் கொண்டு அவ் ஒடுக்கு முறைகளுடன் இணைந்து தானும் பலம் பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் சமூகத்தில் சட்ட, சமூக, பொருளாதார, பாலியல் மற்றும் சித்தாந்த ரீதியாக மட்டுமல்ல தமிழ் சமூகத்தின் பிற்போக்கான கலாசார அம்சங்களினாலும் பெண்கள் ஒடுக்கப்படுகின்றனர். ஆண் ஆதிக்க முறைமையானது நடைமுறையிலுள்ள சுறண்டல் அமைப்புக்களுடனும் ஏனைய அமைப்புக்களுடனும் நெருக்கமாக இணைந்து செயற்படுகின்றது. தமிழ் தேசியப் போராட்டம் இப்பெண் ஒடுக்கு முறைக்கு எதிராகவும் செயற்பட்டு வெற்றிகாணல் வேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் நிகழும் இவ் அக ஒடுக்கு முறைகள் மனித உரிமை மறுப்பு என்பதற்கு அப்பால் தமிழ் மக்கள் ஒரு தேசமாக ஒருங்கிணைவதையும் தடுக்கின்ற ஒன்றாகும். எனவே இவ் ஒடுக்கு முறைகளை அகற்றாமல் தமிழ் மக்கள் ஒரு தேசமாக எழுச்சி பெற முடியாது. தமிழ் தேசத்தின் எதிரிகள் இவ் அக ஒடுக்கு முறைகள் தரும் இடைவெளிக்குள் நுழைந்து தமிழ் தேசியத்தின் ஆற்றலை சிதைக்கவே முற்படுவர்.

**தேச ஒடுக்கு முறை என்பது தேசத்திற்குப் புறத்தேயிருந்துவரும் ஒடுக்குமுறையாகும். இதனை முகம்கொள்வதற்கு முரண்பாடுகளுக்கு அப்பால் கூட்டாக இணைதல் அவசியமானதாகும். இக் கூட்டிணைதலுக்குத் தடையாக இருக்கின்ற அனைத்து விடயங்களும் அகற்றப்பட வேண்டும் என்பது தேசப் போராட்ட முன் நிபந்தனையாகும். மனிதவுரிமை விவகாரங்களுக்கு அப்பால் தேசப் போராட்டத்தை பொறுத்தவரை இதுவே முக்கியமானதாகும். இந்த இடத்தில்தான் சமூக மாற்ற அரசியல் என்பது முக்கிய இடம்பெறுகிறது. சமூக மாற்ற பண்புகளை உள்ளடக்காத ஒரு தேசியம் குறைத்தேசியமாக இருக்குமே தவிர முழுமைத் தேசியமாக இருக்கமாட்டாது.**



# மக்களாட்சியின் மாண்பைக் குழி தோண்டிப் புதைத்த இந்திய நாடாளுமன்றத் தேர்தல்

## சிலம்பு



உலகத்திலேயே மிகப் பெரிய மக்களாட்சி நாடு, மிகப்பெரிய ஜனநாயகத் தேர்தல் என்று சொல்லப்படும் இந்திய நாடாளுமன்றத் தேர்தல் ஏப்ரல் 11 முதல் மே 19வரை நடந்து மே 23 இல் வாக்குகள் எண்ணி முடிவுகள் அறிவிக்கப் பட்டன. இத்தேர்தலில் பாஜக தனிப் பெரும் பான்மையுடன் ஆட்சியைப் பிடித்துக்கொண் டது. பாஜகக் கூட்டணி பெரு வெற்றியை அடைந்தது. பழம் பெரும் கட்சியான காங்கிரசு சென்றமுறையைப் போல் எதிர்க்கட்சித் தகுதி இல்லாதா எதிர் நிலைக்குத் தள்ளப்பட்டது.. பிரதமராக மோடி மீண்டும் பதவி ஏற்றுக்கொண்டார்.

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்பட்டு இரண்டு திங்கள்கள் நெருங்கிவிட்டது. ஆனால் தேர்தல் ஆணையகம் இதுவரை மக்கள் அளித்த வாக்கு விவரங்களை, விமுக் காடுகளை வெளியிடாமல் மூடி வைத்து வருகிறது. இதுவரை காலமும் இவ்வாறு தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன் உத்தியோகபூர்வமாக வாக்குவிவரங்களை அறிவித்த தேர்தல் ஆணையகம் இம்முறை அவற்றை வெளியிடாது இருப்பது பலத்த சந்தேகங்களைத் தோற்றுவித்திருக்கிறது.

தேர்தலுக்கு முன்னரே தேர்தல் ஆணை யகம் ஆளும் தரப்புக்குச் சார்பாகவே தேர்தல் திகதிகளை ஒழுங்கமைத்தது. ஆளும் கட்சி சார்பாகவே நடந்து கொள்கி றது என்று பெரிய குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டிருந்தன. இதனை உறுதிப் படுத்தும் வகையிலேயே தேர்தல் வாக்க ளிப்பு விவரங்களைத் தேர்தல் ஆணை யகம் வெளியிடாது வைத்திருப்பதும் உறுதி செய்கிறது. தேர்தல் ஆணையகம் ஏன் அவற்றை வெளியிடாது மூடி மறைக் கிறது என்பதற்கு நடுநிலையாளர்கள் நியாயமான காரணங்களை முன்வைத் துள்ளனர். அவற்றை நோக்கும்பொழுது நடந்து முடிந்த தேர்தல் ஒரு ஜனநாயகத் தேர்தலாக இல்லாமல், தேர்தல் ஆணை யகம், மின்னணு வாக்கு எந்திரம் என்பன ஆளும் தரப்புக்கு சாதகமாகப் பணியாற்றின, பயன்படுத்தப்பட்டன என்ற ஐயம் ஏற்பட வழிவகுக்கிறது..

இங்கே கணிக்கப்பட வேண்டியது என்னவென்றால், மின்னணு வாக்கு எந்திரத்தின் நம்பகத் தன்மை எப்பொழு தும் ஐயத்தையே ஏற்படுத்தியுள்ளது. வளர்ந்த நாடுகளான அமெரிக்கா, யப்பான், இங்கிலாந்து, பிரான்சு போன்ற நாடுகளில் வாக்கு எந்திரங்கள் பாவிக்கப்படுவதில்லை. இவ்வியந்திரங்களில் பல குழறுபடிகளைச் செய்யலாம் என்பது உறுதிப்படுத்துள்ளது. அவற்றை எல்லாம் புறம் தள்ளியே தேர்தல் ஆணையகம் இவ்வியந்திரங் களைப் பயன்படுத்துகிறது. தேர்தல் தொடங்குவதற்கு முன்னரே இருபது இலட்சம் வாக்களிப்பு எந்திரங்கள் காணாமல் போய்விட்டதாகத் தேர்தல் ஆணையகம் ஒத்துக்கொண்டுள்ளது. அந்தத் தொலைந்து போனதாகக் கூறப்பட்ட இயந்திரங்கள் எங்கே போயின? அவை தேடப்பட்டனவா? ஏன் அவற்றைக் கண்டுபிடிக்கவில்லை? என்பதற்கான பதிலை இதுவரை தேர்தல் ஆணையகம் சொல்லவில்லை. எனவே 'தொலைந்து போனதாகக் கூறப்பட்ட வாக்களிப்பு எந்தி ரங்கள் இத்தேர்தலில் பெரும் பங்களிப்பை ஆளும்தரப்புக்குச் சார்பாக ஏற்படுத்தியிருக் கலாம்" என்று கூறுகிறார்கள். இதை இலேசாகத் தட்டி மறுக்க முடியாது.

அடுத்துக் கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில், தேர்தல் முடிவு கள் அறிவிக்கப்பட்ட பொழுது கொடுக்கப் பட்ட புள்ளிவிவரங்கள் ஆகும். அப்புள்ளி விவரங்கள் மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தன. முன்னூற்றி எட்டு நாடாளுமன்றத் தொகுதிகளில் மக்கள் அளித்த வாக்குகளிலும் பார்க்க எண்ணப் பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்துள்ளன. அதுவும் சொற்ப வாக்குகள் அதிகமாக இருக்க வில்லை. ஒரு தொகுதியில் முப்பதாயிரம் வாக்குகள் அதிகமாக இருந்துள்ளது. இதர தொகுதிகளில் ஏழாயிரம் எண்ணாயிரம் பத்தாயிரம் என்று எண்ணப்பட்ட வாக்குகளின் தொகை வாக்களித்த வாக்குகளின் எண்ணிக்கையிலும் அதிகம் என்று உள்ளது. இதனாலேயே வாக்களிப்பு விவரங்களைக் காட்டமுடியாமல் தேர்தல் ஆணையகம் தவிர்த்து வருகிறது என்று பல நடுநிலை ஏடுகள் எழுதி வருகின் றன. கட்சிசார்பானவர்களும் கூறுகின்றனர். சில தொகுதிகளில் ஆயிரத்து ஐநூறு, இரண்டாயிரம் என்று தான் பெரும்பான்மை பெற்று உறுப்பினர்கள் தெரிவாகி உள்ளனர் ஆனால் அத்தொகுதிகளில் வாக்களித்த வர்களிலும் பார்க்க, ஏழாயிரம் எண்ணாயிரம் பத்தாயிரம் என்று அதிக வாக்குகள் எண்ணப்பட்டுள்ளன இந்த அதிசயம் தான் உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டின் தேர்தலின் சிறப்பாகும்.

இதுதான் ஒரு பக்கம் என்றால் ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குச்சாவ டிகளில் சில கட்சிகளுக்கு ஒரு வாக்கும் விழவில்லை என்பதும் வேடிக்கையாகவே இருக்கிறது. வாக்குச் சாவடி முகவர்கள் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்ட வாக்குகள் அனைத்தும் எங்கே போயின என்று தெரியாமல் இருக்கிறது. தாம்பரம் நாடாளுமன்றத் தேர்தல் தொகுதியில் ஒருகட்சி வேட்பாளரின் வீட்டில் அவரது தாய் தந்தை பிள்ளைகள் எனப் பதினைந்துக்கும் மேற்பட்டோர் உள்ளனர். ஆனால் அவருக்கு அவ்வாக்குச் சாவடியில் மூன்று வாக்குகள் மட்டுமே பதிவாகி இருக்கிறது என்றால் வாக்கு எந்திரம் எப்படி வேலை செய்கிறது என்று புரிகிறதல்லவா.

இன்னொரு வேடிக்கை என்னவென்றால் வாக்களித்தவர்களின் வாக்கு யாருக்கு என்று வாக்காளருக்கு ஓர் ஒப்புகை சீட்டு வழங்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அதைத் தேர்தல் ஆணையகம் முற்றாக ஏற்றுக்கொள்ள மறுத்துச் சில வாக்குச் சாவடிகளில் மட்டும் அதுவும் ஆணைய கம் விரும்பும் சாவடிகளில் மட்டும் பின்பற்றுவதாக அறிவித்திருந்தது. ஆனால் அதுவும் பின்னர் ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்படவில்லை. ஒப்புகைச் சீட்டுக் கொடுத்ததையும் விழுந்த வாக்குகளையும் ஒப்பிட்டுச் சரிபார்க்க வேண்டிய தேர்தல் ஆணையகம் அப்படி எல்லாம் பார்த்தால் தேர்தல் முடிவுகளை அறிவிக்கப் பல மணி நேரம் தாமதமாகலாம் என்பதால் அதையும் புறந்தள்ளிவிட்டு அனைத்துக் காரியங்களையும் கச்சிதமாக முடித்து விட்டது. முடிவுகள் அறிவிக்கக் காலதாமதம் ஆகினால் என்ன வந்து விடப்போகிறது ஏப்ரலில் தொடங்கி மே 23 வரை காத்திருந்தவர்களுக்கு சில மணி நேரம் தாமதமாவதால் குடியா முழுகிவிடும் என்று ஒருவர் கேட்டிருந்தார். அவர் இத்தனைக்கும் வாக்குச் சீட்டு முறையில் தாங்கள் வாக்குகளை எவ்வாறு எண்ணி முடிவுகளை அறிவித்தோம் அப்படியிருக் கையில் எந்திரத்தை ஒப்பு நோக்கிச் சரி பார்ப்பதால் என்ன தாமதம் வந்து விடும். உண்மையில் ஆணையகம் செய்த குளறுபடிகள் வெளியில் தெரிந்து விடும் என்பதால் தான் அதை அவர்கள் புறம் தள்ளினார்கள் என்று தெரிவித்தார்.


இது மட்டுமல்ல தமிழ் நாட்டில் அரச ஊழியர்கள் ஆசிரியர்கள் தேர்தல் பணிக்காகச் செல்வதால் அஞ்சல் முறையில் வாக்களிக்க வாக்குச் சீட்டுகள் வழங்கப்படும். ஆனால் அரைவாசி ஊழியர்களுக்கு அதாவது ஐம்பது விழுக்காடு அரச ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு வாக்குச் சீட்டுகள் வழங்கப்படாமல் அவர்களது வாக்களிக்கும் உரிமைகள் பறிக்கப்பட்டன. சில தொகுதிகளில் சிறுபான்மை மக்களின் பெயர்கள் ஏராளமாக வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டும் இருந்தது. கன்னியாகுமரியில் இவ்வாறு முப்பதாயிரத்துக்கும் அதிகமானவர்களின் வாக்குகள் நீக்கப்பட்டிருந்தன. கடலோர மாவட்டங்களில் மீனவர்களின் வாக்குகள் ஆயிரக் கணக்கில் நீக்கப்பட்டிருந்தன. இவை யாவும் திட்டமிட்டே செய்யப்பட்டிருந்தது கண்கூடு. அது மட்டுமா ஒரு வீட்டில் கணவனுக்கு ஒரு வாக்குச் சாவடி மனைவிக்கு வெகு தூரத்தில் ஒரு வாக்குச் சாவடி என்றும் தொல்லைகள் கொடுத்தது தேர்தல் ஆணையகம் இது தான் இந்தியா முழுமையும் நடைபெற்ற தில்லு முள்ளுகளாகும்.

பொறுப்புள்ள உத்தியோகத்தர்கள் சிலர் வாக்குப்பெட்டிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த மையங்களுக்குச் சென்று வாக்களிப்பு விவரங்கள் அடங்கிய பதிவேடுகளையும் வேறு பதிவுகளையும் எடுத்துப் பிரதி செய்துள்ளார்கள். சட்ட விரோதமாக அங்கு பல மணித்தியாலங்கள் நின்று என்ன செய்தார்கள்? அவ்வாறு அவர்கள் ஏன் நின்றார்கள்? பிரதிகள் எடுத்தார்கள் என்று இதுவரை ஆணையகம் பதிலே கூறாது மௌனம் காக்கிறது.

இது புறம் இருக்க வருமான வரித்துறையினர் அமுலாக்கத் துறையினர் எனப் பல துறையினரும் எதிர்க்கட்சியின் தன்மையானவர்களிடம் ஆய்வு சோதனை என்று கெடுபிடிகளைத் தேர்தல் அறிவித்த பின்னர் மேற்கொண்டனர். இதனால் அவர்கள் பரப்புரைகளுக்குச் செல்ல முடியாதவாறு தடுக்கப்பட்டனர். அத்துடன் அவர்களிடமிருந்து அது கைப்பற்றப்பட்டது இது கைப்பற்றப்பட்டது என்று பிரச்சாரம் வேறு நடந்தது. ஆக எதிர்க்கட்சியினர் தான் சொத்துச் சேர்த்தவர்கள், கள்ளப் பணம் வைத்திருப்பவர்கள் என்று காட்டினார்கள். ஆளும் கட்சியினர் அனைவரும் நல்லவர்களாதலால் அவர்கள் மீது சோதனையோ கெடுபிடிகளோ நடைபெறவில்லை. தேர்தல் முடிந்து விட்டது. சோதனை செய்யப்பட்டவர்கள் மீது நடவடிக்கை ஏதாவது உண்டா என்றால் இல்லை என்பதே இங்கு பதிலாக உள்ளது. இப்பொழுது அவ்வாறான சோதனை களைக் காணவில்லையே

மக்கள் கொண்டு செல்லும் பணத்தைப் பிடிக்கும் பறக்கும் படையினர் வெட்ட வெளிச்சமாகப் பணம்கொடுக்கும் வேட்பாளர்களைத் துளியும் கண்டுகொள்வதில்லை மாறாகக் காவற்றுறையினரும் பறக்கும் படையினரும் அவர்களுக்குப் பாதுகாப்பாகவே இருந்துள்ளனர் என்று குற்றச்சாட்டுகள் நிறையவே உள்ளன.

இவ்வாறுதான் மிக மிக மோசமான முறையில் உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டின் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளது. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று கூறும் நிலையில் ஆணையகத்தின் தீர்ப்பே மக்களின் தீர்ப்பாகும் என்று தெரிவித்துள்ளது அந்தத் தேர்தல்.. மொத்தத்தில் ஜனநாயகத்தின் ஆணி வேரையே இத்தேர்தல் ஆட்டி விட்டது என்றே கூறலாம்.



# வை.கோ கைது விவகாரம்... தமிழுணர்வாளர்கள் கொதிப்பு!

தேசத் துரோக வழக்கில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ குற்றவாளி எனத் தீர்ப்பளித்த சென்னை சிறப்பு நீதிமன்றம், ஓராண்டு சிறை தண்டனையும், ரூ.10,000 அபராதமும் விதித்து தீர்ப்பளித்துள்ளது. 2009ஆம் ஆண்டு நடைபெற்ற "நான் குற்றம்சாட்டுகிறேன்" என்ற புத்தக வெளியீட்டு விழாவில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கலந்துகொண்டு உரையாற்றிய போது, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும், மத்திய அரசுக்கும் இந்திய இறையாண்மைக்கும் எதிராகவும் இருந்ததாகக் கூறி ஆயிரம் விளக்கு காவல் துறையினரால் வைகோ மீது தேச துரோக வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கில், 2017ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் தேதி கைது செய்யப்பட்டு புழல் சிறைக்குச் சென்ற வைகோ கடந்த மே 25ஆம் தேதி ஜாமீனில் வெளியே வந்தார். இந்த வழக்கின் விசாரணை கடந்தாண்டு சென்னை சிறப்பு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டு, விசாரணை முடிவடைந்த நிலையில் கடந்த ஜூலை 5 தீர்ப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கியது நீதிபதி சாந்தி அமர்வு. அதில், வைகோ மீதான குற்றச்சாட்டு நிரூபணம் ஆவதாக கூறி, அவரை குற்றவாளி எனத் தீர்ப்பளித்த நீதிமன்றம், அவருக்கு ஓராண்டு சிறையும் 10 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தார். ஏற்கனவே அவர் சிறையிலிருந்த 52 நாட்கள் இந்த ஓராண்டில் கழித்துக்கொள்ளப்படும் என்றும் நீதிபதி குறிப்பிட்டார்.

தீர்ப்பைத் தொடர்ந்து, அபராத பணத்தைச் செலுத்திய வைகோ, மேல்முறையீட்டுக்குச் செல்ல இருப்பதால், தீர்ப்பை நிறுத்தி வைக்குமாறு சிறப்பு நீதிமன்றத்தில் அவசர மனு அளித்துள்ளார். இதனை விசாரித்த நீதிபதி, அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ஒரு மாத காலத்திற்கு நிறுத்திவைத்தார். அதோடு வைகோ சார்பில் ஜாமீன் மனுவும் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த சிறப்பு நீதிமன்றம், ஜாமீன் வழங்கி உத்தரவிட்டுள்ளது.

தீர்ப்பில் உள்ள வாசகத்தில் பிழை உள்ளது, எனவே தனக்கு அதிகபட்ச தண்டனையை வழங்க வேண்டும் என நீதிபதியிடம் வைகோ கோரிக்கை வைத்தார். குறைந்தபட்ச தண்டனை வழங்க வேண்டும் என நான் ஒரு போதும் கோரவில்லை என்றார். வைகோவின் வாதத்தை தொடர்ந்து தீர்ப்பு நிறுத்தி வைக்கப்பட்டது. வைகோவின் கோரிக்கையை ஏற்று தண்டனையை நிறுத்திவைத்தது சென்னை சிறப்பு நீதிமன்றம்.

எம்.பி., எம்எல்ஏ-க்கள் மீதான வழக்கை விசாரிக்கும் சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் இருந்து வெளியே வந்தபின் வைகோ பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- இன்று எனக்கு மகிழ்ச்சியான நாள். ஈழத் தமிழர் படுகொலைக்கு இந்திய அரசு காரணம் என நான் பேசினேன். நான் பேசியதை அப்போது பிரதமராக இருந்த மன்மோகன் சிங்கிடம் நேரில் சொன்னேன். நான் பேசியது தேசதுரோகம் அல்ல. நீதிபதி வழங்கிய தீர்ப்பை வாங்கி பார்த்தோம், அதில் குறைந்தபட்ச தண்டனை கேட்டதாக இருந்தது. நான் என் கருத்தை தொடர்ந்து விதைப்பேன், தொடர்ந்து விடுதலைப் புலிகளை ஆதரித்து பேசுவேன். எனக்கு தலையில் இடி விழுந்தது போல் இருந்தது, நான் அதிகபட்ச தண்டனை தான் கேட்டேன்.

ஆயுள் தண்டனை என்றால் கூட மகிழ்ச்சியோடு ஏற்பேன். விடுதலை புலிகளை ஆதரித்து பேசியதற்காக 19 மாதம் சிறையில் இருந்தேன். நாடாளுமன்றத்தில் என்குரல் ஒலிக்காது என்றவர்களுக்கு எதுவும் நான் கூற விரும்பவில்லை இவ்வாறு அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளை ஆதரித்து பேசுவது குற்றமல்ல என்கிறது உச்சநீதிமன்ற தீர்ப்பு. இந்த தீர்ப்பால் மாநிலங்களவை தேர்தலில் வைகோ போட்டியிடுவதில் சிக்கல் ஏற்படும் என்று கருதப்பட்ட நிலையில், ஓராண்டு மட்டுமே தண்டனை என்பதால் அவர் எம்பி ஆவதில் சிக்கல் இல்லை என்றும், 2 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றால் மட்டுமே தேர்தலில் நிற்க தடை என்றும் சட்ட நிபுணர்கள் கூறுகின்றனர்.

மதுரை திருமங்கலத்தில் 2002-ம் ஆண்டு ஜூன் 29-ல் மதிமுக பொதுக் கூட்டம் நடந்தது. இதில், கலந்து கொண்ட கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ, நாடாளுமன்றத்தில் விடுதலைப்புலிகளின் மீதான நிலைப்பாடு குறித்து சுப்பிரமணியன் சுவாமியின் கேள்விக்கு பதில் அளித்து பேசியது குறித்து விளக்கினார்.

அப்போது, 'விடுதலைப் புலிகளை நேற்றும் ஆதரித்தேன், இன்றும் ஆதரிக்கிறேன், நாளையும் ஆதரிப்பேன்' என்றார்.

கூட்டம் முடிந்ததும், அமெரிக்காவில் இருக்கும் தன் மகளை பார்க்கச் சென்றார் வைகோ. அந்தநேரத்தில், தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாக பேசியதாக வைகோ, ஈரோடு கணேசமூர்த்தி, பூமிநாதன் உள்ளிட்ட 9 பேர் மீது 'பொடா' சட்டத்தின்கீழ் க்யூ பிரிவு பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

2002 ஜூலை 11-ம் தேதி அமெரிக்காவில் இருந்து திரும்பிய வைகோவை, சென்னை விமான நிலையத்தில் வைத்தே பொலிஸார் கைது செய்தனர். அவரை திருமங்கலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, பின்னர் வேலூர் மத்திய சிறையில் அடைத்தனர். இந்த வழக்கு விசாரணை பூந்தமல்லி பொடா சிறப்பு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. வைகோ உள்ளிட்ட 9 பேர் மீது 2002 டிசம்பரில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. திமுக தலைவர் கருணாநிதி 2 முறை வேலூர் சிறைக்குச் சென்று வைகோவை சந்தித்தார்.

இதற்கிடையே, வைகோவுடன் கைதான மற்ற 8 பேரும் உச்ச நீதிமன்றத்தில் மனு செய்து 2004-ல் ஜாமீனில் விடுதலையாயினர். ஆனால், ஜாமீன் மனு தாக்கல் செய்ய மாட்டேன் என்று வைகோ உறுதியாக இருந்தார். பின்னர், கருணாநிதி உள்ளிட்ட பலரின் வேண்டுகோளை ஏற்று, அவர் ஜாமீன் மனு தாக்கல் செய்தார். சுமார் 19 மாத சிறை வாசத்துக்குப் பிறகு 2004 பெப்ரவரி 7-ம் திகதி வைகோ விடுதலையானார். வேலூர் சிறை வாயிலில் இருந்து அவரை தாரை, தப்பட்டை முழங்க சுமார் 8 மணி நேரம் மதிமுகவினர் ஊர்வலமாக அழைத்து வந்தனர். சிறையிலிருந்தபோது, சுமார் 47 ஆயிரம் கி.மீ. தூரம் பல நீதிமன்றங்களுக்கு பொலிஸாரால் அலைக்கழிக்கப்பட்டதாக வைகோ கூறினார்.

அமெரிக்காவில் இருக்கும் தன் மகள் வீட்டுக்கு செல்ல, 2004-ம் ஆண்டு ஜூனில் உயர் நீதிமன்றத்தில் மனு செய்து அனுமதி பெற்றார். அவரது பாஸ்போர்ட்டை திரும்ப ஒப்படைக்க சிறப்பு நீதிமன்றத்துக்கு உத்தரவிடப்பட்டது. இதற்கிடையில், பொடா மறுசீராய்வுக் குழு தீவிர பரிசீலனை செய்து, இந்த வழக்கில் முகாந்திரம் இல்லை என்று கூறி, வழக்கை வாபஸ் பெற தமிழக அரசுக்கு அறிவுறுத்தியது. பின்னர் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் பொடா சட்டம் ரத்து செய்யப்பட்டது.

இதையடுத்து, 2004 ஆகஸ்டில் வழக்கை வாபஸ் பெறுவதாக பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. சிறப்பு நீதிமன்ற உத்தரவை எதிர்த்து வைகோ உள்ளிட்ட 9 பேரும் உச்ச நீதிமன்றத்தில் மனு செய்தனர். இதற்கிடையே, இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட வீரஇளவரசன், பி.எஸ்.மணியம் ஆகியோர் இறந்துவிட்டனர்.

9 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த ஜூலையில் வைகோ மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. உச்ச நீதிமன்ற அறிவுரையின்பேரில் வைகோ உள்ளிட்ட 7 பேர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு செய்தனர். அந்த மனுக்களை விசாரித்த நீதிபதிகள் ராஜேஸ்வரன், மதிவாணன் ஆகியோரைக் கொண்ட உயர் நீதிமன்ற பெஞ்ச், வைகோ உள்ளிட்டோர் மீதான பொடா வழக்கை ரத்து செய்து தீர்ப்பளித்தது. இதன்மூலம் வைகோ மீதான சுமார் 12 ஆண்டு கால வழக்கு நடவடிக்கை முடிவுக்கு வந்துள்ளது.



## அராலி குமாரசாமி

வைகோவுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தண்டனையானது சுதந்திரச் சிந்தனையாளர்கள் பலருக்கும் வருத்தமும் ஏமாற்றமும் அளிக்கும் ஒன்றாக மாறியிருக்கிறது. தமிழர்கள் எங்கு பாதிக்கப்பட்டாலும் - மிகவும் குறிப்பாக, ஈழத் தமிழர்களுக்காக - எந்தத் தயக்கமுமின்றி குரல்கொடுப்பவராக அவர் இருக்கிறார். அவர் தண்டனையை எதிர்நோக்கியிருக்கும் விதம் நிச்சயமாக விவாதத்துக்குரியது. தண்டனை அளிக்கப்பட்டவராகவே அவர் இருக்கிறார். நீதிமன்றத்திடமிருந்து தான் எந்தக் கருணையையும் எதிர்பார்க்கவில்லை என்றும் அதிகபட்ச தண்டனைக்குத் தயாராக இருப்பதாகவும் அவர் சிறப்பு நீதிமன்றத்தில் கூறியதாகத் தெரிகிறது. இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 124ஏ-ன் கீழாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, அதற்கெதிராகப் போராடிய நமது தலைவர்களையெல்லாம் அது நினைவூட்டுகிறது.


தனது ஆட்சிக்கு விசுவாசமாக நடந்துகொள்ளாதவர் என்று கருதப்படுபவர்களையெல்லாம் ஒடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பிரிட்டிக்ஷ் அரசால் கொண்டுவரப்பட்ட பிரிவு 124ஏ-ன் வரம்புக்குள் வைகோ கொண்டுவரப்பட்ட சூழலே சந்தேகத்துக்குரியதாகிறது. இந்தக் கடுமையான சட்டப் பிரிவின் கீழாகத்தான் பால கங்காதர திலகர், காந்தி போன்ற நாட்டின் மிக உயர்ந்த தலைவர்களெல்லாம் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டிக்கப்பட்டார்கள். தேசத் துரோகத்துக்கான சட்டப் பிரிவின் கீழ் குற்றஞ்சாட்டுவது தொடர்ந்து அதிகரித்துவரும் இன்றைய அரசியல் சூழலில், சுதந்திரமான மக்களாட்சியுடன் ஒருங்கிணைந்த ஒரு பாகமான எதிர்க்கும் உரிமையை நடைமுறையில் விலக்கிவைக்கும் பிரிவு 124 ஏ-ஐ அரசியல் சாசனத்தின்படி செல்லுபடியாகும் என்று உச்ச நீதிமன்றம் கேதார்நாத் எதிர் பிஹார் மாநில அரசு வழக்கிலேயே உறுதிசெய்திருந்தாலும் அது மறுபரிசீலனைக்கு உரியதே.

காக்ஷ்மீர் விவகாரத்தில் அரசின் அணுகுமுறையைக் கண்டிப்பதற்காக, கண்ணையா குமார் கூட்டம் ஏற்பாடு செய்ததைத் தேசவிரோதமாகக் கருத முடியாது என்பதும், பழிவாங்கும் விதமாகவே அவர் மீது வழக்கு தொடரப்பட்டது என்பதும் அனைவருக்குமே தெரியும். அரசின் மீது அதிருப்தியை உருவாக்கும் நோக்கமில்லாமல் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கான உரிமை, தேசத் துரோகமாகப் பொருள்விளக்கம் அளிக்கப்படுகிறது.

அடிப்படை உரிமைகளில் ஒன்றான கருத்துரிமைக்குச் சில நியாயமான கட்டுப்பாடுகளை மட்டுமே விதிக்க முடியும். அரசின் கொள்கை முடிவுகள் சார்ந்து வைக்கப்படும் நேர்மையான விமர்சனத்துக்கு அக்கட்டுப்பாடுகள் பொருந்தாது. ஒரு ஜனநாயக நாடு, ஜனநாயகக் கருத்துகளை ஒடுக்குவதற்காக தேசத் துரோகம் என்று அடையாளப்படுத்தும் செயல்களில் இறங்கக் கூடாது.

வைகோ பேசியதில் தேசத்துக்கு விரோதமாக எதுவுமில்லை. பக்கத்து நாட்டில் சிறுபான்மையினராக இருக்கும் ஓர் இனத்தின் மனித உரிமைகளுக்கு ஆதரவாக ஒரு குடிமகன் தெரிவித்திருக்கும் கருத்துகள் மட்டுமே. இதற்காக ஒருவரைத் தேச விரோத வழக்கில் தண்டிக்க முடியும் எனில், அடக்கியொடுக்கப்படும் மக்களின் உரிமைகளுக்காக உலகத்தில் எந்த இயக்கமுமே இல்லாமல்போய்விடும். அந்த மக்கள் உலகத்தின் ஆதரவையும் பெற முடியாமல்போகும். இது சர்வதேச மனித உரிமை பிரகடனத்துக்கே எதிராக முடியும்.

உலகத்தின் வேறு எந்தப் பகுதியிலாவது விடுதலைப் போராட்டத்துக்கான குரல்கள் எழும்போது பத்திரிகைகளோ அல்லது தனிநபர்களோ முன்வைக்கும் நியாயமான விமர்சனங்களை இப்படி அடக்க முற்படுவது கனவாகத்தான் இருக்கும். இந்த விவகாரம் உச்ச நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு, முழு அமர்வும் கூடி, அரசமைப்புச் சட்டத்தின்படி காலம்தோறும் வளர்ந்துகொண்டிருக்கும் இந்த அடிப்படை உரிமைகள் குறித்து முடிவெடுக்க வேண்டிய நேரமிது. இந்தக் கோணத்தில் 124 ஏ தொடர வேண்டுமா என்பது குறித்து விவாதிக்கப்பட்டாக வேண்டும்.



# தமிழ் மக்கள் கொண்டாடும் ஆடிப்பிறப்பு

**மாசிலான்**

ஈழம் தந்த நவாலியூர் சோமசுந்தரப்புலவர் ஆடிப்பிறப்புப் பற்றிப் பாடிய பாடலை இங்கே காணலாம்.

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தம் தோழர்களே!
கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

பாசிப்பயறு வறுத்துக்குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி,
வாசப்பருப்பை அவித்துக்கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரில் சக்கரையுங்கலந்து,
தோண்டியில் நீர்விட்டு மாவை அதிற்கொட்டி
சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு,

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளே இட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே!

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக்க வாயூறிடுமே

குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே

வண்ணப் பலாவிலை ஓடிப்பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தந் தோழர்களே
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

அவர் இப்பாடலைப் பாடிய காலத்தில் ஆடிப்பிறப்புக்கு விடுதலை கொடுத்துள்ளனர் என்பது இப்பாடல் மூலம் தெரிகின்றது. ஆடிப்பிறப்புக்கு ஏன் விடுதலை கொடுத்தார்கள்? என்ற வினா எழுவது இயற்கையே. ஆனால் இயற்கையின் நுட்பங்களை அறிந்த தமிழன் ஆடிப்பிறப்பை கொண்டாடியது தான் உண்மை..

அந்தக் காலத்தில் விடுதலை நாளுடன் கொண்டாடிய ஆடிப்பிறப்பை, எம்மினம் இன்று பெரிய விழாவாகக் கொண்டாடா விட்டாலும், அனைத்து வீடுகளிலும் ஆடிக்கொழுக்கட்டை அவித்தும் ஆடிக்கூழ் காய்ச்சி குடித்தும் கொண்டாடுவது இன்றளவும் எம்மண்ணிலே நடந்து வருகிறது.



ஆடிப்பிறப்பு ஏன் கொண்டாடப்படுகிறது? என்றால் ஒரு தெளிவான விடை கிடைக்கா விட்டாலும் உண்மையான ஒரு காரணம் இருக்கத்தான் செய்கிறது.

தமிழ் மக்கள் தங்களின் மாதங்களைச் சூரியனின் நகர்வுக்கு ஏற்றவாறுதான் அமைத்துள்ளார்கள் என்பது யாவரும் அறிந்ததே. ஞாயிறு ஒரு நிலையான ஒன்றல்ல என்பதை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழன் கண்டுகொண்டான். இது எதோ தற்பெருமை பேசும் சொல்லல்ல. இதற்கான சான்று புறநானூற்றில் மிகத் தெளிவாக இருக்கிறது.


செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும் வளி திரி தரு திசையும்
வறிது நிலை இய காயமும் என்றிவை
சென்றளந்து அறிந்தோர் போல என்றும்
இனைத்து என்போரும் உளரே

என்று செல்கிறது அப் புறநானூற்றுப் பாடல். இப்பாடலின் மூலம் ஞாயிறு செல்லும் பாதை அதனைச் சூழவுள்ள மண்டலம் காற்றுச் செல்லும் திசை ஆகாயம் எவ்வாறு அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது போன்றனவற்றை அங்கு சென்று அளந்து பார்த்தவர்கள் போல் கூறும் வல்லமையுடையவர்கள் எங்கள் மண்ணில் இருந்தார்கள் என்று கூறுகிறது அப்பாடல்.

இவற்றை வைத்துதான் மாதங்களைக் கணக்கிட்டார்கள் எம் முன்னோர்கள். அதன் சிறப்புத்தான் தைத் திங்களின் ஓராம் நாளை தைப்பொங்கலாகவும், சித்திரை ஒன்றை சித்திரைத் திருநாளாகவும், புத்தாண்டாகவும் ஆடி ஒன்றை ஆடிப்பிறப்பு என்றும் ஐப்பசி ஒன்றை தீப ஒளித் திருநாளாக வும் நாம் கொண்டாடி வருகிறோம். சூரியன் வடக்கு நோக்கி நகர்ந்து மகரத்தை அடைந்து பின்னர் திரும்புகிறது இந்நாளே தை ஒன்றாகும். இதனைத் தான் தைப்பொங்கல் என்று தமிழர் திருநாளாகக் கொண்டாடுகிறோம். நெல்லு விளைந்து அறுவை செய்து சூரியனுக்கு நன்றி சொல்லும் நாள் அது. அடுத்தச் சூரியன் பூமியின் மையத்துக்கு வரும் நாளை சித்திரைத் திருநாளாகப் புத்தாண்டாக கொண்டாடுகிறோம். அடுத்து சூரியன் வடக்கு நோக்கி மேலும் நகர்ந்து கடக ரேகையை அடைந்து திரும்புகிறான். அதையே ஆடிப்பிறப்பு என்று கொண்டாடுகிறோம். பின்னர் சூரியன் திரும்பி தெற்கு நோக்கி நகர்ந்து மீண்டும் மையத்தை அடையும் பொழுது தீப ஒளித் திருநாளாகவும் கொண்டாடுகிறோம். இவ்வாறு சூரியன் பயணிக்கும் பொழுது கால நிலை மாற்றம், காற்றின் மாற்றம் என்பனவற்றைக் கணக்கில் வைத்துத் தான் இந்நாட்களை முக்கிய நாட்களாகக் கொண்டாடுகிறோம். சூரியன் வடக்கு நோக்கி நகரும் பொழுது ஏற்படும் கால மாற்றம் பின்னர் தெற்கு நோக்கி நகரும் பொழுது ஏற்படும் கால மாற்றம் என்பன மனித வாழ்வில் பெரும் பங்கு கொள்கின்றன.

ஆடி பிறந்தபின்னரே சோளகக் காற்றுப் பலமாக வீசத் தொடங்கும். ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும் என்று சொல்லுவார்கள். அதன் பின்னர் நெல்லு விதைப்பதற்கு ஆயத்தங்கள் செய்வார்கள். ஆடிப்பட்டம் தேடி விதை என்று பொன்மொழி கூட உண்டு. ஆறுகள் இல்லாத எமக்கு மழையை நம்பியே விதைப்பு நடக்கும். அதனால் புழுதி விதிப்புத் தொடங்குவதும், இக்காலத்தில் தான். இவ்வாறு விதைத்த நெல்லு ஐந்து ஆறுமாதங்கள் கடந்து விளைச்சல் தரும் பொழுது அதை அறுவடை செய்து பொங்கல் விழாவாகத் தை ஒன்றில் கொண்டாடுவது தமிழ் மக்களின் மரபாகும்.

தமிழ் நாட்டில் வணிகர்கள் ஆடித் தள்ளுபடி என்று கூறி தங்கள் வணிகத்தை நடத்துவார்கள். .ஆடிப்பெருக்கு என்று ஆற்று நீர் பெருகி ஓடும் பொழுது மகிழ்ச்சியுடன் அதையும் கொண்டாடுவார்கள். இப்பொழுது ஆற்றில் நீர் வரத்துக் கிடையாது. இயற்கைக்கு மாறாக அனைத்தும் நடப்பதால்



ஆடிப்பெருக்கு இல்லை என்று தான் கூறலாம். ஆனால் ஆடிப்பிறப்பு இப்பொழுது அங்கு அருகிவிட்டது என்று தான் கூறலாம். ஈழ மக்கள் இன்றும் ஆடிப் பிறப்பை மறந்து விடாது கொண்டாடி வருவது மகிழ்ச்சியளிப்பதாகும்.

# இளமைக்கு உறுதிதரும் கடுக்காய்

நமது உடலில் நோய் தோன்றக் காரணம் என்னவெனில், உஷ்ணம், காற்று, நீர் ஆகியவை தன்னளவில் இருந்து மிகுதல் அல்லது குறைவதால் தான். இதனாலேயே நோய் தோன்றுகிறது. உஷ்ணத்தால் பித்த நோய்களும், காற்றினால் வாத நோய்களும், நீரால் கப நோய்களும் உண்டாகின்றன. நமது தேகத்தை நீடித்து, ஆயுளை விருத்தி செய்ய திருமூலர் சித்தர் எளிய வழியை கூறுகிறார்.

ஒருவனுடைய உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் தூய்மை செய்யும் வல்லமை கடுக்காய்க்கு உண்டு என்று குறிப்பிடுகிறார் திருமூலர். கடுக்காய்க்கு அமுதம் என்றொரு பெயரும் உண்டு. தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய அமிர்தத்திற்கு ஒப்பானது கடுக்காயாகும். "பெற்ற தாயைவிட கடுக்காயை ஒருபடி மேலானது என்று கருதுகின்றனர் சித்தர்கள். கடுக்காய் வயிற்றில் உள்ள கழிவுகளை யெல்லாம் வெளித்தள்ளி, அவனுடைய பிறவிப் பயனை நீடித்து வருகிறது. கடுக்காயின் சுவை துவர்ப்பாகும். நமது உடம்புக்கு அறுசுவைகளும் சரிவரத் தரப்பட வேண்டும். எச்சுவை குறைந்தாலும் கூடினாலும் நோய் வரும். நமது அன்றாட உணவில் துவர்ப்பின் ஆதிக்கம் மிகவும் குறைவு. துவர்ப்பு சுவையே ரத்தத்தை விருத்தி செய்வதாகும். ஆனால் உணவில் வாழைப்பூவைத் தவிர்த்து பிற உணவுப் பொருட்கள் துவர்ப்புச் சுவையற்றதாகும். பின் எப்படி ரத்த விருத்தியைப் பெறுவது?




அன்றாடம் நமது உணவில் கடுக்காயைச் சேர்த்து வந்தால், நமது உடம்புக்குத் தேவையான துவர்ப்பைத் தேவையான அளவில் பெற்று வரலாம். கடுக்காய் அனைத்து நாட்டு மருந்துக் கடைகளிலும் கிடைக்கும். கடுக்காயை வாங்கி உள்ளே இருக்கும் பருப்பை எடுத்து விட்டு, நன்கு தூளாக அரைத்து வைத்துக் கொள்ளவும். இதில் தினசரி ஒரு ஸ்பூன் அளவு இரவு உணவுக்குப்பின் சாப்பிட்டு வர, நோயில்லா நீடித்த வாழ்க்கையைப் பெறலாம்.

கடுக்காய் குணப்படுத்தும் நோய்கள்: கண் பார்வைக் கோளாறுகள், காது கேளாமை, சுவையின்மை, பித்த நோய்கள், வாய்ப்புண், நாக்குப்புண், மூக்குப்புண், தொண்டைப்புண், இரைப்பைப்புண், குடற்புண், ஆசனப்புண், அக்கி, தேமல், படை, தோல் நோய்கள், உடல் உஷ்ணம், வெள்ளைப்படுதல், மூத்திரக் குழாய்களில் உண்டாகும் புண், மூத்திர எரிச்சல், கல்லடைப்பு, சதையடைப்பு, நீரடைப்பு, பாத எரிச்சல், மூல எரிச்சல், உள்மூலம், சீழ்மூலம், ரத்தமூலம், ரத்தபேதி, பௌத்திரக் கட்டி, சர்க்கரை நோய், இதய நோய், மூட்டு வலி, உடல் பலவீனம், உடல் பருமன், ரத்தக் கோளாறுகள், ஆண்களின் உயிரணுக் குறைபாடுகள் போன்ற அனைத்துக்கும் இறைவன் அருளிய அருமருந்தே கடுக்காய். இதை பற்றி சித்தர் கூறும் பாடல்...

"காலை இஞ்சி கடும்பகல் சுக்கு மாலை கடுக்காய்
மண்டலம் உண்டால் விருத்தனும் பாலனாமே.-

காலை வெறும் வயிற்றில் இஞ்சி- நண்பகலில் சுக்கு- இரவில் கடுக்காய் என தொடர்ந்து ஒரு மண்டலம் (48 நாட்கள்) சாப்பிட்டுவர, கிழவனும் குமரனாகலாம் என்பதே இந்தப் பாடலின் கருத்தாம். எனவே தொடர்ந்து கடுக்காயை இரவில் சாப்பிட்டு வர நோய்கள் நீங்கி இளமையோடு வாழலாம். கடுக்காய் வீடுகளில் கண்டிப்பாய் இருக்க வேண்டிய பொக்கிஷமாகும்.





# முதலில் பேசப்பட்ட மொழி எது?

வேட்டையாடி மாமிசத்தை சாப்பிட்டுக் கொண்டிருந்த, நெருப்பை பயன்படுத்தத் தொடங்கிய காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் முதலில் எப்போது பேசத் தொடங்கினார்கள்? இன்றைக்கு புழக்கத்தில் இருக்கும் ஆயிரக் கணக்கான மொழிகளுக்கு மூலமான ஒரே மொழி எதுவென்று சுவடுகளைக் கண்டுபிடிப்பது சாத்தியமா?

"மனிதர்கள் மட்டுமே மொழியைப் பயன்படுத்தும் உயிரினமாக இருக்கிறார்கள். விலங்குகளிடம் இருந்து நம்மை தனித்துவமாக்கிக் காட்டுவதும் அதுதான்," என்று நியூயேசில் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறை பேராசிரியராக இருக்கும் மேக்கி டாலர்மேன் கூறியுள்ளார்.

உரையாடுவதற்கான இந்தத் திறன்தான் பரிணாம வளர்ச்சியில் முக்கியமான நிலை மாறுதலாகக் கருதப்படுகிறது. வாழ்க்கை நிலையில் மாறுதலை ஏற்படுத்தியதில் மற்றவற்றைக் காட்டிலும், உண்மையான அம்சம் இதுதான். அதனால்தான் மொழியின் பூர்வீகத்தைக் கண்டறிவதில் மக்கள் ஆர்வமாக இருக்கிறார்கள். எப்போது மொழி தோன்றியிருக்கும் என ஆச்சர்யப்படுகிறார்கள்.

"நம்மை மனிதர்களாக ஆக்கும் சற்று சிக்கலான விடயமாக மொழி இருக்கிறது," என்று சொல்கிறார் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் மானிட பரிணாம வளர்ச்சித் துறை பேராசிரியரும், மானுடவியலாளருமான ராபர்ட் போலே.

இப்போதைய காலக்கட்டத்தில் உலகில் 6,500 மொழிகள் பேசப்படுகின்றன. ஆனால் இவற்றில் மிகவும் பழமையானது எது என்பதை விஞ்ஞானிகள் எப்படி கண்டுபிடிப்பார்கள்? "தொன்மையான மொழி" எது என்று கேட்டால் பாபிலோனிய மொழி, தமிழ், சமஸ்கிருதம் அல்லது பழங்கால எகிப்து மொழி என்று நாம் நினைக்கலாம்.

ஆனால், ஆரம்ப காலத்தின் அருகே இவையெல்லாம் செல்லவே முடியாது என்கிறார் பேராசிரியர் டாலர்மேன். தொன்மையான மொழிகள் நாம் குறிப்பிடும் பெரும்பாலான மொழிகள் எதுவுமே 6,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை அல்ல. இப்போதுள்ள நவீன மொழியாகவும் அவை இல்லை என்கிறார்.

உண்மையான தொடக்கம் குறைந்தபட்சம் 50,000 ஆண்டுகளுக்கு முந்தையதாக இருக்கலாம் என்பதற்கான சுவடுகள் உள்ளன. மொழியின் தோற்றம் அதைவிடவும் பழமையானதாக இருக்கலாம் என்று பெரும்பாலான மொழியியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். "அது ஐந்து லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என்று எங்களில் பலரும் நம்புகிறோம்," என்கிறார் டாலர்மேன்.

இன்றைக்கு உலகில் பேசப்படும் பல்வேறு மொழிகள் பற்றிய ஆதாரங்கள் நிறைய இருந்தாலும், இப்போதைய மொழிகள் அனைத்துமே பொதுவான ஒரு தொன்மொழியில் இருந்து உருவானவையாக இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்கிறார் பேராசிரியர் போலே.

நமது பரிணாம வளர்ச்சியின் உயிரியல், மரபியல் மாற்றத்தின்படி ஆப்பிரிக்காவில் சிறிய மக்கள் குழுவிடம் இருந்துதான் இந்த மொழிகள் தோன்றியிருக்க வேண்டும்.

இந்தத் தோன்றல் வழிகளில் இருந்து சில மொழிகள் மாறுபட்டவையாக இருந்தாலும், இப்போது நாம் காணும் மொழிகள், ஒரே மொழியில் இருந்து மாற்றங்களைப் பெற்று உருவானவையாகத் தோன்றுகிறது. நமது மூதாதையர்களின் புதைபடிம எச்சங்களை ஆய்வு செய்து பார்த்ததில் அவர்கள் எப்போது பேசத் தொடங்கினார்கள் என்பதற்கான சில அறிகுறிகள் தெரிகின்றன.

"பேச்சு என்பது ஒரு வகையில் அழகான முறையில் சுவாசித்தல் என்பதாக இருந்திருக்கிறது," என்கிறார் பேராசிரியர் போலே. "ஒலிகளை உருவாக்குவதற்காக நாம் அதிகமான கட்டுப்பாட்டுடன் சுவாசிக்கிறோம்," என்று அவர் குறிப்பிடுகிறார்.

"அவ்வாறு செய்வதற்கு, நமது உடலில் மென்மையான தசைகளை கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. சொல்லப்போனால், நமது உதர விதானமானது புதுமையாக பயன்படுத்தப்படுகிறது. பேசுவதில் தொடர்பில்லாத, பேச்சு இல்லாத மனித இனத்துக்கு நெருக்கமான மற்ற உயிரினங்களின், மனிதக் குரங்குகளின் உதர விதானங்களைக் காட்டிலும், மனிதனின் உதர விதானத்தில் அதிக அளவில் நரம்புகள் செல்கின்றன."

பரிணாம வளர்ச்சியில் நமக்கு முந்தைய தொடர்பு முறையாகக் கருதப்படும், அழிந்துபோய்விட்ட நியாண்டர்தால் மனிதர்களின் தொன்மைப் படிமங்களை ஆய்வு செய்து பார்த்தால், அவர்கள் 600,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்கள் என்றும், உதர விதானம் அவர்களுக்கு விரிந்து இருந்ததும் தெரிய வருகிறது.

ஆனால், ஆதியில் இரண்டு கால்களில் நடந்து திரிந்த ஹோமோ எரக்டஸ் எனப்படும் இனத்தவர்களின் தொன்மைப் படிமங்களில் இதுபோன்ற விரிவு இல்லை. எனவே மனிதர்கள் எப்போது மொழியைப் பயன்படுத்தத் தொடங்கி இருப்பார்கள் என்பதற்கான அடிப்படை கால வரையறை நமக்குக் கிடைத்திருக்கிறது.

புதைப்படிமங்களின் ஆதாரத்துக்கு அப்பாற்பட்டு, மரபியல் ஆய்வுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், மொழியின் காலத்தைக் கண்டறிவதற்கு புதிய வழிமுறைகளை அளிக்கிறது.

``FOXP2 என்ற ஒரு மரபணு இருக்கிறது. எல்லா விலங்குகளுக்கும் பொதுவானது இது," என்கிறார் பேராசிரியர் போலே. ஆனால் மனிதர்களான நம்மில் அது பிரிந்து கொண்டிருக்கும் தன்மை கொண்டதாக இருக்கிறது என்று குறிப்பிடுகிறார்.

இந்த மரபணுவின் பிரியும் தன்மை "மனிதர்களால் ஏன் பேச முடிகிறது, மனிதக் குரங்குகளால் ஏன் பேச முடியவில்லை என்பதற்கு விளக்கம் தருகிறது. பேசுவதிலும், மொழி வளர்ச்சியிலும் அதற்கு முக்கிய பங்கு இருப்பதை நாம் அறிந்திருக்கிறோம். பிரியும் தன்மை இல்லாத இந்த மரபணு உள்ள உயிரினங்களில் பேச்சு மற்றும் தொடரியலுக்கான பிரச்சினைகள் அடிக்கடி ஏற்படுகின்றன."

ஆனால் அவை முழுமையாக வளர்ச்சி பெற்ற பிறகு, பேச்சு என்பது முழுமையின் மற்றொரு அம்சம் என்ற அளவில்தான் இருக்கிறது.

"தமிழின் சிறப்பு அதன் தொன்மையில் இல்லை தொடர்ச்சியில் இருக்கிறது"

பேச்சு என்பது (பேச்சு மொழியின் உண்மையான ஒலி) மொழி என்பதாக (வார்த்தைகள் மற்றும் குறியீடுகளின் மொத்தத் தொகுப்பு) இல்லை என்று பேராசிரியர் டாலர்மேன் கூறுகிறார். "மொழி என்பதை எது உருவாக்குகிறது என்பதை இப்போதைய மரபியல் ஆதாரங்களைக் கொண்டு, இப்போதைய அறிவுநுட்பங்களைக் கொண்டு கண்டுபிடிப்பது கடினமான விடயம்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

முற்கால மனிதர்களின் மண்டை ஓட்டின் அளவை வைத்து, மொழி உருவான காலத்தைக் கண்டறிய முடியுமா? அப்படிச் சொல்ல முடியாது. மொழியை உருவாக்குவதற்கு மூளை எந்த அளவுக்குப் பெரிதாக இருக்க வேண்டும் என்பது நமக்குத் தெரியாது என்பதுதான் அதற்குக் காரணம்.

"உண்மையில் நியாண்டர்தால் மனிதர்கள், நம்மைவிட பெரிய விலங்குகள் என்பதால், அவர்களுடைய மூளையின் அளவு நமது மூளையின் அளவைவிடப் பெரியதாக இருந்திருக்கிறது" என்று பேராசிரியர் டாலர்மேன் கூறுகிறார்.

"ஹே" என்பதுதான் மனிதனின் முதல் வார்த்தையாக இருந்திருக்கும்

முந்தைய காலத்தில் இருந்த மொழி பற்றிப் பேசும்போது, முதலில் பேசப்பட்டது என்னென்ன வார்த்தைகளாக இருந்திருக்கும் என்று நாம் சொல்ல முடியுமா? நமக்கு எந்தக் குறிப்பும் இல்லை என்பது தான் நேர்மையான பதில் என்கிறார் பேராசிரியர் போலே.

ஹரகசிய' மொழியில் ஓலைச்சுவடிகள்: நூற்றாண்டுகளாகப் பாதுகாக்கும் சென்னை நூலகம்

ஏதும் அறிகுறிகள் கிடைக்குமா என்பதற்காக, விலங்கினங்கள் பற்றி ஆய்வு செய்து பார்த்ததில், வேட்டையாடி வாழ்ந்தவர்கள் "வார்த்தைகள்" என்று எதைப் பயன்படுத்தினார்கள் என்பதை விலங்கியல் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். "கழுகு," "சிறுத்தை" போன்ற குழுவில் உள்ள மற்றவர்கள் உணர்ந்து கொள்ளும் வகையில் அல்லது வெறுமனே "தேடுவதற்கு" அவை சப்தம் எழுப்பும் முறையை பயன்படுத்தியிருக்கின்றன என்று விலங்கியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

நம்மைச் சுற்றியிருந்த சூழ்நிலைகளில் இருந்தவை குறித்து தான் மனிதர்கள் முதலில் பேசியிருப்பார்கள் என்பதுதானே எளிமையான விடையாக இருக்கும் என்று நீங்கள் வாதிடலாம்.

நாம் இப்போது பயன்படுத்தும் - "ஸ்ஸ்ஸ்," "ப்ச்," ஹஹஹே!" "நன்றி" அல்லது "குட் பை" என்பவை போன்று அவர்களும் அடிப்படையான வார்த்தைகளைத்தான் முதலில் பயன்படுத்தியிருப்பார்கள் என்று மாற்று கோட்பாடும் கூறப்படுகிறது.

இந்த அனைத்து வார்த்தைகளும் அனைத்து மொழிகளிலும் உள்ளன. ஆனால் ஒரு மொழியில் வார்த்தைகள் மற்றும் வாசகங்களை உருவாக்கி, வாக்கியங்களாக உருவாக்குவதற்கான தொடரியல் அம்சம் இல்லை என்பது பொதுவானதாக இருக்கிறது.

முற்கால மனிதர்கள் சுற்றுச்சூழலை அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும், வெவ்வேறு உணவு சாப்பிடவும், அதிகம் பேசுவதற்கு, மற்றவர்களுடன் ஒத்துழைப்பதற்கு தொடங்கியிருக்கலாம் என்று பேராசிரியர் டாலர்மேன் தெரிவித்துள்ளார்.

பெரிய விலங்குகள் வேட்டையாடி, மிச்சம் விட்டுச் சென்ற மாமிசங்களை நமது முன்னோர்கள் சேகரிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால் கழுதைப்புலிகள் வேட்டையாடி சாப்பிட்டுவிட்டு, மிச்சம் விட்டுச் சென்ற மாமிசத்தை சேகரிக்க வேண்டுமானால், உங்களுடன் வேறு சிலரும் இருக்க வேண்டும். ஏனென்றால் அது மிகவும் ஆபத்தானது, என்கிறார் பேராசிரியர் டாலர்மேன்.

"நீங்கள் உணவு தேடிச் செல்லும்போது, நல்ல மாமிசம் கிடப்பதைப் பார்த்தால், நல்ல உணவு அருகில் இருக்கிறது என்பதை குழுவில் மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்கு உங்களுக்கு மொழி உபயோகமாக இருக்கும்."

மனிதர்களின் தகவல் தொடர்பில் மற்றொரு அம்சமாக இது இருக்கிறது. வேறொரு இடத்தில் நடந்திருக்கலாம் அல்லது வேறு நேரத்தில் நடந்திருக்கலாம் என்பதால், அங்கே இல்லாத விடயம் பற்றி மற்றவர்களுக்குச் சொல்வதற்கு நீங்கள் மொழியைப் பயன்படுத்துகிறீர்கள்.

உயிர்வாழ்வதற்கு சாப்பிட்டாக

வேண்டும் என்ற உந்துதல் காரணமாக, உணவு போன்றவை கிடைத்திருக்கும் தகவலை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்வதற்கான திறனை மனிதன் உருவாக்கும் தேவை ஏற்பட்டிருக்கலாம். "தாங்கள் பார்க்க முடியாத விடயம், அங்கே கிடைக்கிறது" என்பதை மற்றவர்களுக்குத் தெரிவிக்க இது தேவைப்பட்டிருக்கும் என்கிறார் பேராசிரியர் டாலர்மேன்.

எனவே ஒன்றாக பணியாற்றும் திறனை வளர்ப்பது தான் மொழியின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்திருக்கிறது. ஆனால் நமது தொடர்பியல் தேவைகள் அதிநவீ-னமாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் அப்போது கிடையாது.

"ஒத்துழைப்பு என்பது தான் மையமான தேவையாக இருந்திருக்கிறது. அநேகமாக சமூக ஒத்துழைப்பு என்பது தான் சமூகமாக சேருவது என்றாகியிருக்கும்" என்கிறார் பேராசிரியர் போலே. "தோழமைகளை உருவாக்கிக் கொண்டு, என்ன செய்ய வேண்டும் என கண்டறிவது என்பது தான் உண்மையில் நடந்திருக்கும்" என்கிறார் அவர்.

சாதாரணமாகப் பேசிக் கொண்டிருத்தலின் மதிப்பையும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது: "வெறுமனே பேசிக் கொண்டிருத்தல், அரட்டை அடித்தல் போன்றவை தான் பேச்சின் அன்றாட அம்சங்களாக இருக்கின்றன" என்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் வரலாற்று மொழியியல் வல்லுநர் டாக்டர் லாரா ரைட் கூறியுள்ளார்.

**"ஆதிகால மொழியில் இருந்து நவீன மொழிக்கான மாற்றம் என்பது கடினமான மாறுதலாக இருந்திருக்கும். ஆனால், இன்றைக்குப் பேசப்படும் எல்லா மொழிகளுமே ஒரே அளவுக்கு கலப்பு கொண்டவைதான்" என்கிறார் பேராசிரியர் போலே.**


திராவிட மொழி குடும்பத்திலேயே பழமை வாய்ந்த "தமிழ்" மொழி: ஆய்வு சொல்லும் உண்மை என்ன? சில நேரங்களில், என்ன செய்ய வேண்டும் என்று அறிந்து கொள்வதோடு மட்டுமின்றி, விடயங்கள் பற்றி அறிந்து கொள்வதும் மொழிக்கான தேவையாக இருந்திருக்கிறது.

"கதைகளை விவரித்துக் கூறுவதற்கும், சம்பிரதாயங்களை உருவாக்குவதற்கும் நிறைய மொழி அறிவு நமக்குத் தேவைப்பட்டது" என்று பேராசிரியர் டாலர்மேன் கூறுகிறார். பேசுவதற்கு ஆரம்பகட்ட முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டதைத் தொடர்ந்து, பல நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அநேகமாக அதற்கான முயற்சிகள் உருவாகியிருக்க வேண்டும்.

"ஆதிகால மொழியில் இருந்து நவீன மொழிக்கான மாற்றம் என்பது கடி-னமான மாறுதலாக இருந்திருக்கும். ஆனால், இன்றைக்குப் பேசப்படும் எல்லா மொழிகளுமே ஒரே அளவுக்கு கலப்பு கொண்டவைதான்" என்கிறார் பேராசிரியர் போலே.

"இந்த அனைத்து வெவ்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் குறைந்தபட்சம் 100,000 ஆண்டுகள் அல்லது அதற்கு முன்பு பன்முகத்தன்மையோடு வாழ்ந்திருப்பார்கள் என்று நமக்குத் தெரியும். எனவே, குறைந்தபட்சம் அப்போதும் கலப்புகள் இருந்திருக்கும்," என்று அவர் கூறியுள்ளார்.



# ஈழத்துத் தமிழர்களை வைத்துக் குளிர் காய்கிறதா? தென் இந்திய தொலைக் காட்சி அலைவரிசைகள்

ஈழப் பிரச்சனையை வைத்து உடனடி இலாபமடைந்தவர்களில் விஜய் தொலைக்காட்சியும் ஒன்று ஈழத்துக் கலை, இலக்கிய முயற்சிகளின் வரலாறும் அதன் செழுமையும் தனித்துவமானது. இதில் இசைத் துறையை எடுத்துக் கொண்டால் சாஸ்திரிய இசையில் இருந்து மெல்லிசை, துள்ளிசை, போர்க்காலப் பாடல்கள் என்று எக்காலமும் இவற்றின் வளமையைக் காட்டவல்ல அரிய பல கலைஞர்கள் தோன்றியிருக்கிறார்கள்.

ஆனால் ஈழத்துக் கலை முயற்சிகள் பெரியளவில் வெளியே தெரியாமைக்கு முதற்காரணம், இந்தக் கலைஞர்கள் பலர் தம்முடைய முழு நேரத் தொழிலாகவோ, வாழ்க்கையாகவோ அமைத்துக் கொள்ள முடியாத வர்த்தக சூழல் அங்கு இல்லா மையே. காலாகாலமாக தென்னிந்திய இசையில் மூழ்கித் திளைத்தவர்கள் பலருக்குப் புதிய பல முயற்சிகளைத் தேடி நுகரும் பழக்கமில்லை.

இன்றிருக்கிற தலைமுறைக்கு ஒரு "சுராங்கனி" ஏ.ஈ.மனோகரனையோ, "சின்ன மாமி-யே" நித்தி கனகரட்ணத்தையோ தெரியுமளவுக்கு, எஸ். கே.பரராஜசிங்கத்தையோ எம்.ஏ.குலசீலநாதனையோ தெரிய வாய்ப்பில்லாத சூழலில் இருக்கிறார்கள்.

இன்றைக்கு ஈழத்து இசைத் துறையில் திறமையானவர்கள் பலர் முட்டி மோதித் தம்மை வெளியே கொண்டு வரப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மறு முனையில் பின் கதவால் வந்து புகழ் வெளிச்சம் பெறத் துடிப்பவர் பின்னால்தான் நம் கவனமெல்லாம். "சூப்பர் சிங்கர்" புகழ் என்ற ஒற்றைப் பட்டத்தைப் பெறுவதற்காக ஈழப் பிரச்சனையைத் தும்பு முட்டாஸ் கடைப் பண்டமாக்கி இலாபம் தேடுகிறார்கள்.

உண்மையாக ஈழப் பிரச்சனையின் நியாய தர்மங்களைப் பேசுபவர்களுக்கு இந்தத் தமிழக வர்த்தக ஊடகங்கள் ஒரு போதும் வாய்ப்பு வழங்காது. "விடை கொடு எங்கள் நாடே", "தோல்வி நிலையென நினைத்தால்" பாடல்களைப் போட்டு கிளிசரின் கண்ணீரைப் பெருக்கி பார்வையாளனையும் அழ வைத்தால் அடுத்தது "சூப்பர் சிங்கர் பாடகரின் ஐரோப்பிய சுற்றுலா" தான்.

அங்கே சரிகமப நிகழ்ச்சியில் கூடத்தான் ஒரு திறமையான ஈழத்து இளைஞன் ஸ்ரீரீ ஜெயந்தன் கலந்து கொண்டிருக்கிறார். இதுவரை எந்தக் கவனிப்புமில்லை. இதோ இப்போது பிக் பாஸ் இலும் இரண்டு ஈழத்துக் குஞ்சு குருமான்கள் இறங்கி விட்டார்கள். தன்னுடைய டிவிடி வியாபாரம் படுத்ததற்கு ஈழத் தமிழர்களே காரணம் என்றும், 'இவர்களின் போராட்டத்துக்காகவா நான் குரல் கொடுத்தேன்? இவர்களைப் பார்த்துக் காறித் துப்ப வேண்டும் போல் இருக்கிறது' என்று அறச் சீற்றம் கொண்ட இயக்குநர் சேரன் கூட இந்த அவையில் இருக்கிறாராம். பார்ப்போம் என்ன நடக்கிறதென்று ?

ஈழப் பிரச்சினை என்பது உங்கள் கலையை விளம்பரப்படுத்தும் கடைச் சரக்கல்ல என்பதை இந்தச் சூழலில் இனி வரப் போகும் எல்லோருக்கும் நேர-டியாகவும், மறைமுகமாகவும் சொல்லி வைக்க வேண்டும். இப்படியானவர்களை ஒரு போதும் நம் தலையில் வைத்துக் கொண்டாடக் கூடாது என்பதே ஈழத்துக் கலை முயற்சிகளில் வேட்கை கொண்ட என் போன்ற கடைக் கோடி ரசிகர்களின் ஆதங்கமும் கூட..

**"விடை கொடு எங்கள் நாடே", "தோல்வி நிலையென நினைத்தால்" பாடல்களைப் போட்டு கிளிசரின் கண்ணீரைப் பெருக்கி பார்வையாளனையும் அழ வைத்தால் அடுத்தது "சூப்பர் சிங்கர் பாடகரின் ஐரோப்பிய சுற்றுலா" தான்.**

**– கானா பிரபா**

## குரு பார்வை



அவன் தன்னுடைய குருவின் ஆசிரமத்தில் தனியாக அமைக்கப்பட்டிருந்த ஒரு குடிசையில் சலனமில்லாத மனதை அடைய பயிற்சி மேற்கொண்டிருந்தான். யார் அவனைப் பார்க்க வந்தாலும் இவன் அவர்களை திரும்பிக் கூடப் பார்க்க மாட்டான்.

அவனுடைய குரு ஒருநாள் அவன் இருக்கும் குடிசைக்கு வந்தார். அவன் அவரையும் திரும்பிப் பார்க்கவில்லை. ஆனால் குரு முழு நேரமும் அங்கு உட்கார்ந்திருந்தார். மேலும் ஒரு செங்கல்லை கல்லின் மீது வைத்து தேய்த்துக் கொண்டிருந்தார். அவனால் இருப்புக் கொள்ள முடியவில்லை.

அவன் கேட்டான்:

"நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?"

குரு சொன்னார்:

"செங்கல்லை கண்ணாடியாக ஆக்கிக் கொண்டிருக்கிறேன்!"

அவன் சொன்னான்:

"செங்கல்லை கண்ணாடியாகவா? பைத்தியம் பிடித்து விட்டதா? வாழ்க்கை முழுதும் தேய்த்துக் கொண்டிருந்தாலும் இது கண்ணாடி ஆகாது!"

இதைக் கெட்ட குரு சிரித்தார்.

தான் சீடனைத் திருப்பிக் கேட்டார்:

"அப்படி என்றால் நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? செங்கல் கண்ணாடியாகாது என்றால் மனம் எப்படிக் கண்ணாடியாகும்?"

நீ பிறக்கும்போது மனம் உன்னிடம் இல்லை

நீ வாழ ஒரு கருவியே மனம்

இந்த மனம் கூட நீ வளர்ந்த போது வெளியில் இருந்து சேர்த்த கருத்துக்களின் தொகுப்பே மனம்

நீ மனதை தாண்டி செல்வதே ஞானம் ..

நீ மனதை பயன்படுத்த வேண்டும் ..

மனம் உன்னை பயன்படுத்த அனுமதிக்க கூடாது ..

---- ஓஷோ ----




# பூமியோடு சேர்த்து மனித குலத்தை அழிக்கப் போகிறதா இந்த 5G?


பிறைவாணன்

தொலைத் தொடர்புச் சாதனங்களைப் பொருத்துவதற்காக அமைக்கப்படும் மினி ரவர்களுக்கு எதிரான போராட்டங்கள் என்னத்தைச் சொல்லுகின்றன

**5G** தொழில் நுட்பம் வரப்போகிற தென்றவுடன் "ஆ" வென வாயைப் பிளக்கா தீர்கள். மனித குலத்தின் வீழ்ச்சிக்கு மறை முகமானதொரு காரணியாகப்போகிறது 5G என ஆய்வாளர்கள் கவலை தெரிவித்திருக் கின்றனர். மைக்ரோவேவ் கதிர்வீச்சுக்க ளால் தொலைத் தொடர்பினை ஏற்படுத்து வதற்கு உபயோகிக்கப்படும் தொழில் நுட்பமே இந்த **G** க்களின் செயல்திறன்.

மைக்ரோவேவ் அடுப்புகள் எப்படி வேலை செய்கிறதென்று எப்பொழுதாவது சிந்தித்துண்டா? மைக்ரோவில் சமைக்கும் உணவின் ருசி கூடுதலாக இருக்கும் என்று பலரும் கருதுகின்றனர். அது உண்மையல்ல. மைக்ரோவேவ் அடுப்புகளில் பாவிக்கப்படும் கதிர் வீச்சுக்களே இந்த **4G** மற்றும் **5G** தொழில் நுட்பத்தில் பயன்படுத்தப்படுகிற தென்று நம்மில் எத்தனை பெயருக்குத் தெரியும்?






மைக்ரோவேவ் அடுப்பில் நெருப்பும் இல்லை. காஸ்ஸும் இல்லை. எந்தவித எரிபொருளும் இல்லை. ஆனால் அது உங்கள் சமையலை விரைவாகச் செய்து ஒப்பேற்ற உதவுகிறது. ஒரு முட்டையை வைத்தால், 30 நொடியில் முட்டை வெந்து விடுகிறது. அதற்கு மேல் வெப்பத்தை அதிக ரித்தால் முட்டை வெந்து வெடித்துவிடும். மைக்ரோவேவ் அலை வீச்சின் சக்தி அத்தகையது. அதேபோல் தற்பொழுது பூமிக்கும் இதே நிலை தான் வந்திருக்கிறது என்பது ஒரு உண்மைச் செய்தி. எனவே **5G** பற்றிப் புரியாதவர்கள் புரிந்து கொள்ளுங்கள்.

புதிய தொழில் நுட்பம் எவ்வளவுக்கு எவ்வளவு உங்கள் வாழ்க்கையை எழிதாக்குகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு உங்கள் வாழ்க்கையை ஆபத்தில் கொண்டு சென்று விட்டுவிடுகிறது. **5G** தொழில் நுட்பத்தின் இரகசியமும் கூட இது தானா?

இந்த **5G** தொழில்நுட்பம் வெற்றிகர மாகக் களமிறக்க, பூமியைச் சுற்றி பூமியின் சுற்றுப்பாதையில் சுமார் 20.000 செய்மதி கள் அமைக்கப்பட வேண்டும். இந்த 20.000 செய்மதிகளும் மைக்ரோவேவ் சிக்னலால் பூமியைத்தாக்கப் போகிறது. இதனால் பூமியின் இயல்பு நிலையில் மாற்றம் ஏற்படக்கூடிய அபாயம் தென் படுகிறது. இந்த மைக்ரோவேவ் சிக்னல்கள் பூமியைத் தாக்குவது மட்டுமின்றி. பூமியின் இயல்பு நிலையையும் மாற்றப்போகிறது. உண்மையில் சொல்லப்போனால் மைக்ரோ வேவ் சிக்னல்களால் பூமி சூடடைந்து விடும். அப்படிப் பூமி சூடாவதால் பூமிக்குள் வானிலையில் பாரிய மாற்றங்கள் நிகழலாம். அத்தகைய மாற்றங்களால் அதிகளவிலான இயற்கை சீற்றங்களைப் பூமி சந்திக்க நேரிடும். அதைவிடக் கொடூரமான ஆபத்து என்னவெனில். மைக்ரோவேவ் சிக்னல்கள் பூமியில் உள்ள மக்கள் இனத்தையும், பூமியில் வாழும் ஜீவராசிகளையும் நாளுக்கு நாள் வேகமாக வேகவைத்து அழித்துவிடும் என்பதே உண்மை. மனிதர்கள். பறவைகள். மிருகங்கள் மற்றும் தாவரங்கள் என்று அனைத்தையும் பாகுபாடின்றி அழித்து


ழில் 5-ஜி தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டா
5 மாதச் சிசு கூட கருவிலே அழியுப்

மருத்துவர்கள் எச்சரிக்கை

ஒழித்துவிடும். உளவியல் ரீதியாகவும், உடலியல் ரீதியாகவும். உயிரியல் ரீதியாக வும் மனிதகுலம் ஒரு பாரிய அனர்த்தத்தைச் சந்திக்கப் போகிறதென சமூகவியலாளர்கள் கவலை தெரிவித்திருக்கின்றனர். முன்பு சொன்னதுபோல் மைக்ரோவேவ் அடுப்பில் வைத்த முட்டை எப்படி வெந்து வெடித்து விடுமோ, அதே நிலை தான் தற்பொழுது பூமிக்கும். இந்த நிலையைப் பூமி மற்றும் பூமியில் உள்ள மக்கள் இனம் சந்திக்க வேண்டாம் என்பதற்காகப் பல விஞ்ஞானி கள் **5G** தொழில்நுட்பத்தைத் தடை செய்ய முயற்சித்து வருகின்றனர். ஆனால் அதே சமயம் இன்னும் சிலர், எத்தகைய ஆபத்தை மனிதகுலம் சந்திக்கும் எனத் தெரிந்து கொண்டும் அதனை ஒரு விற்பனை-பொரு ளாக்க இடையறாது மும்முரமாக உழைத்துக் கொண்டு இருக்கின்றனர். **5G** தொழில்நுட் பத்தின் தேவை கட்டாயமானது அல்ல, தற்போதுள்ள நிலைமையில் எம்மூருக்கான தேவையை நிவர்த்தி செய்ய **3G** தொழில் நுட்பமே போது மானது. ஆனால் நம்முடைய வாழ்வியல் கட்டாயமானது. நம்மை வேக வைத்து பூமியை வெடிக்க வைக்கும் **5G** தொழில்நுட்பம் எமக்குத் தேவைதானா என்று நீங்களே சற்றுச் சிந்தியுங்கள்.

மினி ரவர்கள் பல இடங்களில்-தெருக்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. யாழ்ப்பாணம் இந்து முன்பள்ளிக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட மினி ரவரையே அருகில் உள்ள படத்தில் காண்கிறீர்கள்.

**OG-1G – 2G - 3G - 4G - 4G LTE** - என கைபேசி அலைவரிசை வளர்ந்து தற்போது ஐந்தாவது தலைமுறையை **5G** அடைந்துள்ள நிலையில் அமெரிக்காவிலும்.ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிலும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். நெதர்லாந்து ஹாக்கில் நடந்த சோதனையில் கொத்து கொத்தாக பறவைகள் இறந்து கண்டு பிடிக்கப்பட்டது. **5G** இல் காணப்படும் **7.40 GHZ**. கதிர்வீச்சானது மனிதனுக்கு புற்று நோய்.**DNA** அழிவு. குழந்தைகள் பாதிக்கப் படல் என்பனவற்றை ஏற்படுத் திவிடக் கூடிய வாய்ப்புகள் உள்ளதாகவும் சொல்கிறார்கள். **(5G experiment in The Hague, The Netherlands** - நவம்பர் 2018 **-HNN)**

பல பறவை இனங்களும் ஆயிரக்கணக்கான பறவைகளும் அழிந்து விட்டன என டவர் பற்றிய ஆய்வில் **(MoEF Study** -மும்பாய்) தெரிவித்துள்ளனர். சிட்டுகுருவிகள் போல மனிதக் குழந்தைகளுக்கும் பாதிப்பு ஏற்படப் போவதாக சொல்லப்படுகிறது.

- (இணையத்தில் இருந்தும் தகவல்கள் பெறப்பட்டது.)

# குடா நாட்டு மக்கள் எதிர் கொள்ளும் அறிவியல் ஆபத்து

## யாழ். மாநகர சபையின் ஏற்பாடா இது?

இன்னும் அமெரிக்காவை முழுமையாக ஆக்கிரமிக்காத ஒரு தொழில் நுட்பம் இலங்கையை வந்தடையவிருக்கிறது. அதுவும் குறிப்பாக வட பகுதியை, அதிலும் யாழ்.குடநாட்டை ஆக்கிரமித்துக் கொள்ளப் போகும் இந்தத் தொழில் நுட்பத்தினால் மனிதனுக்கும் தொலைபேசிகளுக்குமிடையே காணப்படுகின்ற நெருக்கம் இன்னும் முன்னையைவிட அதிகமாகப் போகின்றதென்ற கவலைக்குரிய செய்தியோடு இன்றைய எழுத்துக்களைத் தொடருகின்றோம்.

யாழ்.நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் மினி ரவர் என்றழைக்கப்படும் இத்தகைய தொலைத்தொடர்புக் கோபுரங்கள் பதினெட்டு இடங்களில் புதியதாய் இரவோடு இரவாக முளைத்திருக்கின்றன. தொலைத் தொடர்பு வசதிகளை மிகவும் வேகமாக்குவதற்காக இக் கோபுரங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அத்துடன் நவீன தொழில் நுட்பவசதிகளைக் கொண்டதொரு நகரமாக யாழ்.நகரை மாற்றுவதே இதன் நோக்கமாகும் என மாநகர சபை முதல்வர் சொல்லி இருப்பதாகச் செய்தியும் வெளிவந்திருக்கிறது.

புதியதாய் முளைத்திருக்கும் இத்தகைய கோபுரங்களில் பொருத்தப்படவிருக்கும் கருவிகளின் ஊடாகத் தொலைபேசிப் பாவனையாளர்கள், தேடு பொருட்கள் மூலம் தமக்குத் தேவையானவற்றை விரைவாகத் தேடவும், அதீத வேகத்தோடு செயற்படவும் இக்கம்பங்கள் உதவப்போவதாகவும் செய்திகள் பரப்பப்பட் டிருக்கிறது. அத்துடன் மினி ரவர் என்றழைக்கப்படும் இது போன்ற தொலைத் தொடர்புக் கம்பங்களில் நவீன உப கரணங்கள் பொருத்தப்பட்டுத் தொலைபேசிப் பாவனையாளர்களை மகிழ்விக்கப் போவதாகச் சொல்லப்படுகிறது ஆனால், இக் கோபுரங்களின் வருகைக்கு எதிராகப் பலர் போர்க்கொடி உயர்த்தி இருக்கின்றனர் என்ற செய்தியையும் படித்தவாறு மேற்செல்கிறோம்.

அண்மையில் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், பொது நலன் விரும்பிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் ஒன்று கூடி இது பற்றி விவாதித்த சபையில் நாமும் அமர்ந்திருந்தோம். இதற்கு முன்னரும் நடைபெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் இது தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றது. ஆனால் அந்த நிகழ்வில் கொடுக்கப்பட்ட விடயங்களில் மக்களை விழிப்படையச் செய்யக் கூடியவாறு இந்த மினி ரவர் என்றழைக்கப்படும் தொலைத் தொடர்புக் கோபுரங்கள் பற்றிய அடிப்படை விபரங்கள் பலவற்றை அவர்கள் சொல்லியிருக்கவில்லை.

முறையாக அனுமதி பெறாது இந்தக் கம்பங்கள் அவசர அவசர மாக அமைக்கப்பட்டதும், அமைக்கின்ற இடங்களில் "ஏன் அமைக்கிறீர்கள்?" என்று மக்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு அதற்குப் பொறுப்பானவர்களால் கொடுக்கப்பட்ட மறுமொழிகளாலேயுமே மக்கள் விழிப்படைந்தனர் என்றும் சொல்லப்படுகிறது. அங்கு நின்றவர்களால் 'மினி ரவர்' அமைக்கப் போகிறோம் என்று சொல்வதற்குப் பதிலாக ,மழை நீர் வடிந்து செல்லக் கால்வாய் அமைக்கிறோம், குடிநீருக்கான குழாய்களையிட இருக்கிறோம், கரையோரக் கிராமங்களில் உள்ளவர்களுக்கு '100 அடி உயரமான கம்பம் அமைத்து பிரகாசமான விளக்குகளைப் பொருத்தப் போகிறோம். அதனால் தொலை தூரத்திலுள்ள மீன்பிடிப் படகுகள் சுலபமாகக் கரைவந்து சேர வசதியாக இருக்கும், எனப் பல பொய்கள் சொல்லப்பட்டே 18 இடங்களில் இந்த மினிரவர்கள் அமைக்கும் பணி தொடரப்பட்ட நிலையில் பல சமூக நலன் விரும்பிகளால் சமூக வழலைத் தளங்களின் ஊடாகவும், சந்திப்புக்களினூடாகவும் மற்றும் பல வழிகளில் இதன் அடிப்படை இரகசியங்கள் பகிரப்பட்டு மக்கள் விழிப்புணர்வைப் பெற்றனர். போராட்டம் தொடங்கியது. போராட்டம் ஆளுநரின் கவனம் வரை சென்று அத்தகைய கோபுரப் பணிகள் இடை நிறுத்தப்பட்டிருக்கின்றன.

லம்போதரன்

இத்தகைய புதிய தொழில் நுட்பம் இலங்கையின் வேறெந்தப் பகுதியிலும் இடம்பெறாது வட புலத்தில் அதுவும் யாழ்ப்பாணக் குடாநாட்டைக் குறி வைத்துத் தொடங்கப்பட்டதன் இரகசியத்தையும் உண்மைத் தன்மையையும் அறிந்தால் நிட்சயம் கோபப்படுவீர்கள். வளர்முக நாடுகளில் கூட இன்னும் இது பற்றிய சரியான தொழில் நுட்ப அறிவும், பொருத்துவதா? இல்லையா?என்ற முடிவும் எட்டப்படாத நிலையில் யாழ். குடாநாடு




அவற்றிற்கானதொரு சோதனைக் களமாகச் செயற்படுத்துவதற்குக் குறித்த பல் தேசியக் கம்பெனிகள் முயற்சித்திருப்பதாகவே நம்பப்படுகிறது. மிகவும் மோசமாக மனித குலத்தைப் பாதிக்கக் கூடிய ஒலிக் கற்றைகளை வெளிவிடும் தொலைத்தொடர்புச் சாதனங்கள் இதில் பொருத்தப்பட்டுப் பரிசோதனை நடத்தத் தீர்மானித்திருக்கிறார்களாம். அதில் இருந்து வெளிப்படும் மைக்குறோ வேவ் கதிர் அலை வீச்சுக்கள் மனிதகுலத்தை மாத்திரமல்ல முழு உயிரினங்களையும் பாதிக்கக் கூடும் என அச்சம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உயிரினங்களின் மரபணுக்களில் மாற்றம் ஏற்படுமாம். மனிதர்களில் பல உடற் கூற்று மாற்றத்தையும் ஏற்படுத்துமாம். உயிரியல் மாற்றங்கள், பிறப்பு வீதத்தில் மாற்றங்கள் என்பதோடு புது விதமான உடல், உள நோய்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிவரும் என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்தவிடயம் இங்கே முறையான நடைமுறைகளைப் பின்பற்றாது அது தொடர்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளைக் கைக் கொள்ளாது, விதிமுறைகளையும் மீறி இரவோடு இரவாக அமுல்படுத்துவதற்கு மூல கர்த்தாவாக இருப்பவர்கள் யாழ்.மாநகரசபையினரே என திரு.வ.பார்த்தின் குற்றம் சுமத்துகிறார். யாழ்.நகர முதல்வர் இந்த விடயத்தில் விதி முறைகளை மீறித் தன்னிச்சையாக முடிவுகளை எடுத்துத் தொழிற்பட்டிருப்பதாக அறிந்து அவரைத் தொடர்பு கொண்டோம். அவர் வெளிநாட்டுப் பணயமொன்றில் இருப்பதாக அறிந்ததைத் தொடர்ந்து யாழ்.மாநகர சபை ஆணையாளருக்குத் தொடர்பை ஏற்படுதினோம். அவரும் யப்பான் சென்றுவிட்டதாகத் தகவல் கிட்டியது. தொடர்ந்து யாழ்.மாநகரசபை உதவிப் பொறியியலாளருக்குத் தொடர்பினை ஏற்படுத்தினோம். அவர் சிரேஷ்ட பொறியலாளரைத் தொடர்பு கொள்ளச் சொன்னார். அவரைத் தொடர்பு கொண்டபோது அது பற்றிய விபரங்களைத் தருவதற்குத் தகுதிவாய்ந்தவர் ஆணையாளரே அவரைத் தொடர்பு கொள்ளச் சொல்லித் தான் கருத்துக் கூற மறுத்துவிட்டார். ஆனால் மாநகர சபை எல்லைக்குள் நிர்மாணிக்கப்பட்ட கோபுரங்கள் எதற்கும் மாநகர சபைத் திட்டமிடல் பகுதியிடமிருந்தும் அனுமதி பெற்றுக் கொள்ளப்படவில்லை என்றும் அறிந்தோம். அது தொடர்பான ஆவணங்களைப் பெற முயற்சித்தோம். முடியவில்லை.

பின்பு திரு.வ.பார்த்திபன் தந்த விபரப்படி இத்தகைய கோபுரங்களை அமைப்பதற்குரிய ஒப்பந்தத்தின்படி ஆறு நிறுவனங்களிடமிருந்து அவர்கள் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டுமாம். வீதி அபிவிருத்தி அதிகார சபை, மத்திய சுற்றுச் சூழல் அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, தொலைத் தொடர்பு அதிகார சபை, விமானப் போக்குவரத்து அதிகார சபை, பிரதேசச் சுகாதார அதிகாரி என்ற ஆறு முக்கிய நிறுவனங்களிடமும் அத்தோடு , நல்லூர் கோவில் நிர்வாகித்திடமும் அனுமதி பெற்றே இத்தகைய கோபுரங்களை அமைத்திருக்க வேண்டும். ஆனால் வீதி அதிபிவிருத்தி அதிகாரசபை முக்கியஸ்தரிடம் இது பற்றிக் கேட்டோம். அவர் இது பற்றித் தங்களிடம் எவரும் அனுமதி பெறவில்லை என்றும், அது பற்றித் தெரியாது என்றும் சொன்னார். யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுப் புறச் சூழல் அதிகாரசபை இயக்குனரையும் தொடர்பு கொண்டோம். அவரும் தெரியாது என்றே பதிலளித்தார். இது போன்று மற்றைய நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டபோது அதற்குரிய பொறுப்பானவர்களோடு பேசமுடியவில்லை.



5G அலைக்கற்றையின் கதிர்வீச்சுத்தாக்கத்தால் இறந்துகிடக்கும் பறவை



ஆனால் ஒப்பந்தத்தின்படி உரிய அனுமதி பெறாமல் இத்தகைய கோபுரங்கள் அமைக்கப்பட்டிருக்குமாயின் அது சார்ந்த நிறுவனத்தினால் விதிமுறை மீறப்பட்டிருப்பதென்றே கருத்திற்கொள்ளலாம். அப்படியாயின் சந்தேகமின்றி எதுவித நட்ட ஈடுமின்றிக் கம்பங்களை அகற்றவும், உடன்படிக்கைகளை இரத்துச் செய்யவும் மாநகர சபைக்கு அதிகாரம் உண்டென்று திரு.வ. பார்த்திபன் பரிந்துரைக்கிறார். அத்துடன் இவை **SMART LAMP POLE** என்று குறிப்பிடப்பட்டி ருந்தாலும் இவை **MINI TOWER** என்பதே உண்மையாம். இது அனுமதிக்கப் படுமானால் எதிர்காலத்தில் குறைந்தது நூறு மீற்றருக்கு ஒன்று என்ற விகிதத்தில் பல ஆயிரக்கணக்கான கம்பங்கள் வர வாய்ப்பிருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே மற்றைய இடங்களில் குடியிருப்புப் பகுதிகளைத் தவிர்த்து நடப்படும் கம்பங்கள் நாழ்.குடாநாட்டில் சனச்செறிவுள்ள இடங்களிலேயே அதிகம் நடப்பட்டிருக்கிறது. பல கம்பங்கள் நிர்மாணிக்கப்படும் பட்சத்தில் அதிலிருந்து வீசும் அலைக் கற்றைகள் ஏற்படுத்தும்தாக்கம் எத்தகையது என்று எண்ணுகிறீர்கள்? மைக்கிறோ வேவ் அடுப்பைப்போல மனித உடலை வேகச் செய்துவிடும் அல்லவா? மனிதர்களை மட்டுமல்ல அனைத்து ஜீவராசிகளையும் மெல்ல மெல்லக் கொல்லப் போகிறது இத்தகைய அலைக்கற்றைகள்.

இத்தகைய நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த விடாப்பிடியாக இருப்பவர்கள் யாழ். நகரசபையிலுள்ள கூட்டமைப்பு உறுப்பினர்கள் என்றும், இது தொடர்பான ஒப்பந்தங்களில் அதிகளவு அவர்களும், அவர்களது உறவு வட்டாரங்களுமே ஈடுபட்டிருப்பதாகத் திரு.வ.பார்த்திபன் சொல்லி இருக்கிறார். மக்களை அழிப்பதற்கு அவர்களுக்கு இதைவிட வேறு வழி ஒன்றும் கிடைக்கவில்லையா? என ஒரு பொது மகன் ஆதங்கப்படுகிறார். அண்மை நாட்களில் இவ்விடயம் தொடர்பில் குடாநாட்டு மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வு நிலை உருவாகி இந்த மினி ரவர் அமைப்புக்குத் தங்கள் எதிர்ப்பைக் காட்டத் தொடங்கி இருக்கிறார்கள். மக்களின் கேள்விகளுக்குத் திருப்திகரமான பதிலைச் சொல்ல முடியாது அதிகாரிகள் திணறுவது அப்பட்டமாகத் தெரிகிறது.அது மட்டுமல்ல புத்தி ஜீவிகள் - துறை சார்ந்தோர் மட்டத்திலும் இது சார்ந்த ஆக்கபர்வமான கருத்துப் பரிமாறல்கள் வெளிப்படையாகவே ஆரம்பித்திருப்பதையும் ஒரு ஆரோக்கிய முன்னெடுப்பாகக் கொள்ளலாம். எதுவானாலும் இந்த அறிவியல் ஆபத்துக் குறித்து முடிவெடுத்து முன்செல்ல வேண்டிய பொறுப்பு எமது எல்லோரிடமும் உண்டு. முயற்சிப்போம்.



# ஊடுருவி உலகநாதன்

எங்கட சனம் அரச அலுவலகங்களுக்கும் போவதற்கு பயப்படும் காலம் இப்பத்த காலம் பாருங்கோ. இருக்கிற சொத்துகளையும் பறித்துவிடுவார்களோ என்ற பயம் மக்களிடம் இருக்கிறது. பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த நிலத்துக்காக நாங்கள் வைத்திருக்கும் ஆவணங்களை ஏற்க மறுக்கிறார்கள். ஆவணங்களே இல்லாமல் குடியேறும் சிங்கள மக்களிடம் எந்த ஆவணங்களையும் இவர்கள் பார்ப்பதில்லை.

மருத்துவர் ஒரு நோயாளிக்கு மருத்துவம் செய்வதற்கு முன்னர் நோயாளியைப் பார்த்து நீங்கள் என்ன செய்கிறீர்கள்? உங்களில் யாராவது வெளிநாட்டில் இருக்கிறார்களா? போன்ற கேள்வியைக் கேட்கும் போது அப்படி வசதியாக இருந்தால் தான் சிகிச்சை அளிப்பதற்கு முன்வருவார்கள். அதேபோல் தான் நிலபுலம் உள்ள வசதிபடைத்தவர்களுக்குத் தான் உதவி செய்ய முன்வருவார்கள்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு தங்களிடம் இருந்த கொஞ்சத்தையும் பறிகொடுத்து இருக்கிறவர்களுக்கு உதவி செய்வதற்கு எவரும் முன்வருவதில்லை. இப்படிப்பட்ட மக்களுக்கு வழிகாட்டுகிறம் என்று சொல்லி அவர்களை நட்டாற்றில் விட்டுவிட்டுப் போன கதை இந்த மண்ணில் நிறைய இருக்கிறது.

மக்களை பிழையான இடத்துக்கு அழைத்துச் செல்வது அரசியல்வாதிகள் மட்டுமல்ல அரச அதிகாரிகளும் தான் என்பது கிளிநொச்சியில் ஒரு அரச அலுவலகத்து அதிகாரியால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணின் வாக்குமூலத்தில் இருந்து தெரிகிறது.

தனது காணியை இழந்தது மட்டுமல்ல அந்தக் காணியைப் பெறுவதற்கு சட்டத்தின்பால் சென்று பெறுவதற்கான வழியைக் காட்டிக் கொடுக்காமல் சண்டை போட்டு பெறுமாறு கூறியுள்ளார் என்றால் இந்த அதிகாரியை என்னவென்று சொல்ல.

தனது காணியைப் பெறுவதற்கு இந்தப் பெண் போகாத காணி சம்பந்தப்பட்ட அரச அலுவலகம் இல்லை. இந்தப் பெண்ணின் காணியை அரச அதிகாரிகளின் செல்வாக்கில் உள்ள தனியொருவர் அபகரித்து வைத்திருந்த போதே அரச அலுவலகங்கள் எல்லாம் சென்று முறையிட்டும் அவர்கள் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் காணியை அபகரித்தவர் அந்தக் காணியில் வீடும் கட்டிவிட்டார்.

காணியைப் பிடித்து வீடு கட்டும் மட்டும் இந்தப் பெண்ணிடம் காணியை மீட்டுத் தருவோம் என்று பொய் கூறி இந்தப் பெண்ணை ஏமாற்றியுள்ளார் அதிகாரி.

இந்தப் பெண்ணால் இனி என்ன செய்ய முடியும். பல தலைமுறைதாண்டி வாழ்ந்து வந்த காணியை தனிநபர் அபகரித்து வீடும் கட்டுவதற்கு அவருக்கு அனுமதியளித்துவிட்டார்கள். இந்தப் பெண்ணின் நியாயத்தைப் பற்றி கதைப்பதற்கு எவருமே இல்லை.

பெண்ணின் பக்கம் நியாயம் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். தெரிந்தும் அந்தப் பெண்ணிடம் பிழையான வழியை அரச அதிகாரிகள் காணபிக்கின்றனர். அதாவது இரு ஆண்கள் துணையுடன் காணிக்குள் உள்நுழையுமாறு அந்தப் பெண்ணிற்கு வழியைக் காட்டுகிறார்கள் என்றால் இந்த அதிகாரியை என்னவென்று சொல்ல.

மேலதிகாரியிடம் சென்றால் அவரோ சமரசம் செய்து போகும்படி கூறுகிறார். சமரசம் செய்வதற்கு இரு பக்கமும் நியாயம் இருக்க வேண்டும். இங்கு ஒரு பக்கம் மட்டும் நியாயம் இருக்கும் போது எப்படி சமரசம் செய்ய முடியும் என்று கேட்டால் வேறு வழியில்லை என்று கூறுகிறார் என்று பெண் கூறுகிறார்.

அரச அதிகாரிகளிடம் ஒரு பழக்கம் இருக்கிறது யாரையும் காட்டிக் கொடுக்கமாட்டார்கள். தவறு செய்தாலும் அவர்களை காப்பாற்றவே முயல்வார்கள் அதனால் தான் அந்தப் பெண் தனக்கு நீதி கேட்டுப் போனாலும் தவறுக்கு ஒரு அதிகாரி சம்பந்தப்பட்டு இருப்பதால் அவரைக் காப்பாற்றுவதற்காக அந்தப் பெண்ணின் நீதி மறுக்கப்படுகிறது.

3 பரப்பு காணி தான். இந்தக் காணியை மீட்பதற்காக அந்தப் பெண் பணத்தில் இருந்து உடல் உழைப்பு வரை இழந்தது அதிகம். இன்னும் முடிவில்லாமல் இழந்து கொண்டுதான் இருக்கிறார்.

காணி பெறுமதி இருக்கிறதோ இல்லையோ தான் வாழ்ந்த காணியில் இருக்க வேண்டும் அந்த சுகம் எந்தக் காணியில் சென்று இருந்தாலும் வராது என்ற படியால் தான் தனது காணியை மீட்பதற்காக இந்தப் பெண் படாதபாடு படுகிறார்.

இப்படி இருக்கும் பெண்ணிடம் மனச்சாட்சியில்லாமல் அரச காணியாக்கி எடுத்துவிடுவோம் என்று சொல்லும் அரச அதிகாரிக்கு எப்படி மனம் வருகிறது. தனது அம்மாவோ அல்லது தனது அக்காவோ அல்லது தனது தங்கைக்கோ அல்லது தனது மனைவிக்கோ இந்த நிலை வந்தால் இவர் பொறுத்துக் கொள்வாரா?

அந்தப் பெண்ணிற்கு காணி கிடைக்குதோ இல்லையோ விரைவில் நோய்வாய்ப்பட்டு போய்விடுவார் போல் இருக்கிறது. தனது காணி கிடைக்க வேண்டும் என்று கதைக்கும் போது அந்தப் பெண் தனது ஆத்மாவை இழந்தது போல் உணர்வது தெரிகிறது.

இது என்னுடைய காணி என்பதை நிரூபிப்பதற்கு முன்னர் இந்தப் பகுதியில் உள்ள அரச அலுவலகங்களில் இருந்த அதிகாரிகள் இன்றும் வேறு பிரதேசங்களில் காணி சம்பந்தப்பட்ட துறையின் அதிகாரிகளாக இருக்கிறார்கள். இந்தப் பெண் அவர்களிடம் சென்று தனக்கு இப்படி நிலைமை ஏற்பட்டுவிட்டது என்று சொல்லி உள்ளார் அவர்களோ எங்களால் என்ன செய்ய முடியும் என்று கையை விரித்துள்ளனர்.

தன்னிடம் கேள்வி கேட்கும் ஒரு அதிகாரியாவது தனது காணியை அபகரித்து இருப்பவனிடம் கேள்வி கேட்க தயங்குகிறார்கள். இதில் இருந்து ஒன்றுமட்டும் தெரிகிறது. காணியை அபகரித்தவருக்கும் அதிகாரிகளுக்கும் தொடர்பு இருக்கிறது என்பது.

மாற்றான் காணியில் எவ்வளவு காலம் இருக்க முடியும். மாறி மாறி மாற்றான் காணியில் இருந்து வரும் இந்தப் பெண். அந்தக் காணி உரிமையாளர்களிடம் இருந்து மரியாதை கெடுவது தான் அதிகமாக இருக்கிறது.

இந்த மக்களுக்கு வேலை செய்வதற்காக சொகுசு வாகனம் உட்பட சகல வசதிகளுடன் வலம் வரும் அரச அதிகாரிகள் தங்களை மேலும் வளப்படுத்திக் கொள்வதிலேயே முன்நிற்கிறார்களே ஒழிய இந்த மக்கள் பற்றி சிந்திக்கிறார்கள் இல்லை.



# ‘அவர்’ குறித்து இரண்டு கவிதைகள்

தந்தையின் தகனத்துக்கு
பிறகான மாலையில்
இசைத்துணுக்குகளாய் மெலிதான மழை பொழிகிறது
பெயரற்ற ஆதி நட்சத்திரங்களின்
இடையறாத மினுங்கல்களுக்காக
இரவு தயாராகிறது
கூடடையும் பறவைகள்
வழக்கொழிந்த
பழம்பாடல்கள் போல் ஒலியெழுப்புகின்றன
எல்லாம் மங்கிய வீட்டில்
ஒற்றை மோட்ச தீபம்
தன் ஒளியின் சிதறல்களை நல்குகிறது
நாம் அறியா மென்மையின் படலமொன்று
வாடிய பயிரைக் கண்டதும் வாடியதாய்
வெறிச்சோடிய தெருவில் படர்கிறது
கவிதையின் உள்ளார்ந்த சோகங்களோ
இவையென எண்ணி மயங்குகிறேன்
சாயுங்காலத்தின் நிரந்தர கருணை
உனக்கும் எனக்கும் மட்டுமானதல்ல
அனைவருக்குமானதென
பெருகும் கண்ணீர்
தெளிவாக்குகிறது



ஆகாயத்துக்கும் எல்லையற்ற வெளிக்கும் என்னை
ஒப்புக்கொடுத்துவிட்டு
தந்தைக்கும் காலத்துக்கும் முன்
தனியனாய் நிற்கிறேன்
ஆசுவாசமளிக்கும் மர நிழல்கள் இல்லை எனினும்
இரவுகள் வராமலில்லை
நிலவொளியில் நான் நிற்கும் சிறு வெளி
நித்தியம் பெறாமலுமில்லை
எனக்கான பாடலை
திக்கித் திணறியேனும் இயற்றிவிடுவேன்
அதன் கீதத்தின் வசீகரம்
உமது நெஞ்சங்களை மெய்மறக்க செய்கையில்
மனமிளகி நீங்கள் சில சொற்கள்
கூட்டக்கூடும்
அவ்வமயம்
விட்டு விடுதலையாகி நிற்கும் சிட்டுக்குருவி
எம் தந்தை

—எம்.டி.முத்துக்குமாரசாமி

# பெரியவர்களை திணற வைக்கும் குழந்தைகள்

தயாளன்

பதில் சொல்ல முடியாத கேள்விகளைக் கேட்டால் அது பொண்டாட்டி. பதிலே தெரியாத கேள்வியைக் கேட்டால் அது குழந்தை. இணையத்தில் சாவித்திரி என்பவரின பெயரில் வெளிவந்த பதிவு இது.

பெரிய பெரிய சட்ட மேதைகளாலும் விளக்கம் கொடுக்க முடியாத படியாக இவ்வாறான குழந்தைகளின் வினாக்கள்



அமைந்திருக்கும். சில சமயம் எமக்குப் பதில் தெரிந்தாலும் குழந்தைக்குப் புரியும் விதத்தில் எம்மால் அதனைச் சொல்ல முடியாமல் போகும். சில வேளை பெரியவர்களின் பார்வையில் படாத விடயங்களை "சுருக்" கென்று மனதில் பதிக்கும் விதமாகக் குழந்தைகள் சொல்வதுண்டு. இதற்கு ஏராளமான உதாரணங்கள் உண்டு.குறிப்பாகக் குழந்தைகளின் வினாக்களுக்குப் பதில் சொல்லத் தெரியாமல் யுத்த காலத்தில் பெற்றோர் மட்டுமல்ல ஆசிரியர்களும் திணறியுள்ளனர். அவ்வாறானவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

1. முழுமையாக யுத்த காலத்தில் பிறந்து வளர்ந்த குழந்தை அது. வீட்டில் தொலைக்காட்சியோ, வானொலியோ கிடையாது. மின்சாரமும் இல்லை என்றிருக்கும்போது தொலைபேசி. செல்லிடப் பேசியோ பற்றி நினைக்கவே தேவை இல்லை. சிலர் பீ.பீ.சி மற்றும் வெரித்தாஸ் வானொலியைக் கேட்பதற்காகச் சைக்கிள் டைனமோவைப் பயன்படுத்துவதுண்டு மாறி மாறிச் சைக்கிளைச் சுற்றி அந்த நேரத்துச் செய்திகளைக் கேட்பர். சைக்கிளைச் சுற்றிப் புதின ஆர்வலர்கள் குழுமியிருப்பர். சிலர் செய்திகளின் இடையே தமது சொந்த விமர்சனங்களைச் சொல்லி அங்குள்ளவர்களை வெறுப்பேற்றுவர். அக்காலத்தில் மேற் சொன்ன அந்தப் பிள்ளையிடம் பின்வரும் கேள்வி கேட்கப்பட்டது. "தகவல் வழங்கும் சாதனங்களில் ஒன்றைக் குறிப்பிடுக" .கொஞ்சமும் தயங்காமல் அந்தப் பிள்ளை "மாமி" எனப் பதிலளித்தது. ஏனெனில் அந்தப் பிள்ளையைப் பொறுத்தவரை தான் சொன்ன பதில் நூற்றுக்கு நூறுவீதம் சரியானது என்றே நம்பியது. வழமையாக அந்தக் குழந்தையின் தந்தையின் மூத்த சகோதரி இவர்களது வீட்டுக்கு வரும்போது தான் அறிந்த புதினங்கள், வதந்திகள் எனப் பத்தும் பலதையும் சொல்லுவார். இணையக் கூகுளில் விபரம் தேடுவதுபோல கடந்த 30 வருடங்களுக்கு மேற்பட்ட விடயத்துடன் நினைவுபடுத்தி விடயங்களைக் கூறுவர். (குழந்தைகள் அருகில் இல்லாவிட்டால் கிசு கிசுக்களையும் சொல்லுவார்) எனவே அந்தப் பிள்ளை தான் நம்பியதில் இருந்து அந்தப் பதிலைக் கூறியது.

2. ஓயாத அலைகள் 3 நடவடிக்கை மூலம் மாங்குளம் நகரப் பகுதியில் (கண்டி வீதி) விடுவிக்கப்பட்ட பின்னர் மல்லாவியில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் தமது மகனைத் துவிச்சக்கர வண்டியில் ஏற்றிக் கொண்டு போனார். கண்டி வீதியைக் கண்டதும் மகன் கேட்டான் "என்னப்பா றோட்டுக் கறுப்பா இருக்கு?" அவனுக்கு எப்படி விளக்க முடியும். தார் என்ற சொல்லையே அந்தப் பிள்ளை கேள்விப்பட்டிருக்காதவன். தந்தையோ அல்லது அவனது உறவினர்களோ மாறி மாறிக் குண்டும், குழியும், சேறும், சகதியும் , கிடங்குகளும் எனக் காணப்படும் சாலைகளிலேயே அவனைக் கொண்டு திரிந்திருப்பார்கள். அந்தகைய சாலைகளைப் போக்குவரத்துக்கு உகந்ததாக செப்பனிட்டு மாற்ற வேண்டிய அரசாங்கத்தின் பொறுப்பு. ஆனால் அப்படியெல்லாம் செய்ய அரசுக்கு மனமில்லை என்ற உண்மையை எப்படிச் சொல்லுவது? அப்படிச் சொன்னால் "ஏன் அரசுக்கு மனமில்லை" என்று அடுத்த கேள்வி அவனிடமிருந்து பிறக்கும்.

3. ஒரு நாள் மகளுடன் சென்று கொண்டிருந்தார் தந்தை. மாலை நேரம் பௌர்ணமி நாள். சந்திரன் பிரகாசமாகத் தெரிந்தது. "அங்க பாரம்மா அம்புலிமாமாவை" என்று காட்டினார் தந்தை. அம்புலியைப் பார்த்ததும் வியப்புடன் குழந்தை கேட்டது "றோட் லைற்றெல்லாத்தையும் எடுத்து வைச்சிருக்கிறாரோ?"

என்ன பதில் சொல்வது? திணறிப்போனார் தந்தை. 1986 ஆம் ஆண்டு பிறந்தது அக் குழந்தை. பிறந்தது முதல் மின்சார வெளிச்சத்தைக் கண்டது இல்லை. வீதியில் போனாலும் வீதி விளக்குகள் எரியும். 1990 இல் யுத்தம் தொடங்கியதும் வடக்குக்கான மின்விநியோகத்தை நிறுத்திவிட்டது அரசு. இரவில் வெளியே கூட்டிச் செல்லும் போது வெளிச்சம் எங்கே போயிருக்கும் என்ற கேள்வி குழந்தையின் மனதில் உறைந்திருக்கும். அம்புலிமாமா பிரகாசமாக இருப்பதைக் கண்டதும் இவர் தான் திருட்டுத்தனமாக வீதிவிளக்குகளின் வெளிச்சத்தை எடுத்து வைத்திருக்கிறார் என முடிவு கட்டிவிட்டது குழந்தை.

4. இதுவும் மின்சாரம் சம்பந்தப்பட்டது தான். இக்குழந்தை மின்விளக்குகளைக் காண்பது மாவீரர் துயிலும் இல்லத்தில் மட்டும் தான். ஒரு நாள் திருமண நிகழ்வொன்றுக்காக மின்பிறப்பாக்கியை ஒழுங்குபடுத்தியிருந்தனர் யாரோ. இரவு அந்தப் பகுதியூடாக குழந்தையை அழைத்துச் சென்றார் தந்தை. வெளிச்சத்தைக் கண்டதும் குழந்தை கேட்டது. "அப்பா இஞ்சையும் துயிலுமில்லம் இருக்குதோ?"

5. உறவினர் வீட்டுக்கு அழைத்துச் சென்றிருந்தனர் குழந்தையை. தேனீர் தயாரிக்க சுணக்கம் ஏற்பட்டதும்



அந்த வீட்டுக்காரர் பிஸ்கட் ரின்னைக் கொண்டு வந்து பிள்ளையிடம் கொடுத்தார். "தேவையான பிஸ்கட்டைச் சாப்பிடுங்கோ சாப்பிட்டாப் பிறகு ரின்னை மூடி வையுங்கோ. காத்துப்போயிடும்" என்றார் அவர் "ஏன் பிஸ்கட்டுக்கு காத்தடிச்சோ வைச்சிருக்கிறீர்கள்?" என்று கேட்டது குழந்தை.

6. சிரித்திரன் ஆசிரியர் வரைந்த கதாபாத்திரங்கள் எல்லாம் கற்பனையில் உதித்தவையல்ல. அவரோடு பழகியவர்களை மனதில் வைத்தே இப்பாத்திரங்களைப் படைத்தார். சவாரித் தம்பர்- சின்னக்குட்டி- கிட்டிணன்- பாறிமாமி- மிஸ்ரர் அன் மிசிஸ் டாமோடிரன்- எல்லாமே நிஜத்தில் வாழ்ந்தவர்கள் தான். தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தை மனதில் நிறுத்தி அவர் வரைந்த பாத்திரம் தான் மைனர் மச்சான். (இவரையே தனது குரு என்று அன்ரன் பாலசிங்கம் "சிரித்திரன் சித்திரக்கொத்து" வெளியீட்டு விழாவில் குறிப்பிட்டார்.) அந்த வகையில் ஒரு நிறுவனத்தின் முகாமையாளரை மனதில் நினைத்து வரைந்த பாத்திரம் தான் ஶ்ரீமான் செல்லக்கிளி. எப்போதுமே பல்வேறு டிசைன் போட்ட சட்டைகளையே இக் கதாபாத்திரம் அணிந்திருக்கும். ஒரு நாள் ஶ்ரீமான் செல்லக்கிளி சம்பந்தப்பட்ட படங்களை ஜோக்காகக் கீறியிருந்தார். சிரித்திரன் சம்பந்தப்பட்டவர்கள் இந்த ஜோக்கை நன்றாக ரசித்தனர். சுந்தரின் மகள் ஶ்ரீவாணி இந்தப் படங்களைப் பார்த்தார். முதலாவது படத்துக்கும் இரண்டாவது படத்துக்கும் உள்ள வித்தியாசம் அவருக்குத் தெரிந்தது. "அப்பா! இவர் எப்ப சேட் மாத்தினவர்?" என்று கேட்டார். இத்தனை பெரியவர்களின் கண்ணிலும் தெரியாத தவறு தனது மகளுக்குத் தெரிந்ததே என வியந்தார். சுந்தா. உடனே திரும்ப வரைந்தார். இரு படங்களிலும் ஒரேவிதமான டிசைனுடன் ஶ்ரீமான் செல்லக்கிளியை.

7. இதுவும் ஶ்ரீவாணி சம்பந்தப்பட்டது தான். சுந்தர் ஒரு கார்ட்டூன் வரைந்திருந்தார். அதில் ஒரு அறிவித்தல் பலகை நாட்டப்பட்டிருந்தது. இங்கே வண்டிகள் நிறுத்தப்படாது என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பக்கத்தில் பெரிய தொந்தி வயிற்றுடன் ஒருவர் நிற்கிறார். சஞ்சிகையில் இக் கார்ட்டூன் வெளியானதும் தந்தையிடம் ஶ்ரீவாணி கேட்டார் "ஒருத்தரின் தோற்றத்தைப் பகிடியாக் கீறலாமோ? " அவ்வளவு தான் அதிர்ந்துவிட்டார் சுந்தர். சில சமயம் குழந்தைகளும் ஞான குருவாக விளங்குவர் என உணர்ந்தார். அன்றிலிருந்து ஒருவரின் அங்கங்களைக் கேலி செய்யும் விதமாக ஓவியம் வரைவதில்லை எனத் தீர்மானித்துக் கொண்டார்.

8. இது ஒரு பத்திரிகையாளரின் மகனைப் பற்றியது. இடம்பெயர்ந்து மாங்குளத்தில் இருந்த போது நடந்த சம்பவம். இவர்களது வசிப்பிடத்துக்கு அருகில் ஒரு ஆசிரியை இருந்தார். ஒரு நாள் இரவு வானத்தில் இருந்த நட்சத்திரங்கள் நிலா பற்றிய விடங்களை இவருக்கு விளக்கினார் ஆசிரியை. அப்போது இவர் கேட்டார். "நிலாவை விடப் பெரிய நட்சத்திரம் இருக்குமோ?" ஆம் என்றார் ஆசிரியை. அப்ப ஏன் நிலா பெரிசாத் தெரியுது. நட்சத்திரம் சின்னனாத் தெரியுது. இக்கேள்வியால் அதிர்ந்து விட்டார் ஆசிரியை. எனினும் சுதாகரித்துக் கொண்டு நட்சத்திரம் எல்லாம் நிலாவுக்குப் பின்னால் நிறையத் துாரத்தில இருக்குதுகள். அதுதான் சின்னனாத் தெரியுது. என்று கூறி சமாளித்தார். இதைத் தந்தையிடம் கூறிய அந்தச் சிறுவன். "நிலாவைவிடப் பெரிய நட்சத்திரங்கள் எல்லாம் சின்னனாத் தெரியுதெண்டால் வானம் எவ்வளவு பெரிசா இருக்கும் என்னப்பா'" என்றான். புதில் சொல்லத் தெரியாமல் நின்றார் தந்தை.'இதை யோசிச்சா விசர் பிடிக்கும் என்னாப்பா?" என்று ஒரு கேள்வியாலேயே விடயத்தை முடித்தான் சிறுவன்.

9. மேற்குறிப்பிட்ட சிறுவன் ஆகக் குழந்தையாக இருந்த போது நடந்த சம்பவம் இது. இப்பத்திரிகையாளர் கொஞ்சத் துாரத்தில் உள்ள கிணற்றில் குளிக்கப் போயிருந்தார். இவன் கைவிரலை சூப்பிக் கொண்டு நிற்கையில் பத்திரிகையாளரைத் தேடி ஒருவர் வந்தார். பத்திரிகையாளர் வரச் சுணங்கும் எனப் புரிந்தது. வந்தவர் இச்சிறுவனிடம் அப்பா வந்தா ஒரு மாமா வந்திட்டுப் போறார் என்று சொல்லுங்கோ என்றார். சிறுவன் தலையாட்டினான். அவ்வேளை அப்பாட்டை என்னெண்டு சொல்லுவீங்கள் ? என்று கேட்டார். வாயிலிருந்து விரலை எடுத்த அவன் காசி ஆனந்தன் மாமா வந்திட்டுப் போறார் என்று சொல்லுவன் என்றார். தான் சொல்லாமலே தன்னைப் பற்றி தெரிந்திருக்கிறதே என்று நினைத்தபடி சென்றுவிட்டா காசி ஆனந்தன். இதுபற்றி பத்திரிகையாளரிடம் பின்னர் அவர் கேட்டார். தனது மேசையில் திருவள்ளுவர், பாரதியார் போன்றோரின் புத்தகங்கள் உள்ளனவென்றும் அத்துடன் காசிஆனந்தனின் கவிதைகள் என்ற தொகுப்பு (அவரது புகைப்படத்தை அட்டைப்படமாகக் கொண்டது) என்ற புத்தகமும் உள்ளதாகத் தெரிவித்தார். தனது மேசைக்கு கிட்ட வரும் மகன் அந்தப் புத்தகங்களில் உள்ள படங்களில் இருப்போரைப் பற்றி தன்னிடம் துருவித் துருவி விசாரிப்பதாகவும் குறிப்பிட்டார். அந்த வகையிலேயே அவனது மனதில் காசிஅண்ணாவின் முகம் பதிந்துவிட்டது என்பது தான் உண்மை.

10. இது காசி அண்ணாவின் இளையமகள் தேனல்லி பற்றியது. காசி அண்ணர் ஏதாவது எழுதிக் கொண்டிருக்கையில் தனது சந்தேகங்களைத் தேனருவி கேட்பது வழக்கம். அன்றொருநாள் கணிதத்தில் தனக்குள்ள சந்தேகத்தை இவரிடம் கேட்கச் சென்றார். இவரோ நான் கணக்கில் பெயில் என்றார். சின்னக் கணக்குத்தானே உங்களுக்குத் தெரிந்திருக்கும் என அடம்பிடித்தாள மகள். இல்லையம்மா நான் பத்துத் தரம் சோதனை எழுதியும் பெயில் தான் என்றார் இவர். அவரது பதிலைக் கேட்டுத் திரும்பிச் சென்ற மகள் உடனே திரும்பி பதினோராவது தரம் நீங்கள் றைய் பண்ணவில்லையா? எனக் கேட்டாள். பதில் சொல்லத் தெரியாத எல்லா அப்பாமார் போலவே திருதிருவென முழித்தார் காசி அண்ணா.

11. இது ஒரு வில்லங்கமான விவகாரம். ஆனால் கிளிநொச்சியில் நடந்தது. தனது நண்பரின் வீட்டுக்குச் செல்கையில் மகனுக்கு ஏதாவது தின்பண்டம் வாங்கிச் செல்வார் ஒருவர். அப்பையனுக்கு அங்கர் பால் விருப்பம் என்றும் தெரியும். எனவே இடைக்கிடை அங்கர் பால் பெட்டியம் வாங்கிச் செல்வார். தின்பண்டத்தைப் பையனிடம் கொடுப்பார். அங்கரை நண்பரின் மனைவியிடம் கையளிப்பார். ஒரு நாள் இவர் இந்த வீட்டுக்குச் சென்றார். கிட்ட வந்த பையனிடம் 'நான் ஒரு சாமான் வேண்டிக் கொண்டந்தனான். என்னைக் கொஞ்சினால்தான் தருவன்" என்றார். அப்படியே அவன் கொஞ்சிவிட பிஸ்கற் பைக்கற்றை அவனிடம் கொடுத்தார். தொடர்ந்து 'இன்னுமொரு சாமான் கொண்டு வந்தனான். இன்னுமொருக்காக் கொஞ்சினால்தான் தருவன்" என்றார் அவர். 'அதைக் காட்டினால்தான் கொஞ்சுவன்' என்றன் பையன். இவர் அங்கர் பெட்டியை அவனுக்குக் காட்டினார். இதை நீங்கள் எங்கடை அம்மாட்டைத்தானே குடுக்கிறனியள். அப்ப அம்மா தானே உங்களைக் கொஞ்ச வேணும்." ஏன்றானே பையன். இவரும் நண்பரும், நண்பரின் மனைவியும் தலைவிறைத்துப் போய் நின்றார்கள்.

இப்படிக் குழந்தைகள் பற்றிய அனுபவங்கள் அலாதியானவை. முடிந்தால் உங்கள் அனுபவங்களையும் தீபம் மூலம் பகிரலாம்.




**நாம் அனைவருக்கும் ஒரே மாதிரியான திறமை இல்லாமல் இருக்கலாம் ஆனால் - அனைவருக்கும் திறமையை வளர்த்துக் கொள்ள ஒரே மாதிரியான வாய்ப்புக்கள் உள்ளன.**

**- அப்துல்கலாம் -**

இரா வின்

# பன்முக ஆற்றல் கொண்ட பல்கலை வேந்தன்

இனம் ஒன்றின் தனித்துவ அடையாளங்களைப் பிரிதிபலிப்பவை அவ் இனத்தின் கலைவடிங்களே. தமிழ் இனத்தின் அடையாளங்களாக மொழி, பண்பாடு, கலை கலாசார மற்றும் விழுமியப்பண்புகள் உள்ளன. இவ் அடையாளங்களைப் பேணிப்பாதுகாப்பதுடன் அவற்றைத் தரம் குறையாது முன்நகர்த்த வேண்டும். பாரம்பரிய கலைகளும், அதுசார்ந்த கலைவடிவங்களுமே தமிழ் இனத்தின் இருப்பைத் தக்கவைப்பவை.

காவலூரின் கலை ஆளுமைகளில் ஒருவர் பன்முக ஆற்றல் கொண்ட கலைஞர். தேசிய விருதுபெற்ற சிறுவர் நாடாக நெறியாளர், தாளவாத்தியக் கலைஞர், நாட்டுக் கூத்து, இசைநாடகம் மற்றும் நவீன நாடகநடிகன், நெறியாளன் என நீண்டு செல்லும் இவரது கலைச்செழுமைக்கு களம் அமைத்தவர்கள் பெற்றோர்.

தீவகக் கல்விப் புலத்தில் புகழ்பெற்ற அதிபரான அமரர் க. இரத்தினசிங்கம் அவர்களின் மகனான ஜெயக்காந்தனின் கலைப்பயணம் தொடர்பாகவே இப்பத்தி எழுதப்படுகின்றது. யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலையின் இசை ஆசிரியரும் திருமறைக் கலாமன்ற மேலதிக பிரதி இயக்குநருமான இவரின் அரங்குசார் அனுபவம் பாடசாலையில் ஆரம்பித்து பின்னர் திருமறைக் கலாமன்றத்தின் மூலமாக பெருவீச்சில் அமைந்தது.



திருமறைக்கலாமன்றம் என்ற கலைப் பண்ணையில் இருந்து வெளிவந்தவர்களில் மிக முக்கியமானவர். இவரை அற்புதகலைஞராக்கி அழகு பார்த்தவர்களில் திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ. மரிய சேவியர் அடிகளாரும் ஒருவர் அவர் தனது இளவல் தொடர்பாக பகிர்ந்து கொண்டவை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இசைத்துறைப் பட்டதாரியான இவர் பல்முகப்படுத்தப்பட்ட ஒரு கலைஞன், சிறந்தநடிகன், நாடகக்கலாவித்தகர் 'பட்டத்தைப் பெற்றவர். எத்தகைய நாடகமாக இருப்பினும் அந்நாடகப்பாணிக்கு ஏற்ப தமது நடிப்பாற்றலை வெளிப்படுத்தும் திறன் படைத்தவர்.



எமது அரங்கியல்சார் செயற்பாடுகளில் முனைப்புடன் ஈடுபட்டு தனது நடிப்பாற்றலால் தனித்துவ அடையாத்தை ஏற்படுத்திக் கொண்டவர். மன்றத்தாலே மேடையேற்றப்பட்ட இப்ஸனின் படைப்பாகிய பிக்மெஸ்ரர் சொல்னெஸ் என்னும் நாடகத்தில் சொல்னெஸ்ஸாக நடித்துப் பார்த்தவர்கள் உள்ளத்தில் நீங்காத நினைவுகளைப்பதித்தவர். வெளிநாட்டவர்களினதும் பாராட்டுதல்களைப் பெற்றவர் இதமான பாடகரான இவர் எல்லோரையும் மதித்து ஒழுகும் இனிய பண்பு கொண்டவர் எனக் குறிப்பிடுகின்றார் கலாமன்ற இயக்குநர் அவர்கள்.

கலைஞர்கள் மேடை ஏறும் போது இன்றுதான் புதிதாக மேடை ஏறுகின்றோம் என்ற உணர்வுடன் மேடை ஏறவேண்டும். அதற்கு முன்னாய்த்தம் மிக அவசியம். எம்மை நம்பி வரும் பார்வையாளர்களை ஏமாற்றக்கூடாது அவர்களைத் திருப்திப்படுத்துவதாக எமது நடிப்புசார்ந்த வெளிப்பாடுகள் அமையவேண்டும். எனக்குறிப்பிடுகின்ற ஜெயக்காந்தன் அரங்கில் முழுமையாக பாத்திரமாக மாறுவதைப் பல சந்தர்ப்பங்களில் கண்டுணர்ந்து கொண்டுள்ளோம். திருப்பாடுகளின் காட்சி என்ற நாடகத்தில் பிலாத்து என்ற கதாபாத்திரம் வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள பிலாத்துவை எழுத்துக்களின் ஊடாகவே தரிசித்த மக்கள், அரங்கில் ஜெயக்காந்தன் ஊடாகக் கண்ணுற்றனர் "பிலாத்துவுக்கு உயிர் கொடுத்த காந்தன்" என்ற அடை மொழியும் அரங்கவியலாளர்களால் கூறப்படுவதுண்டு.



இசைநாடகம், நாட்டுக்கூத்து, நவீன நாடகம் மற்றும் திருப்பாடுகளின் காட்சி என்ற பக்திநிலை ஆற்றுகைகளாயினும் ஜெயக்காந்தன் வரித்துக்கொண்ட பாத்திரமாகவே தன்னை மாற்றி அரங்காள்வதால் அவையிலுள்ளோர் அகமகிழும் சந்தர்ப்பங்கள் அதிகம். குசேலர் இசைநாடகத்தில் கிருஸ்ணர்... கொல் ஈனும் கொற்றம் கூத்துருவ நாடகத்தில் இராமன்... தலைமைக்கட்டடக்காரன் நவீன நாடகத்தில் தலைமைக் கட்டடக்காரன்... என நீளும் கதாபாத்திரங்களுக்குள் தன்னை மழுமையாக அர்பணித்து அரங்காலும் திறன் அதிகம் வாய்க்கப்பெற்றவர் இவர்.

இருபது வருட அரங்குசார் அனுபவமும் இசைஞானப்புலமையுமுள்ள இவர் மிருதங்க அரங்கேற்றம் கண்ட தாளவாத்தியக் கலைஞர் சிரேஷ்ட மிருதங்க ஆசான் நவரச நாதலய மிருதங்கச் சக்கரவர்த்தி சி. மகேந்திரன் அவர்களைக் குருவாகக் கொண்டு பலவருட பயிற்சியின் ஊடாக 2009 இல் மிருதங்க அரங்கேற்ற நிகழ்வ்வை சிறப்பாகவே நடத்தியவர். பரதநாட்டிய நிகழ்வுகள், கர்நாடக சங்கீத நிகழ்வுகளில் பக்கவாத்தியக் கலைஞராகவும் பாடகராகவும் இசைப்பணிபுரிவது அவர் பெற்ற பட்டக்கல்விக்கான பரிகாரமாகும்.

10 வருட ஆசிரியர் சேவையில் பாடசாலை மாணவர்கள் பலரை அரங்காள அனுமதித்து அழகுபார்த்தவர் அதில் பல வெற்றிகளையும் பெற்றவர். கூத்து, இசைநாடகம் நவீன நாடகங்களிற்கு அப்பால் சிறுவர் நாடகங்களிலும் நன்கு பரீட்சியமானவர். இவ்வாறான கலைவடிவங்களுக்குள் மாணவர்களை உள்ளீர்த்து பாடசாலைநிகழ்வுகள், தமிழ்த்தினப்போட்டிகள் மற்றும் அரசநாடக விழாக்களிலும் பங்குபெறச்செய்து பெருவெற்றி பெற்றவர். 2016ல் நடைபெற்ற அரச நாடக விழாவில் ஜெயக்காந்தனின் நெறியாள்கையில் அரங்குகண்ட கிளிக் கூண்டு சிறுவர் நாடகம் 10 தேசிய விருதுகளைப்பெற்றது. யாழ்ப்பாண திருக்குடும்பக் கன்னியர் மட தேசிய பாடசாலை மாணவிகள் பங்குகொண்ட இந்நாடகத்தில் சிறந்த நெறியாள்கை, சிறந்த நடன அமைப்பு, சிறந்த ஆடையமைப்பு என மூன்று தேசிய விருதுகள் ஜெயக்காந்தனுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

10 நாள் கலைப்பயணமாக கனடா சென்ற கலைஞர்கள் குழுவில் பங்குகொண்ட ஜெயக்காந்தன் குசேலர் என்ற இசைநாடகத்தை நெறியாள்கை செய்ததுடன் கிருஸ்ணராகவும் பாத்திரமேற்றவர். அற்றைத்திங்கள் என்ற கூத்துருவ நாடகத்திலும் பங்குகொண்டதுடன் பல்வேறு கலைநிகழ்வுகள் பங்குகொண்டமை மட்டுமன்றி துறைசார்ந்தவர்களின் காத்திரமான கலந்துரையாடல்களிலும் கலந்து கொண்டவர்.

2018ல் வடக்கு மாகாண இளம் கலைஞர் விருதுபெற்ற இவர் கடல் கடந்த கலைநிகழ்வுகளில் பங்குகொண்டமைக்காகச் கனடாவில் Toronto நகரில் வைத்து புலம்பெயர்ந்தவர்களினால் பல்கலைவேந்தன் என்ற விருதுவழங்கி கௌரவிக்கப்பட்டவர் இவற்றுடன் திருமறைக்கலாமன்றத்தால் கலைஞானச் செல்வன் என்ற விருதும் இவருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இசைநாடகப் பாடல் மெட்டுக்களின் தொகுப்பு, தாலேலோ, குயிலின் கானங்கள், அடைக்கலத்தாயே, கல்வாரியாகங்கள், சிறகடிக்கும் சிட்டுக்கள் என நீண்டு செல்லும் பல இறுவட்டுக்களில் குரல் இசையாளராகவும், இயல் இசையாளராகவும் பங்கு கொண்டவர்.

இசை, இசைவாக்கியம், பாரம்பரிய கலைகளில் மாணவர்களின் கற்றல் ஆர்வம் மிகக்குறைவாகவே உள்ளது. தொழிநுட்பம் குறைந்த போட்டி உலகில் கலைசார்ந்த நுகர்வுக் கலாசாரம் குறைவடைந்து உள்ளது. இப்பாடங்களினால் எவ்வித பிரயோசனமும் இல்லை என்ற மனோநிலை மாணவர்களிடம் மட்டுமன்றி பெற்றோரிடமும் உள்ளது. இவ்வாறானவர்களின் மனங்களில் மாறுதல்கள் ஏற்படவேண்டும். கலைஞர்கள் மற்றும் கலைசார் அமைப்புக்கள் தரமான படைப்புக்களை உருவாக்கி அவற்றை மக்கள் மயப்படுத்தவேண்டும் எனக் கூறும் ஜெயக்காந்தன் நாமும் நமக்கோர் நலியாக்கலையுடையோம் என்ற மகாகவியின் கூற்றுக்கு செயல்வடிவம் கொடுப்பவராகவே இயங்கிவருகின்றமை பாராட்டுக்குரியது.

## ஜெருசலேம் யாத்திரை-19
# பயண அனுபவங்கள்

- ஏ.ஜே.ஞானேந்திரன்



யூதர்களின் நாட்டுப் பயணக் கட்டுரையை வாசித்துக் கொண்டிருக்கிறீர்கள். உலகளாவிய ரீதியாக எவ்வளவு யூதர்கள் வாழ்கிறார் கள்? என்று கேள்வி உங்களுக்குள் எழலாம். ஐரோப்பிய கண்டத்தில் 2000 வருடங்களுக்கு மேல் வாழ்ந்தவர்கள் இந்த யூதர்கள். அமெரிக்க யூத ஆண்டு நூல், 1933இல் எடுத்த ஒரு கணக்கெடுப் பின் போது, ஐரோப்பிய யூதர்கள் சனத் தொகை 9.5 மில்லியன் என்று குறிப்பிடப்பட்டது. இத் தொகை உலகளாவிய ரீதியாக வாழ்கின்ற யூதர்களின் தொகையில் (15.3 மில்லி யன்) 60 வீதத்திற்கு மேற்பட்டது என்பது சுட்டிக்காட்டப்பட்டது. அனேக மான யூதர்கள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில்தான் வாழ்ந்திருக்கிறார்கள். சுமாராக 5 1/2 மில்லியன் தொகையினர் போலந்திலும், சோவியத் ஒன்றியத்தி லும் வாழ்ந்திருக்கிறார்கள். நாஸிகள் 1933இல் அதிகாரத்தை தம் கைகளில் எடுக்கும் வரை, ஐரோப்பாவில் வலுவான, நன்கு அபிவிருத்தியடைந்த யூத கலாசாரம் மேலோங்கியிருந்தி ருக்கின்றது. இரண்டு தசாப்தத்திற்கு மேற்பட்ட காலத்தில், ஐரோப்பாவின் பெரும்பான்மை இடங்கள் நாஸி ஜேர்மனியால் கைப்பற்றப்பட்டன அல்லது இணைக்கப்பட்டன. ஐரோப்பாவில் வாழ்ந்த மூன்று யூதர்களில் , இருவர் கொல்லப்பட்டு விட்டார்கள். மத்திய ஐரோப்பாவில்தான் அதிகமான யூதர்கள் வாழ்ந்துள்ளார்கள். ஜேர்மனியில் 525,000 பேரும், ஹங்கேரியில், 445,000 பேரும், செக்கோஸ்லோ-வோக்கியாவில் 357,000 யூதர்களும், ஆஸ்திரியாவில் 191,000 பேரும் வாழ்ந்துள்ளார்கள். யூதர்களின் மூதாதையர் ஆபிரகாம், ஐசக் மற்றும் ஜேக்கப் என்றும் ஜேக்கப் பின் பன்னிரண்டு மகன்களின் வாரிசு கள்தான் யூதர்கள் என்றும் பழைய ஏற்பாடு பைபிள் **(Old Testament)** சொல்கிறது. (இந்த ஆபிரகாம்தான் தங்களுடைய மூதாதையர் என்று கிறிஸ்துவர்களும் முஸ்லீம்களும் கூறுகிறார்கள்.) ஆபிரகாமின் சந்ததியினர் என்று கருதப்படும் யூதர்கள் இப்போதைய ஜெருசலேமிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் வாழ்ந்தனர். இவர்களுடைய மன்னர்களில் டேவிட் அரசரும் அவருடைய மகன் சாலமனும் குறிப்பிடத் தகுந்தவர்கள். ரோமானியர்கள், கிரேக்கர்கள், எகிப்தியர்கள் ஆகிய அந்நியர்களின் படையெடுப்பால் பல முறை அவர்களின் ஆட்சியின் கீழ் வாழ்ந்தனர்.... இது யூதர்கள் கதை....

**புகழ்பெற்ற துறைமுக நகர்**


எங்கள் பயணத்தில் **Jaffa** என்று **(Pg;&** மொழியில் **Yafo)** அழைக்கப்படும், இவர்களது முக்கிய புராதன துறைமுக நகருக்கு போகும் வாய்ப்புக் கிடைத்தது. இந்த நகர குன்று 40 மீட்டர் (130 அடி) உயரம் உள்ளதால் பரவலான கடற்கரையில் இருந்து தெளிவாகத் தெரியும். அதனால் அது இராணுவ பயன்பாட்டுக்கு உதவியது. பல நூற்றாண்டுகளாக குப்பைகளை நிலத்தில் குவிப்பது காரணமாக அதிக



# யூதர்கள் சரித்திரம்...

உயரமாக உருவாகியது. மகமோடியா மசூதி என்று அறியப்படும் இந்த நகரின் புராதன மசூதி மிகப் பிரசித்தமானது. நெப்போலியன் இதை அழித்து நிர்மூலமாக்கிய பின்னர், 1820இல் அப்போது ஆட்சியிலிருந்த மகமூத் அபூ நபூட் என்ற ஓட்டோமன் ஆட்சியாளரால்இது புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

தொல்லியல் சான்றுகள் இந்த நகரில் சுமார் கி.மு. 7500 காலத்திலிருந்து மக்கள் வசித்து வருவதாக கூறுகின்றன. இஸ்ரவேல் அரசு 1949 ஆம் ஆண்டு அக்டோபர் 4 ம் திகதி டெல் அவிவ் நகரையும், இந்தத் துறைமுக நகரையும் நிரந்தரமாக ஒருங்கிணைக்க முடிவு செய்தது. ஆனால் உண்மையான ஐக்கியப் படுத்தல் 24 ஏப்ரல் 1950 வரை ஒத்திவைக்கப்பட்டது. இத் துறைமுக நகரின் வரலாற்று பெயரை பாதுகாக்கும் பொருட்டு **Tel Aviv-Jaffa** என ஆகஸ்ட் 1950 இல் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 19 ஆம் நூற்றாண்டில், இந்தத் துறைமுகநகர் சவர்க்கார உற்பத்தித் தொழிலால் அறியப்பட்டது. நவீன தொழில் நுட்பம் 1880 களில் உருவானது. மிகவும் வெற்றிகரமான நிறுவனங்கள் யந்திர தொழிற்சாலைகள் மூலம் உலோக வேலைகளை செய்தனர்.19 ஆம் நூற்றாண்டின் மத்தி வரை, இந்த நகர தோடைத் தோப்புகள் விவசாயம் பாரம்பரிய முறைகள் மூலம் அரபு முஸ்லீம்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தன. இந்த நகரின் விவசாயம் 1850 மற்றும் 1860 களில், விவசாய இயந்திரங்கள் கொண்டுவந்த அமெரிக்க குடியேறிகள் மற்றும் யூதர்கள் மூலம் நடைபெற்றன. இங்கு மாதுளை உற்பத்தி மிகச் சிறப்பாக நடைபெற்று இருக்கின்றது. இங்கே வரும் வாய்ப்பு உங்களுக்கும் கிடைத்தால், 1906இல் கட்டப்பட்ட மணிக்கூட்டு கோபுரத்தை காணத் தவறாதீர்கள். ஒரு காலத்தில் இங்கு ஆட்சியிலிருந்த இரண்டாம் அப்துல் ஹமீத் நினைவாக 1906 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இது! ஓட்டோமான் பேரரசால் 18 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட அருங்காட்சியக மாளிகை ஒன்று இங்குள்ளது. தற்போது அது பொதுமக்கள் பார்வைக்கு மூடப்பட்டுள்ளது. 18ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகக் கூறப்படும் , யூதர்களின் வழிபாட்டு நிலையமான "சினகாக்" இங்குள்ளது. 1812 ஆண்டில் இந்த நகரின் கவர்னர் அபு நபூத் கட்டிய மகமூதியா பள்ளிவாசல் இங்கு காணக்கூடிய இன்னொரு கட்டடம்.



**தவறிய ராசிபலன்**

இங்கே எம்மைப் பெரும் ஆச்சரியத்தில் ஆழ்த்திய ராசிபலன் பாலத்தைப் பற்றிச் சொல்லியேயாக வேண்டும் நகரின் மத்தியில் பீக் பூங்காவையும் குடுமிம் சதுக்கத்தையும் இணைக்கும் ஒரு பாலம் இருக்கின்றது. இந்தப் பாலத்தின் ஆரம்பத்தில், 12 ராசிபலன் சின்னங்களும் கொண்ட கல்லாலான "மொசைக்" எம்மை வரவேற்கின்றது. "மொசைக்" என்பது பல நிறங்களைக் கொண்ட கண்ணாடிக் கற்களைக் கொண்டு இழைக்கப்படும் ஒருவகை அற்புத ஓவியம். இதை இங்கு (கோவில்களின் தரைகளில் கண்டு, இந்த வேலைப்பாட்டை பார்த்து வியந்திருக்கிறோம்.)முன்னொரு காலத்தில் இந்தப் பாலம் இருக்கும் இடத்தில் ஒரு சுனை இருந்ததாகவும், இது விரும்பியதைத் தரும் கிணறு என்று நம்பப்பட்டதாகவும் ஒரு கதை இங்குண்டு. இந்தக் கல் ஓவியத்தை இந்த நகரின் ஓவியர்கள்தான் வடிவமைத்துள்ளார்கள்.

மெடிட்ரேனியன் கடலைப் பார்த்தாற்போல நீண்ட மரக்கம்பம் பாலத்தின் ஒருபக்கம் உள்ளது. இதில் 12 ராசி பலன் சின்னங்களையும் இடைவெளி விட்டு உலோகத்தில் பொறித்திருக்கிறார்கள். யூத மதவாதத்தில் இந்த ராசி பலன் நம்பிக்கைக்கு இடமில்லையென்றாலும், எப்படியோ இது இங்கு வந்து சேர்ந்திருக்கின்றது. இந்தப் பாலத்தில் நின்று கொண்டு அந்தந்த ராசிக்காரர், அந்தந்தச் சின்னத்தைத் தொட்டு கொண்டு, நீங்கள் விரும்புவதை வேண்டிக் கொண்டால் அது நடந்து விடுமாம். இது சரியோ பிழையோ, நடக்குமோ நடக்காதோ, மனிதர்களுக்கு நம்பிக்கைதானே தும்பிக்கை. இதில்




வேடிக்கை என்னவென்றால், இந்தப் பாலத்தில் குறுக்கு நெடுக்காக பல தடவை நடந்தவர்கள் இந்த ராசிபலன் சின்னங்களை கவனிக்கவே இல்லை. இதுபற்றி எவரும் சொல்லவும் இல்லை. ஹோட்டல் அறைக்கு வந்து இணைய மேய்ச்சல் நடத்திய பின்னர்தான், இந்த விவகாரமே தெரியவந்தது. அட ஆசைப்பட்டதை தொட்டுக் கேட்டிருக்கலாமே என்ற அங்கலாய்ப்பும் எங்கள் மனதில் எழுந்தது...

*அடுத்த வாரம் பயணம் நிறைவு பெறும்.*

பகுதி VIII

# "இலங்கை இனத்துவ முரண்பாட்டு அரசியலில் கேலிச்சித்திரங்கள்"




எஸ்.தர்மதாஸ்


### ஓவியர் மாற்கு

ஓவியத்தில் பரீட்சையமுடைய எவரும் இன்று மாற்குவின் பாணியை சட்டென இனங்கண்டு கொள்வர். தூரிகைகள் இயற்கைக்குப் புதிய பரிமாணத்தை தருதல் வேண்டும். இயற்கை பற்றிய அகநோக்கப் பார்வை ஓவியத்தில் புதிய பரிமாணத்துடன் வெளிப்படல் வேண்டுமெனக் கூறும் மாற்குவின் கலை வளர்ச்சிக் காலம் பல்வேறு படி நிலைகளைக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம்.


தனது சிறு மகளிற்கு வேல் கொடுத்துத் தாயே போருக்கனுப்பும் சங்கப் பாடலொன்றின் சித்தரிப்பான "வீரத்தாய்", சூரியனை வரவேற்கும் அவாவும் மனிதனைச் சித்தரிக்கும் "விடிவு" மிக முக்கியமானது.

இருளிலிருந்து ஒளியை... சுதந்திரத்தை உன்னதத்தை அவாவுறும் எண்ணங்களை அது எம்மில் கிளர்த்துகிறது. பிரதானமாக பின்னணியிற் பரந்திருக்கும் கருஞ்சிவப்பு வர்ணம், அவற்றை அடைவதற்குரிய போராட்டம், இரத்தம் சிந்துதல், தியாகம் போன்றவற்றின் தவிர்க்க முடியாத தன்மையை எமக்குச் சுட்டுகிறது.

மாற்கு பிற்காலத்தில் வரைந்த ஓவியங்கள் கறுப்பு - வெள்ளை என்ற பிரிவில் அடங்குவன. இப்போக்கு 80 களின் இறுதியிலிருந்தே காணப்பட்டது. சமகால நிகழ்வுகளை பதிவு செய்யும் போக்கில் அவர் செயற்பட்டார். நேரடி அனுபவம் சிந்தனையில் ஊறி தூரிகையால் வெளிப்படுத்தப்படுகிறது. பெயரிலியான இவ் ஓவியங்கள் தாமே தம் கதையைச் சொல்வன. ரேகைகள் தேவைக்கிணங்க வளைந்தும், நெளிந்தும் வெளிப்படும் இப்போக்கு முந்தைய படைப்புகளில் அதிகம் புலப்படாத ஒன்று. மேலும் தமிழ் மக்களிற்கு எதிராக இனக்கலவரம் என்ற வடிவில் 1983யூலை இலங்கையில் வெடித்த வன்செயல் இலங்கை வரலாற்றில் மிகக் கறைபடிந்த சம்பவமாகும். குரூரமும், காடைத்தனமும் ஒன்றுக்கொன்று விஞ்சி நிற்கின்றன. சிங்கள மக்களிடம் உறைந்து கிடந்த வரலாற்றுக் குரோதமானது வன்செயல் எரிமலையால் வெடித்துச் சிதறி முன்னெப்போதும் காணாதளவு மரணத்தையும், அழிவையும் ஏற்படுத்தியது. இதன் கொடுரத்தை, வக்கிரத்தை, அழிவை ஓவியர் வெட்டப்பட்ட குழந்தை ஒன்றின் சடலத்தினிடை வைக்கப்பட்ட நாய்த்தலை அவற்றுடன் இணைந்தமைந்த பெண்ணின் புலம்பலைச் சொல்லும் "ஜூலை 83" எனும் தலைப்பில் வெளிப்படுத்தியுள்ளார். இது பேரினவாதத்தால் நிகழ்த்தப்பட்ட படுகொலைகளின் குரூரத்தை - அழுத்தி நசிக்கும் அதன் தன்மையை இயல்பாக வெளிக்கொணரும் வடிவமைப்புடன் சிறப்பாக ஓவியர் அமைத்துள்ளார். இவரது படைப்புகளில் 90வீதமானவை தத்துவ ரேகைகளாகவே காணப்படுகின்றன. இதில் ஓவியர் வர்ணப்பிரயோகங்களையெல்லாம் துயரங்களையும், வேதனைகளையும் காட்டுவனவாக அமைத்து அதில் வெற்றியும் கண்டுள்ளார்.



இவரின் போர் பதிவில் நான்கைந்து முட்டைக்கரு போன்ற வளைந்த வடிவத்தின் பார்வையினால் மண்மாதா தன்னைப் பயன்படுத்துமாறு மனிதர்களிடம் கோரிக்கை விடும் "மண்ணின் அழைப்பு" ஈழமண்ணின் தவிப்பை எடுத்தியம்புகிறது.



### ஓவியர் ஆசை இராசையா

மேற்கத்தியப் பாதிப்புகளில் இருந்து தன்னை பூரணமாகத் துண்டித்துக் கொள்ளாமல் இன்னும் அதனுடைய தாக்கங்களுடன் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் ஆசை இராசையா பிரமிக்கச் செய்யும் கற்பனை உலகத்திற்குரியவர். கனவுகளை நிறங்களாக கரைத்துப் பூசியது போலத் தோற்றம் தருபவை இவரது ஓவியங்களாகும். "சகல தரப்பினரும் ஓவியங்களை இரசிக்கக் கூடியதாயிருத்தல் வேண்டும். என்பதுடன் காட்சிக்கான கரு, காட்சியமைப்பு, வர்ணச்சேர்க்கை, வர்ணத்திணிவு என்பவற்றை நுட்பமான முறையில் கையாளுதல் வேண்டும்" என்பது இவரது அபிப்பிராயம். குறிப்பாக எஸ். ஆர் கனகசபையினால் தொடக்கிவைக்கப்பட்ட யாழ்ப்பாணத்து கலை மரபு தன் இரண்டாம் கட்ட வளர்ச்சியை ஆசை இராசையாவின் கரங்களில் பெறுகிறது.

குறிப்பாக ஓவியர்களில் போர்சார்பான வெளிப்பாடுகள் கூடுதலான பங்கினைப் பெற்றுள்ளது. ஓவியர்களின் மனநிலை வெளிப்பாட்டில் இது ஒரு ஏக்கம் நிறைந்த, குமுறல்கள் நிறைந்த படைப்பாகவே இருந்துள்ளது. ஆசை இராசையாசவின் ஒரு செவ்வியில் "நான் எனது வீட்டிற்கு திரும்பி வந்து பார்க்கும் பொழுது ஓவியம் வரைவதற்கு ஒரு உபகரணம் கூட இல்லை. நான் அப்படியிருந்தும் கிடைத்த காகித்ததை வைத்து வரைந்தது எனது வீட்டிற்கு முன்னால் இருந்த கைவிடப்பட்டிருந்த இராணுவக் காவலரனே" என்கிறார். பின்னர் **oil painting** ல் ஓர் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தின் சுவடாக அதாவது யாழ்ப்பாணத்தில் நம் கண்முன் காணும் வீதித்தடைகளை லாவகமான தனது கைவண்ணத்தில் இவர் படைத்துள்ளார். இதில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தின் வெளிப்பாடு எவ்வாறு இருக்குமோ அதாவது வீதித்தடைகள், பின்னே பட்டமரங்கள் என்பன அப்பிரதேச செழிப்பை விழுங்கிய, சந்தோசம் சிதைக்கப்பட்ட, துயரம் வெளிப்பட்ட ஒரு பார்வையை ஓவியர் நம் கண்முன் காட்டுகிறார். இன்று ஈழத்தில் காணும் காட்சிகள் ஒவ்வொன்றும் தனிச் சட்டங்களுக்குள் ஓவியமாக்கக் கூடியனவாக காணப்படுகிறது. ஏனெனில் இடிபாடுகளும், அழிவுகளும், வறுமையும் இப்பிரதேசமெங்கும் இயல்பு வாழ்வை நிலை குலைத்துள்ளன.

இங்கு ஓவியரின் "துவிச்சக்கர வண்டியில் விறகேற்றிச்செல்லும் மனிதன்" இவ்வுண்மைகளை, வறுமையின் கொடூரத்தை, போராட்ட வாழ்வில் மக்களின் அவலத்தை வெளிக்கொணர்கிறது. சமகாலத்தின் தரிசனங்களால், அனுபவங்களால் விளங்கும் இவ் ஓவியம் ஓவியரின் மிகச் சிறந்த படைப்புகளில் ஒன்றாகும்.



# எழுதும் பெண்களும் எழுதப்படும் பெண்களும் - 7

அ.ராமசாமி

மரப்பாச்சியிலும் பெண்ணுடல் கொள்ளும் மாற்றமே - 'முலை முளைத்தலின் கிளர்ச்சியே' கதைப்பொருள். முளைத்து வளரும் முலைகளைக் கவனிக்கவும் அது குறித்து உரையாடவும் ஓர் அந்தரங்கமான உறவொன்றை அவாவும் குழந்தமையைத் தாண்டிய பதின்ம வயதுப் பெண்ணொருத்தியின் தவிப்பைச் சொல்லும் கதை அது. தனக்கென நேரம் ஒதுக்கும் குடும்ப உறுப்பினர்கள் யாருமில்லாத அவளுக்கு அந்தரங்கமான உறவைத் தரும் ஒன்றாக வருகிறது அந்த மரப்பாச்சி. பரணிலிருந்து வேறு எதையோ தேடி எடுக்க முயன்ற அப்பாவின் கைக்கு அகப்பட்ட பொட்டலம் பற்றி ஞாபகங்களைக் கொண்டுவரும் பொருட்களோடு அந்த மரப்பாச்சியும் வந்தது என்று கதையைத் தொடங்கியுள்ளார் உமாமகேஸ்வரி

ஒரு மாயாஜாலப் புன்னகையோடு அதை அனுவிடம் நீட்டினார். சிறிய, பழைய மஞ்சள் துணிப்பையில் பத்திரமாகச் சுற்றிய பொட்டலம், பிரிபடாத பொட்டலத்தின் வசீகரமான மர்மத்தை அனு ஒரு நிமிடம் புரட்டிப் பார்த்து ரசித்தாள். உள்ளே என்ன? பனங்கிழங்குக் கட்டு? பென்சில் டப்பா? சுருட்டிய சித்திரக் கதைப் புத்தகம்? எட்டு வயது அனுவிற்கு இந்தப் புதிரின் திகில் தாங்க முடியவில்லை. அப்பாவின் ஆர்வமோ அது இவளுக்குப் பிடித்திருக்க வேண்டுமே என்பதாக இருந்தது. அவசர அவசரமாகப் பிரித்தபோது வெளியே வந்தது கரிய மரத்தாலான சிறிய பெண்ணுருவம். அதனுடைய பழமையே அனுவிற்குப் புதுமையானதாயிற்று.

தன்னோடு பேசவும் வினாக்களுக்கு விடைகளைச் சொல்லவும் ஆளற்ற தனிமையில் உறவாடும் ஒன்றாக மாறிவிட்ட மரப்பாச்சியைத் தனது அந்தரங்க உலகத்தின் கனவாக ஆக்கிக் கொண்ட கணங்களை எழுதும் உமா மகேஸ்வரியின் எழுத்து பெண் உணர்வுகளையும் செயல்பாடுகளையும் நுட்பமாகக் காட்டுகிறது

'எனக்கு யாரிருக்கா? நான் தனி.' அனுவின் முறையிடல்களை அது அக்கறையோடு கேட்கும். சுடுகாயைத் தரையில் உரசி அதன் கன்னத்தில் வைத்தால் 'ஆ, பொசுக்குதே' என்று முகத்தைக் கோணும். கொடுக்காப்புளிப் பழத்தின் கொட்டையில், உட்பழுப்புத் தோல் சேதம் அடையாமல் மேல் கறுப்புத் தோலை உரித்து நிலை மேல் வைத்தால் பகல் கனவும் பலிக்கும் என்கிற அனுவின் நம்பிக்கைகளுக்கு 'ஆமாஞ்சாமி' போடும். அவள் நிர்மாணிக்கிற பள்ளிகளில் மாணவியாக, தொட்டில்களில் பிள்ளையாக, சில நேரம் அம்மாவாக, கனவுலக தேவதையாக எந்த நேரமும் அனுவோடிருக்கும்.

மரப்பாச்சி புதிய கதைகளை அவளுக்குச் சொல்லும் போது, அதன் கண்களில் நீல ஒளி படரும். மரப்பாச்சி மரத்தின் இதயமாயிருந்தபோது அறிந்த கதைகள், மரம் வானை முத்தமிட்ட பரவசக் கதைகள், மழைத்துளிக்குள் விரிந்த வானவிற் கதைகள்... அவள் எல்லா நாளும் ஏதாவது ஒரு கதையின் மடியில் உறங்கினாள்.

வருடங்கள் அவளை உருகிப் புதிதாக வார்த்தன. நீண்டு, மினுமினுக்கிற கைகள் திரண்ட தோள்கள் குழைந்து, வளைந்த இடுப்பு, குளியல் அறையில் தன் மார்பின் அரும்புகளில் முதன் முறையாக விரல் பட்டபோது பயந்து, பதறி மரப்பாச்சியிடம் ஓடி வந்து சொன்னாள். அது தனது சிறிய கூம்பு வடிவ முலைகளை அவளுக்குக் காட்டியது.

தன்னை மரப்பாச்சியில் கண்ட கணங்களை மாற்றித் தனக்கான உலகத்தைத் தரும் இன்னொன்றாக - ஆணாக- மரப்பாச்சியை மாற்றிக் கொள்ளும் அந்தச் சிறுமிக்கு மரப்பாச்சியே எல்லாமுமாகிறது.

தன் அயர்விலும் ஆனந்தத்திலும் மரப்பாச்சி மங்குவதையும் ஒளிர்வதையும் கண்டு அனு வியக்கிறாள். தன்னை அச்சுறுத்தவும் கிளர்த்தவும் செய்கிற ததும்பல்களை மரப்பாச்சியிடமும் காண்கிறாள். கட்புலனாகாத கதிர்களால் தான் மரப்பாச்சியோடு ஒன்றுவதை உணர்கிறாள்.

மேசையில் இருக்கும் மரப்பாச்சியின் கண்கள் அவளைத் தாலாட்டும் மெல்லிய வலைகளைப் பின்னுகின்றன. அதன் முலைகள் உதிர்ந்து மார்பெங்கும் திடீரென மயிர் அடர்ந்திருக்கிறது. வளைந்து இடுப்பு நேராகி, உடல் திடம் அடைந்து, வளைந்த மீசையோடு அது பெற்ற ஆண் வடிவம் விசித்திரமாயும் விருப்பத்திற்குரியதாகவும் இருக்கிறது.

அது மெதுவாக நகர்ந்து அவள் படுக்கையின் அருகில் வந்தது. அதன் நீண்ட நிழல் கட்டிலில் குவிந்து அனுவை அருந்தியது. பிறகு அது மெத்தை முழுவதும் தனது கரிய நரம்புகளை விரித்ததும் அவை புதிய புதிய உருவங்களை வரைந்தன். துண்டு துண்டாக. அம்புலிமாமா கதைகளில் அரசிளங்குமரிகளை வளைத்துக் குதிரையில் ஏற்றுகிற இளவரசனின் கைகள். சினிமாக்களில் காதலியைத் துரத்தி ஓடுகிற காதலனின் கால்கள். தொலைக்காட்சியில் கண் மயங்கிய பெண்ணின் கன்னங்களில் முத்தமிடுகிற உதடுகள். தெருவோரங்களில், கூட்டங்களில் அவள் மீது தெறித்து , உணர்வைச் சொடுக்கிச் சிமிட்டுகிற கண்கள்

மரப்பாச்சி உருவாக்கித் தந்த கனவுலக வாழ்க்கையை விட்டு விலகி அது இல்லாத இன்னொரு வெளியில் நுழைய நேரிட்டபோது தனது உடலை வேறுவிதமாக உணர்கிறாள்.

## மகளிர் பகுதி




# அம்மாக்களுக்கும் அப்பாக்களுக்கும்:

## உடன்பிறந்தோரிடையே உறவுச் சிக்கலைத் தவிர்ப்பது எப்படி?

ஜி.லட்சுமணன்.

இரண்டு குழந்தைகள் இருந்தால் போதும்... வீடே இரண்டாகி விடும்' எனப்பெற்றோர் சிலர் புலம்புவதைக் கேட்டிருப்போம். குழந்தைகள் இருக்கும் வீடுகள் விடுமுறை நாள்களில் அதகளமாகிவிடும். இதற்குப் பயந்தே, 'இன்றைக்கும் பள்ளிக்கூடம் வைச்சிருக்கக்கூடாதா...' என்று புலம்பும் பெற்றோரும் இருக்கிறார்கள். நன்றாக விளையாடும் பிள்ளைகள், சில நிமிடங்களில் சண்டைபோட்டு அழுதுகொண்டிருப்பார்கள். ஆரம்பத்தில் இப்படிச் சண்டைபோடும் பிள்ளைகள், எதிர்காலத்தில் திரைப் படங்களில் வருவதுபோல பாசமலர்களாகவே மாறிவிடுவார்கள். சிலருக்கோ, வெறுப்பே தொடர்கதையாகிவிடும். கடைசிவரை ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் முறுக்கிக்கொண்டு நிற்பார்கள்.

"நட்பும் ரத்த பந்தமும் சேர்ந்ததே உடன் பிறந்தோர் உறவு. அதுவே பிற்காலத்தில், ஒருவருக்கொருவர் எப்படி நடந்துகொள்வார்கள் என்பதற்கான அடிப்படை. அந்த உறவைப் பலப்படுத்த வேண்டியது, பெற்றோரின் கடமை. அதை உணர்ந்து, குழந்தைப் பருவத்தில் அவர்களைக் கவனமாக வளர்க்க வேண்டும். முன்பெல்லாம், ஒரே வீட்டில் 10 பிள்ளைகளைக்கூட பக்குவமாக வளர்த்தார்கள். இன்றைக்கு ஒரு குடும்பத்தில் இரண்டு குழந்தைகள் இருப்பதே அதிசயமாகிவிட்டது. இரண்டு குழந்தைகளே இருந்தாலும் அவர்கள் பெற்றோரைப் படுத்தும்பாடு கொஞ்சநஞ்சமல்ல. வேலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும் பெற்றோர் பலருக்கு அலுவலக அழுத்தத்தைவிட, வீட்டில் பிள்ளைகளால்தான் அதிக மனஅழுத்தம் ஏற்படுகிறது. சில குடும்பங்களில், குழந்தைகள் அவ்வளவு சமர்த்தாக இருப்பார்கள். எல்லாம் வளர்ப்பு முறையில்தான் இருக்கிறது" என்கிறார் உளவியல் ஆலோசகர் சித்ரா அரவிந்த்.

பிள்ளைகளுக்கிடையே ஏற்படும் இப்படியான சண்டைகளை எப்படித் தீர்ப்பது? வழிமுறைகளை வழங்குகிறார் சித்ரா அரவிந்த். - குழந்தைகளின் வயது வித்தியாசம்தான் பெரும்பாலும் அவர்களுக்கிடையே வரும் சண்டைகளைப் பெரிதும் தீர்மானிக்கின்றன. அதிக வயது இடைவெளி இருந்தால் அதிகமாக சண்டையிட்டுக்கொள்வார்கள். காரணம், நீண்ட நாள்கள் அம்மாவுடன் இருந்த நெருக்கம் திடீரென மற்றொரு குழந்தைக்குக் கிடைக்கும்போது, மூத்த குழந்தைக்கு பொறாமையையும் கோபத்தையும் ஏற்படுத்தும். சில குழந்தைகளுக்கு உடன்பிறந்தவரையே பழிவாங்கும் எண்ணம்கூட உருவாகும். இன்னும் சிலர், தாங்கள் தனிமையாக இருப்பதாக உணர்ந்து, தற்கொலைக்குத் துணிவார்கள். அதனால், பிள்ளைகளுக்கிடையே மனஸ்தாபங்கள் ஏற்பட்டால், அவற்றை அவ்வப்போது களைந்துவிட வேண்டும்.

இரண்டாவது குழந்தை பெறப்போகும் தம்பதியினர், குழந்தை வயிற்றில் இருக்கும்போதே, மூத்த குழந்தையிடம் அந்தக் குழந்தை பற்றிய ஆர்வத்தை உண்டாக்க வேண்டும்.

புதிதாக ஒரு தம்பியோ, தங்கையோ வரப்போகிறார் உன்னோடு விளையாட கம்பெனி கிடைத்துவிட்டது" என்றும், நாங்கள் உன்னைக் கொஞ்சுவது போல, நீயும் ஒரு குழந்தையைக் கொஞ்சலாம்" என்றும் ஆர்வத்தைத் தூண்டலாம். தம்பிப் பாப்பாவுக்கு என்னவெல்லாம் வாங்கிக் கொடுக்கலாம்? என்று மூத்த குழந்தையிடமே கேட்கலாம். பிறந்த குழந்தைக்கு மூத்த குழந்தையை வைத்தே சின்னச்சின்ன உதவிகளைச் செய்யப் பழக்க வேண்டும். அந்தப் பவுடர் டப்பாவை எடுத்துவா', நீயே பவுடர் போட்டுவிடு' என்றெல்லாம் உதவி செய்ய ஊக்குவிக்க வேண்டும்.

முதல் குழந்தையைவிட பிறந்த குழந்தைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதிருக்கும். அந்தக் குழந்தைக்கென புதிய சலுகைகள் செய்யவேண்டியிருக்கும். அதை மூத்த குழந்தைக்குப் புரியவைக்க வேண்டும். உன்னையும் இப்படித்தான் வளர்த்தோம்...' என்று சொல்வதோடு, புகைப்பட ஆதாரங்கள் இருந்தால் அவற்றைக் காட்டலாம். ஆனால், சில குழந்தைகளுக்கு அதுவே ஏக்கத்தை ஏற்படுத்திவிடும். அதைச் சிலரால் வெளிக்காட்டத் தெரியாது. வழக்கம்போல பெற்றோரிடம் பேசாமல் இருப்பது, தனியாகப் போய் உட்கார்ந்துகொள்வது என இருந்தால், அதைப் பெற்றோர் கவனித்து நடந்துகொள்ள வேண்டும். புதிதாகப் பிறந்த குழந்தையைப் பார்க்க வருபவர்கள், அந்தக் குழந்தைக்கு ஏதேனும் வாங்கி வருவார்கள். அதனால், மூத்த குழந்தைக்கு அந்தக் குழந்தையின்மீது பொறாமை ஏற்படலாம். எனவே, சில பரிசுப்பொருள்களை வாங்கி, அதை மூத்த பிள்ளைக்குக் கொடுக்கலாம்.

குடும்பத்துக்கான வரையறை வடிவமைத்தல் **(Setting Family Rules)** - எது சரி, எது தவறு... தவறு செய்தால் என்ன தண்டனை என்பது பற்றியெல்லாம் தெளிவாகச் சொல்லிவிட வேண்டும். குழந்தைகள் அதை மீறும்பட்சத்தில், அவர்களுக்கு ஏற்கெனவே குறிப்பிட்டபடி என்ன தண்டனையோ அதைத் தவறாமல் வழங்க வேண்டும். அப்போதுதான் தவறு செய்தால் தண்டனை நிச்சயம் என்பது மனதில் பதியும்.

பங்கிடுவதில் சம உரிமை **(Equal Shared Parental Responsibility)** - அக்காதானே... அண்ணன் தானே... விட்டுக் கொடுக்கலாமே!' என்று சொன்னால், அவர்களுக்கிடையே விரோதம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உதாரணமாக, நான்கு சொக்லேட் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். இரண்டு குழந்தைகள் இருந்தால், ஒவ்வொருவருக்கும் சமமாகக் கிடைக்கும் என்பதை அவர்கள் மனதில் பதியவைக்க வேண்டும். அதேநேரத்தில், எல்லாப் பொருள்களையும் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்கிற எண்ணத்தையும் ஏற்படுத்தி விடக் கூடாது. பொம்மை போன்ற பிரத்யேகப் பொருள்களைப் பகிர்ந்துகொள்ளச் சொல்லி வற்புறுத்தக் கூடாது. அதற்குப் பதிலாக, 'அது அவளுடையது, தரமாட்டாள். உனக்கு வேறொன்று இருக்கிறது' என்பதைச் சொல்லி பழக்க வேண்டும். குறிப்பாக, மூத்த குழந்தை பயன்படுத்திய பொம்மையை அடுத்த குழந்தைக்குக் கொடுக்காமல், புதிதாக வாங்கிக் கொடுத்துவிட வேண்டும்.

ஒப்பிடுவதை நிறுத்துங்கள்! **(Stop Comparing)** - இரண்டு குழந்தைகள் இருக்கும்போது, எப்போதும் ஒரு குழந்தையை மட்டுமே முன்னிறுத்திப் பாராட்டுவது நல்லதல்ல. உதாரணமாக ஒருவர் எடுத்த மதிப் பெண்ணைக் குறிப்பிட்டு, அடுத்த குழந்தையை மட்டம் தட்டக் கூடாது. இது, அவர்கள் இருவருக்குள் பிரிவினை மற்றும் பொறாமையை உண்டாக்கும். ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு தனித்தன்மை இருக்கும். அதைக் கண்டறிந்து ஊக்குவிக்க வேண்டும்.



ஊக்குவிப்பு **(Positive Reinforcement)** - சண்டை குறித்த விவாதம் பெற்றோரிடம் வரும்போது, யார் விட்டுக் கொடுக்கிறார்களோ அவர்களுக்குப் பரிசு கொடுக்கலாம். அதேபோல, நல்ல செயல்பாடுகளில் அவர்கள் ஒற்றுமையாக ஈடுபடும்போது, இருவருக்கும் பரிசு கொடுக்கலாம். பிறர் முன்னிலையில் பாராட்டலாம்.


சண்டையிடும்போது கவனம்! - குழந்தைகள் விஷயத்தில் பெற்றோர் எப்போது தலையிட வேண்டும், எப்போது தள்ளியிருக்க வேண்டும் என்பதைத் தெரிந்திருக்க வேண்டும். குறிப்பாக, இரு குழந்தைகளிடையே சண்டை வரும்போது, உடனடியாக பெற்றோர் அதில் தலையிடக் கூடாது. அவர்களே ஒரு முடிவுக்கு வர நேரம் கொடுக்க வேண்டும். அதனால், எப்படிப் பேசுவது, பிரச்சினையை எவ்வாறு அணுகிச் சமாளிப்பது, விட்டுக்கொடுப்பது போன்ற குணங்களும் திறன்களும் வளரும். சண்டை எல்லையை மீறினால், இருவரையும் சிறிது நேரம் பிரித்துவிட்டு, கோப உணர்ச்சி குறைந்த பிறகு திரும்பவும் சந்திக்கவைப்பது நல்லது. இப்படிச் செய்வதன் மூலம் அடிதடியோ, காயங்களோ ஏற்படாமல் தடுக்க முடியும்.

மன வருத்தம் தெரிவித்தல் - தாங்கள் செய்த தவறுகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தைக் குழந்தைகளிடம் ஏற்படுத்த வேண்டும். தவறு செய்வது மனித இயல்பே. ஆனால், ஒருமுறை செய்த தவற்றை மீண்டும், மீண்டும் செய்யக் கூடாது என்பதைப் பிள்ளைகளுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும். அதன்மூலம் நல்லதொரு மனநிலையைக் குழந்தைகள் மத்தியில் வளர்க்கலாம். அத்துடன் 'நான் தவறு செய்துவிட்டேன்', 'தெரியாமல் பேசிவிட்டேன்' எனச் செய்த தவற்றுக்காக மன்னிப்பு கேட்பதுடன் மன வருத்தத்தையும் வெளிப்படையாக அறிவிக்க முன்வர வேண்டும். இதைச் செய்வதற்கு பெற்றோர் ஊக்கமளிக்க வேண்டும்.

நம்பிக்கையை வளர்த்தல் - பெற்றோர் மீது நம்பிக்கை இல்லையென்றால், அது எவ்வளவுதான் நல்ல ஆலோசனையாக இருந்தாலும் அதை மறுத்துவிடுவார்கள். எனவே, தங்கள்மீதான நம்பிக்கை கெடாமல் பாதுகாக்கவேண்டியது பெற்றோரின் கடமை. குழந்தைகளி டையேயான பிரச்சினையில் பெற்றோர் குறுக்கிடும்போது, யார் பக்கமும் சாயாமல், இருவர்மீதும் கோபப்படாமல், அவர்களது தேவை என்ன, அது ஏன் வேண்டும் என்பதை அவர்களிடமே கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். பின்னர், இருவருக்கும் பாதகமில்லாத முடிவை எடுக்க வேண்டும். அல்லது அவர்களாகவே எடுக்கக் கற்றுத்தர வேண்டும். இதனால் பெற்றோர் நமக்கு சாதகமான முடிவை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை அவர்களிடம் வளரும்.

பாலின வேறுபாடு கூடாது . கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் மரியாதை கொடுக்க வேண்டும். ஏனென்றால், அதுவே குழந்தைகளுக்கிடையே பிரதிபலிக்கும். வெவ்வேறு பாலினமாக இருந்தால், ஆண் குழந்தைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதும், பெண் குழந்தைகளைக் குறைவாக நடத்துவதும் கூடாது. பாரபட்சம் இல்லாமல் இருவருக்கும் உரிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். உதாரணமாக, ஆண் குழந்தைகளை நல்ல பள்ளியில் சேர்த்து படிக்கவைப்பது, பெண் குழந்தைகளை சாதாரண பள்ளிகளில் சேர்த்துவிடுவது போன்றவை பெண் குழந்தைகளிடம் தாழ்வுமனப்பான்மையையும், ஆண்களிடம் ஆதிக்க குணத்தையும் உருவாக்கும்.

வாரம் ஒரு சந்திப்பு! வாரம் ஒருமுறை ஒட்டுமொத்த குடும்பமும் ஒன்றாகக் கூடி, குழந்தைகளிடம் மனம் விட்டுப் பேச வேண்டும். அப்போது, அவர்களிடம் உள்ள பிரச்சினைகளைக் கேட்டு, அதற்கான தீர்வுகளைச் சொல்ல வேண்டும். இதனால், பிரச்சினைகள் எதுவும் அடுத்த கட்டத்துக்கு செல்லாது. ஒரு குடும்பத்தின் அமைதி மட்டுமல்ல... உலகத்தின் அமைதியே ஒவ்வொரு குடும்பத்திலிருந்துதான் தொடங்குகிறது. நம் குழந்தைகளிடையே தோன்றும் பிணக்குகள், சண்டை சச்சரவுகளைத் தக்க முறையில் கையாண்டு, அவர்களை அமைதியுடன் வாழச்செய்ய வேண்டும். அதற்கான பயிற்சிகளை நம் குழந்தைகளுக்கு வழங்க வேண்டும். குழந்தைகள் வன்முறையில் ஈடுபடும்போதோ, அவர்களைச் சமாளிக்க முடியாமல் போகும்போதோ, மன நல மருத்துவர் அல்லது ஆலோசகரை அணுக வேண்டும்" என்கிறார் சித்ரா அரவிந்த்.





# வைரமுத்து வாத்தியார் பேசுகிறார்

நாட்டில் உள்ளவர்களுக்கு அதுவும் விசேமாகத் தமிழர்களுக்கு எல்லாவிதத்திலும் கொடுமை நடைபெறுகிறதைப் பார்த்தால் எனது வயிறு எரிகிறதே! அரசியலில் நெருக்கடியும் நய வஞ்சகமும் நடைபெறுகிறது. காணிகள் பறிக்கப்படுகின்றன. தொழில் வாய்ப்பிலும் புறந்தள்ளப்படுகின்றனர். இப்படியே இன்னல்கள் அதிகரித்துக் கொண்டே போவதைப் பார்த்தால் என்ன நடக்கப் போகிறதென்று தெரியவில்லை!

இப்பொழுது கே.கே.எஸ் வீதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதொரு சம்பவம். அண்மைக் காலமாக ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் ஒரு பலூன் வியாபாரி தெற்கிலிருந்து வருகிறான். சிவதொண்டன் நிலையத்திற்கு முன்னால் நின்று ரூபா.20 பெறுமதியான பலூனை ரூபா.200 க்கு விற்கிறான். எல்லா வழிகளிலும் எமது மக்கள் இழிச்சவர்கள் என்பதற்கு உதாரணமாக பலர் வருகிறார்கள் எதுவித பேரமும் இல்லாது ஒன்று இரண்டு என்று வாங்கிக் கொண்டு போகிறார்கள். அதில் நகைச்சுவையும் மனவருத்தமும் என்னவென்றால் ஏதோ அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதைப் போல போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்துகிறோம் என்றும் பாராமல் தாம் வருகிற வாகனங்களை நிறுத்தி பலூன்களை வாங்கிக் கொண்டு போகிறார்கள்.

முதலில் இப்படிப்பட்ட பகல் கொள்ளைக் காரர்களை அனுமதிப்பது யார்? மாநகர எல்லைக்குள் அவன் நின்று விற்கிறான். இப்படியானவற்றைப் பார்ப்பதற்கு மாநகரசபையில் வருவாய்த்துறை அதிகாரிகள் இருக்கின்றனர். அவர்கள் தான் பார்த்து இப்படிப்பட்டவர்களை அகற்ற வேண்டும். அகற்றுகிறார்களா என்றால்? இல்லை. இதனால் பாதிக்கப்படுபவர்கள் மக்களே. வருவாய்த்துறை அதிகாரிகள் பல இடங்களில் நனைவதாகவும் கேள்வி? அது உண்மையா ? இல்லையா என வைரமுத்துவாகிய நான் அங்கலாய்க்கிறேன்.


அடுத்தது தற்போது வட மாகாணத்தில் பல இடங்களில் குறிப்பாக மாநகர எல்லைக்குள் பல இடங்களில் புதியதாகப் பல கம்பங்கள் தோன்றி வருகின்றன. கம்பம் நடப்பட்ட இடங்களில் கம்பத்தை நடுவதற்கு முன்னர் போய் தோண்டுகின்றவர்களிடம் "ஏன் இங்கு கிடங்கு வெட்டுகிறீர்கள்?" என்று கேட்டேன். "இதில் தண்ணீர் குழாய் ஒன்று தாழ்ப்பதற்காக வெட்டுகிறோம்" எனப் பதில் சொன்னார்கள். காலை எழுந்து பார்த்ததும் தான் அதில் கொங்கிறீற் போட்டு ஒரு கம்பம் நடப்பட்டு இருந்தது. ஏன் இவர்கள் கம்பம் நடப்போகிறோம் என்று சொல்லாமல் தண்ணீர் குழாய் பணி என்று பொய் சொன்னார்கள் என்று சிந்தித்தேன். தற்போது வரும் செய்திகளைப் பார்க்கும்போதுதான் தெரிகிறது அது போன்று பல கம்பங்கள் மாநகர எல்லைக்குள்ளும், வெளியேயும் பல இடங்களில் முறையாக அனுமதி பெறப்படாமல் எழுப்பப்பட்டிருக்கின்றன என்று. முதலில் மாநகர எல்லைக்குள் போடுவதற்கு முன் அனுமதி பெறுவதில் பல முறைகேடுகள் நடந்துள்ளதாகக் கேள்வி. பின்னர் பெருந்தெருக்கள் திணைக்களத்திடமும் அனுமதி பெற்றிருக்க வேண்டுமாம். அப்படியே சுற்றுச் சூழல் அதிகார சபையிடம், விமானப் போக்குவரத்து அதிகார சபையிடம் என்று பல அனுமதி பெற்ற பின்பே இதனை இவர்கள் செய்திருக்க வேண்டும். அவர்கள் அதனைச் செய்யவில்லை. தற்போது பார்த்தால் இவர்கள் இப்படி கம்பங்களை சட்டவிரோதமாக அமைப்பதற்கு அனுமதி கொடுத்தது யார்? அனுமதி இல்லாது இவர்கள் இக் கம்பங்களை அமைக்கக் கூடிய துணிவு இவர்களுக்கு எப்படி வந்தது? அத்தகைய துணிவைக் கொடுத்தது யார்? "நீ தைரியமாகச் செய். நான் பின்னால் இருக்கிறேன். ஆனால் எனக்குத் தருவதைத் தந்துவிட்டு என்ன வேணுமென்றாலும் செய். நான் கண்களை மூடிக் கொண்டு இருப்பேன்" என்ற தைரியத்தைக் கொடுத்தது யார்? யார் இந்தக் கறுத்த ஆடு?

இந்தக் கம்பங்கள் பற்றி ஒரு விவாதம் அண்மையில் தொலைக் காட்சி ஒன்றில் நடைபெற்றது. அதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர், மாநகரசபை உறுப்பினர் அவர். அனுமதி பெறாது கம்பங்கள் அமைத்தது சரி என்று வாதாடுவதுபோலத் தனது கருத்துக்களை அள்ளி வீசினார். பார்க்க அருவெறுப்பாக இருந்தது. முறையான அனுமதி பெறாது அமைப்பதற்கு அனுமதி வழங்கியதும் மட்டுமல்லாது அது சரி என வாதிடுகின்றார். அதைவிடக் கொடுமை அவர் அங்கு சமூகமளித்திருந்த பிற கட்சி மாநகர சபை உறுப்பினர் பொய் சொல்வதாக வேறு சொல்லி இருந்தார். தமது பிழைகளை மறைக்கவும், தமது கட்சி சார்ந்தவர்கள் செய்கின்ற பிழைகளை சரி என வாதிடும் அவர் தன்னைத் தெரிவு செய்த மக்கள் பற்றிச் சிந்தித்து ஒரு வார்த்தைதன்னும் சொல்லவில்லை என்பது எனக்குக் கவலையளிக்கிறது.

இப்படிப்பட்ட கம்பங்களில் பொருத்தப்படப்போகும் தொலைத்தொடர்புச் சாதனங்களும், கருவிகளும் பொது மக்களுக்குப் பல தீங்கினை விளைவிக்கப் போகிறதாம் என்று வைத்திய நிபுணர்கள் அச்சம் தெரிவித்திருக்கிறார்கள். ஒன்றல்ல, இரண்டல்ல பல அசௌகரியங்களை அது ஏற்படுத்துமாம். மனிதர்களின் சுபாவங்களைக் கூட இதிலிருந்து வெளிப்படும் அலைக்கற்றைகள் மாற்றிவிடும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. எனவே இது போன்றதொரு தொழில் நுட்பம் எமக்குத் தேவை தானா?

இன்னும் பல நாடுகளில் உல்லாசப் பயணங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட சொகுசு மினி பஸ்களை நாம் அன்றாடப் போக்குவரத்துக்குப் பாவித்து கொண்டு தலை நிமிர்த்த முடியாது ஆடு மாடுகள் போல அதில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். அப்படி இன்னும் ஒரு சாதாரண போக்குவரத்து ஒழுங்குகளைக் கூட மக்கள் சௌகரியத்துக்காக முறையாகத் திட்டமிட்டுச் செயலாற்ற முடியாதவர்களுக்கு இன்னும் அமெரிக்காவில் கூட முழுமையாக அமுல்படுத்தாத ஒரு தொழில் நுட்பம் தேவைதானா?

ஒரு சாதாரண படிக்காத பலூன் வியாபாரியிடமே ஏமாறும் சமூகமாக நாம் வளர்ந்து கொண்டு வருகிறோம். பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் தள்ளாடிக் கொண்டு இருக்கின்ற எம்மை நோக்கியே எல்லாவித குப்பைகளும் தெற்கிலிருந்து வருகின்றன. ஏன் கொழும்பில் விற்கமுடியாத எல்லாவகைத் தரங்கெட்ட பொருட்களும் யாழ்ப்பாணத்தில்தான் அதிகமாக விற்பதாக ஒரு பிஸ்கட் வியாபாரி சொன்னார். உண்மைதான் எமது சமூகத்தில் கழிவுகள் கூடிவிட்டன. தரம் அற்ற சமூகமாக நாம் மாறிவருவதால்தான் அதிகம் பிறர் எம்மை ஏமாற்றுகிறார்கள். நாங்கள் எதைப் போட்டாலும் தின்றுவிட்டுப் போகும் அனாதைகள். தலைமையற்ற தமிழர்கள் நாங்கள். ஆதரவற்றவன் அநாதைதானே?



# இணங்கி இருக்கும் கலை

– ஓஷோ



அன்பு என்பது அடுத்தவருடன் இணங்கி இருக்கும் கலை. தியானம் என்பது நீ உன்னுடன் இணங்கி இருத்தல். அவை ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள். தன்னுடன் எப்படி இருப்பது என்று தெரியாத ஒருவரால் மற்றவருடன் உண்மையாகத் தொடர்பு கொள்ள முடியாது. அவரதுஉறவுகள் அருவெறுக்கதக்கதாக, அசிங்கமானதாக, விபத்துப் போல, இருக்கும். ஒரு நிமிடம் எல்லாமும் நன்றாக இருக்கும், மற்றொரு நிமிடம் எல்லாமும் தவறாகி விடும். அது எப்போதும் மேலும் கீழுமாக சென்று வரும். அதற்கு ஆழமிருக்காது. அது மிகவும் கூச்சலிடும். அது உன்னை ஆக்ரமித்திருக்கும். ஆனால் அதில் எந்த லயமும் இருக்காது. அது உன்னை இயற்கையின் உயரங்களுக்கோ, இருப்பின் ஆழங்களுக்கோ எடுத்துச் செல்லாது. மற்றொரு வகையிலும் இது அப்படித்தான். மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாத ஒருவருக்கு தன்னுடன் தொடர்பு கொள்வதும் மிகவும் கடினமானதாக இருக்கும். ஏனெனில் தொடர்பு கொள்ளும் கலை என்பது அதேதான். உன்னுடன் நீ தொடர்பு கொள்வதோ, அன்றி மற்றவர்களுடன் தொடர்பு கொள்வதோ ஒன்றேதான். அதில் எந்த வித்தியாசமும் இல்லை.

இவை ஒரே நேரத்தில் சேர்ந்தே கற்றுக் கொள்ளப்பட வேண்டும். அவற்றை பிரிக்க முடியாது. மக்களுடன் இரு. தன்னுணர்வின்றி இருப்பது போல இருக்காதே. உணர்வுடன் இரு. புல்லாங்குழல் வாசிப்பது போல, ஒரு பாடல் பாடுவது போல மக்களுடன் தொடர்பு கொள். ஒவ்வொருவரும் ஒரு இசைக் கருவி போல எண்ணி மரியாதை கொடு, அன்பு செய், அவர்களை ஆராதனை செய். ஏனெனில் ஒவ்வொருவருக்குள்ளும் இறைமை ஒளிந்திருக்கிறது.

அதனால் மிகவும் கவனமாக இரு மிகவும் ஈடுபாட்டுடன் இரு. நீ சொல்வது என்ன என்பதில் கவனமாக இரு. நீ என்ன செய்கிறாய் என்பதில் கவனமாக இரு. சிறிய விஷயங்கள் உறவை சிதைத்துவிடும். சிறிய விஷயங்கள் உறவை மிகவும் அழகாக்கிவிடும். சில நேரங்களில் ஒரு புன்னகை கூட அடுத்தவரின் இதயத்தை உனக்கு திறந்துவிடும். சில நேரங்களில் உன்னுடைய கண்களில் இருக்கும் ஒரு தவறான பார்வை கூட அடுத்தவரின் இதயத்தை மூடி விடும். இதுதான் மிக மென்மையான செயல்பாடு. இதை ஒரு கலை. ஒரு ஓவியன் வண்ணத்திரையில் எவ்வளவு கவனமாக வரைவானோ அதைப் போலத்தான் இதுவும். ஒரு கோடு கூட வித்தியாசத்தை உண்டாக்கி விடும். ஒரு உண்மையான ஓவியனால் ஒரு சிறிய கோட்டின் மூலம் மிகப் பெரிய வித்தியாசத்தை கொண்டு வர முடியும். வாழ்க்கையை மிகவும் கவனத்துடன், மிகவும் மென்மையாக, நுணுக்கமாகக் கற்றுக் கொள்ள வேண்டும். அதனால் மற்றவர்களுடன் நாம் தொடர்பு கொள்வது என்பது ஒரு கண்ணாடி போல. நீ என்ன செய்கிறாய், அதை எப்படி செய்கிறாய், என்ன நிகழ்கிறது என்று பார். அடுத்தவர்களுக்கு என்ன நிகழ்கிறது, நீ அவர்களது வாழ்க்கையை துயரமானதாக மாற்றுகிறாயா?, நீ அவர்களுக்கு வலி கொடுக்கிறாயா?, நீ அவர்களுக்கு ஒரு நரகமாக மாறுகிறாயா?, அப்படி என்றால! விலகிவிடு. உன் வழியை மாற்றிக் கொள். உன்னைச் சுற்றி வாழ்க்கையை அழகாக்கு. உன்னை சந்திக்கும் ஒவ்வொருவரும் அதை ஒரு பரிசாக உணர வேண்டும். உன்னுடன் இருப்பதாலேயே ஏதோ ஒன்று பொங்கிப் பெருக வேண்டும், ஏதோ ஒன்று வளர வேண்டும், இதயத்துள் பாடல் மலர வேண்டும், மலர்கள் மலர வேண்டும். தனிமையில் இருக்கும்போது மௌனத்தில் இரு, நிசப்தத்தில் இரு, உன்னை நீயே கவனி.

எப்படி பறவைக்கு இரண்டு சிறகுகள் இருக்கிறதோ அது போல அன்பும் தியானமும் உனது இரண்டு சிறகுகள் ஆகட்டும். அவை இரண்டிற்கும் ஒத்த லயத்தை உருவாக்கு. அப்போது அவை இரண்டும் ஒன்றுகொன்று பிளவுபடாது, ஒன்றையொன்று வளப்படுத்தும், ஒன்றுகொன்று ஊட்டப்படுத்தும், ஒன்றுக்கொன்று உதவும். இதுதான் உன் பாதை. அன்பும் தியானமும் ஒருங்கிணைந்தது.



# அந்த ஒரு நிமிடம்...

எஸ். கணபதி

வானம் கறுத்துக் கிடந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாய் சிறு துளிகள் நிலத்தை நோக்கி விழத்தொடங்கியிருந்தன. புழுதி மண்ணிலிருந்து எழுந்த வேண்டாததொரு மணம் மூக்கில் நுழைந்து அரித்துக் கொண்டது. செல்லத்துரை பலமாகத் தும்மினார். அவருக்குச் சிறு வயதிலேயே இருந்து புழுதி மணம் பிடிப்பதில்லை. கோடை மழைக்காலம். கொல்லைப் புறத்திலிருந்த மாடுதான் விடாமல் கத்திக் கொண்டிருந்தது. சினைக்காலத்தில் கத்துவதைப்போல மழை வரும் அறிகுறியைக் கண்டாலும் மாடு கத்துவது இயல்பென்றைப் புரிந்து கொண்டவர் செல்லத்துரை.

"இண்டைக் கொரு நாள்தான் லீவு. இண்டைக்கும் ரீவி பாக்கேலாமல் அன்ரனா விழுந்து போய்க் கிடக்கு" எனச் சினந்து கொண்டாள் செல்லத்துரையின் இளையவள். "இண்டைக்கும் திருத்தமாட்டினம் போலை கிடக்கு. நான் சிவமதியின்ரை வீட்டைப் போய் ரீவி பாக்கப் போறன்" என ஒற்றைக் காலில் நின்றாள் அவள். "வாறன் பொறு. அவவுக்கு படம் பாக்கிறதிலை அத்தினை கெடு. படிக்கக் கனக்கக் கிடக்கெல்லே. போய் அதைப் பார்" செல்லத்துரைதான் சத்தமிட்டார்.

"அண்ணா கடையாலை வரட்டும். அவரிட்டைச் சொல்லி அன்ரனாவைத் தூக்கிக் கட்டிப்போட்டு நான் படத்தைப் பாப்பன். கன நாளைக்குப் பிறகு விஜயின்ரை நல்ல படம் ஒண்டைப் போடினம். அதைப் பாக்காமல்.." அவள் மேசையிலிருந்து கண்களைக் கசக்கியபடி கதைக்கத் தொடங்கினாள்.

செல்லத்துரை குடும்பம் சிறிய தென்றாலும் பொருள் பண்டத்துக்குக் குறைவில்லாத குடும்பம் என்று பெயர் பெற்றது. செல்லத்துரைக்கு வருவாய் தோட்டங்களிருந்தும், அவற்றோடு ஆடு மாடுகள் வளர்ப்பதிலிருந்தும் கிடைத்தது. பிள்ளைகள் இரண்டில் மூத்தவன் மகன். ஊர் சந்தியில் ரெலிபோன்கடை வைத்திருக்கிறான். இரண்டாவது மகள். அவள் ஓ.எல் சோதனைக்காகப் படித்துக் கொண்டிருக்கிறாள்.

மகளைச் செல்லப்பிள்ளையாக வளர்த்து வருகிறார் அவர். அவள் கேட்டதையெல்லாம் மறுக்காது வாங்கிக் கொடுப்பார். அந்த விடயத்தில் தான் பிழை விடுவதாகச் செல்லத்துரைக்குத் தெரிந்தாலும், மனம் அதனை நிறுத்த மறுப்பதாகவே அவர் உணர்ந்து கொண்டார். "உப்பிடிக் கெட்ட பழக்கத்தைப் பழக்கிறியள். எங்கனும் அவள் தனக்கு இப்பிடித்தான் மாப்பிளை வேணும் எண்டு கேப்பள். அப்ப என்ன செய்வியள்" என்று செல்லத்துரையின் மனைவி அவரை நையாண்டி செய்வதுபோல அடிக்கடி கேட்பாள். "அதையும் பாப்பம்" என்று மிடுக்காகத் தன்னை விட்டுக் கொடுக்காது செல்லத்துரை பதில் சொல்வார்.

செல்லத்துரையின் மகள் யன்னலுக்குள்ளால் மதில் பக்கத்தை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டாள். படிப்பில் மனம் ஏவுவதாக இல்லை. "விஜயின்ரை படமாம். இண்டைக்கு வகுப்பிலை எல்லாரும் கதைச்சவை. பாக்க வேணும் எண்டு. அதுக்காக எல்லாரும் வீட்டு வேலையை வேளைக்கே செய்ய வேணும் எண்டு இடைவேளையிலையே செய்யத் துவங்கிவிட்டினம். எனக்குத்தான் பாக்கக் கிடைக்காது போலை கிடக்கு." வீட்டு வாசல் வரை சென்று கூரையில் பொருத்தப்பட்டிருந்த அன்ரனாவை ஒரு முறை அண்ணாந்து பார்த்துக் கொண்டாள். "அண்ணா வந்தால் அவனிட்டைக் கெஞ்சி மண்டாயாவது அன்ரனாவைச் சரிப் படுத்திப் போட வேணும்" மனம் அங்கலாய்த்துக் கொண்டிருந்தது.



மழை சற்று அதிகமாகிக் கொள்ள காற்றும் சற்றுப் பலமாக வீசத் தொடங்கியது. காற்றுக்கு மின்சார வயர்கள் ஒன்றோடு ஒன்று உரசின. அதனால் மின்சாரமும் விட்டு விட்டு வந்து கொண்டிருந்தது. "கறண்டும் வாறன் போறன் எண்டபடி இருக்கிது. எனக்குத்தான் படம் பாக்கிற பலனில்லைப் போல" அவள் வருத்தப்பட்டுக் கொண்டாள்.

**மாலை 5மணி 32 நிமி. 22 செக்.**

வானம் மப்பும் மந்தாரமுமாய். இருட்டிக் கொள்ள.. சில வீடுகளில் மின்சார விளக்குகள் எரியத் தொடங்கிவிட்டன. செல்லத்துரை வீட்டு மதில் கதவு திறந்த சத்தம் கேட்க, வெளியே எட்டிப்பார்த்தாள் செல்லத்துரையின் மகள். "அண்ணா வந்திட்டார்" அவள் துள்ளிக் குதித்தாள்.

"இண்டைக்கு ஏன் வேளைக்கு" அவனைச் செல்லத்துரை ஏறிட்டுப் பார்த்தார். "உவள் தங்கச்சி இரண்டு மூண்டு தரம் போன் பண்ணிப் போட்டாள். அதுதான் வந்தனான்" அவன் சைக்கிளின் ஸ்ரான்டைத் தட்டிவிட்டபடி பதில் சொன்னான்.

"அவவுக்கு ரீவி பாக்கிற அவசரம் என்ன?. அப்ப ஆர் கடையிலை நிக்கினம்." செல்லத்துரை பல்லை நறுவிக் கொண்டார்.

"ஒரு சிநேகிதப் பெடியன் வந்தவன். அவனை நில்லடா எண்டு சொல்லிப் போட்டு வந்தனான். உடனை போவேணும்" அங்கிருந்த அலுமினிய ஏணியைக் கையில் எடுத்தபடி வீட்டுக் கூரைக்கு மேல் ஏறுவதற்கு ஆயத்தமானான்.

**மாலை 5மணி 40 நிமி. 42 செக்.**

"பொறன் கொஞ்சம் மழை விட்டட்டன். அவசரப் படாதை" செல்லத்துரை மகனைப் பார்த்துச் சொன்னார்.

"இல்லை அவன் வேறை அலுவலாப் போகக் கடைக்கு வந்தவனை மறிச்சு விட்டிட்டு வந்தனான். சரி இல்லை. போய் அவனை விட வேணும்" செல்லத்துரை மகன் அவரின் பேச்சைக் கேட்பதாக இல்லை.

"நிலமும் வழுக்கிது. ஏணியிலையும் மழைத்தண்ணி கிடக்கு. சறுக்கும். கவனம்" செல்லத்துரை ஏணியைப் பிடித்தபடி அண்ணார்ந்து பார்த்தார். மழை விட்டதாக இல்லை. தாழ்வாரத்துக் கூரையிலிருந்து மழைத்துளிகள் சொட்டுச் சொட்டாக விழுந்து கொண்டிருப்பதைக் கண்கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தார் செல்லத்துரை. அவரது நெஞ்சில் முளைத்திருந்த மயிர்களில் படிந்திருந்த மழைத்துளிகளில் தெரு விளக்கின் ஒளிக்கற்றைகள் பட்டுத் தெறித்துக் கொண்டிருந்தது. குளிர் காற்றினால் அவர் கைகள் படபடத்தன.



**மாலை 5மணி 50 நிமி. 12 செக்.**

வீட்டுக் கூரைக்கு அப்பால் சரிந்து விழுந்திருந்த அன்ரனாவை நிமித்திக் . கட்டுவதற்காக எடுத்த கம்பி வழுக்கியது. செல்லத்துரையின் மகன் மீண்டும் முயற்சி செய்தான். மழை நீரில் நனைந்து கிடந்த கல்வனைஸ் குழாய் வழுக்கியது.

"அண்ணை சரியோ. ரீவி யைப் போட்டடே?" அவள் கேட்டதையும் பொருட்படுத்தாது அவன் அன்ரனாவைக் கட்டிக் கொண்டான். ரீவி வயரை அன்ரனாவோடு இணைத்தான். "சரி இனிப் போட்டுப் பார்"அவன் பெலமாகச் சத்தமிட்டான். வீட்டுக்குள்ளே இருந்து ரீவி சத்தம் கேட்டது.

**மாலை 5மணி 51 நிமி. 37 செக்.**

அன்ரனாக் குழாயை கையால் ஒரு முறை ஆட்டிப் பார்த்து விட்டு கீழே இறங்க ஆயத்தமானான் செல்லத்துரையின் மகன். கீழே ஏணியை வலு இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு நின்றார் செல்லத்துரை. இறங்குவதற்காகக் காலை எடுத்து ஏணியில் வைத்தான் அவன். கால் இடறுப்பட பாய்ந்து அன்ரனாக் குழாயைப் பற்றிக் கொண்டான். அன்ரனாக் குழாய் கட்டவிழ்ந்து மின்சார வயர்களில் மேல் விழுந்தது.

"ஐயோ!" பெலமாக இரு குரல்கள் ஒருமித்துக் கேட்டன. படார் என அலுமினிய ஏணிச் சத்தம் விழுந்த சத்தத்தைத் தொடர்ந்து மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

"ஐயோ அப்பா! அண்...ணா!" செல்லத் துரையின் மகளுக்குத்தொண்டைக்கு வெளியே வார்த்தைகள் வர மறுத்தன.

**மாலை 6மணி 04 நிமி. 00 செக்.**

"மின்சாரம் தாக்கியதால் தந்தையும் மகனும் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர்". என்ற செய்தி தொலைக் காட்சியில் ஒளிபரப்பானது.

"என்னெண்டாலும் மழை நேரம் பாத்துச் செய்திருக்க வேணும். அன்ரனா பைப்பும் இரும்பு. ஏணியும் அலுமினியம். அதோடை அந்தாளின்ரை காலிலை செருப்பும் இல்லையாம்" தொலைக்காட்சிச் செய்தியைப் பார்த்துக் கொண்டிருந்தவர் தான் ஏற்கனவே கேள்விப்பட்ட செய்தியை மற்றவரோடு பரிமாறிக் கொண்டார்.



# அங்கதன் பதில்கள்

■ **இந்த சமுகத்தில் பொய்க்கு இருக்கும் மதிப்பு உண்மைக்கு இருப்பதில்லையே! ஏன்?**

● பொய் வெல்லக்கூடும் ஆனால் நிலைக்காது. உண்மை தோற்கக்கூடும் நிலைக்கும்.

*துஷ்யந்தன், யாழ்ப்பாணம்.*

■ **ஈரடியாலே மூவுலகையும் அசைத்தவர் கிருஷ்ண பரமாத்மா தானே!?**

● அது எனக்கு தெரியாது. ஆனால் ஈரடியாலே மூவுலகை மட்டுமல்ல அனைத்துலகையும் அசைத்தவர் திருவள்ளுவர்.

*புனிதன், மட்டக்களப்பு.*

■ **கவிஞனா, இசையமைப்பாளரா, பாடகரா மேலானவர்?**

● கவிஞரின்றி பாடகரில்லை இசையின்றி பாடலில்லை, பாடகரின்றியும் பாடலில்லை.

*வினோதா, வயாவிளான்.*

■ **குரு மாற்றம், சனி மாற்றம், ராகு கேது மாற்றம் இவைகளால் தமிழினத்திற்கு நன்மை ஏற்படுமா?**

● அதென்னமோ தெரியவில்லை, ஆனால் ஆட்சி மாற்றத்தால் மட்டும் நன்மையே கிடையாது என்பது மட்டும் உண்மை.

*கதிர், யாழ்ப்பாணம்.*

■ **இந்த உலகத்திலிருந்து முற்றாக ஒழிக்க முடியாதவை எவை?**

● வஞ்சம், ஊழல், போதை ஏனென்றால் இம் மூன்றிலும் மூல இயக்குநர்கள் அரசியல்வாதிகளே!.

*அன்ஸீர், திருகோணமலை.*

■ **ஆமை வேகம், நத்தை வேகம் இவற்றை விடவும் வேகம் குறைந்தது ஏதும் உண்டா?**

● ஏன் நமது அரசியல் வாதிகளின் செயல் வேகத்தை மறந்து விட்டீர்கள்.

*பிரதீபன், காக்கைதீவு.*

■ **தந்தை செல்வா இன்றிருந்தால்...?**

● தமிழரசுக் கட்சி மாநாட்டில் மண்டபத்திற்கு வெளியே நின்று போராட்டம் நடத்திய மக்களுடன் அவரும் ஒருவராக இருந்திருப்பார்.

*கஸ்தூரி, கிளிநொச்சி.*

■ **பசி வந்தால் பத்தும் பறந்து விடும் என்கிறார்களே உண்மைதானா?**

● இதென்ன அதிசயம் பயம் வந்தால், பதவி வந்தால் சிலருக்கு அனைத்துமே பறந்துவிடும் மட்டுமல்ல மறந்தும் விடும் தம்பி!

*கிரிதரன், வவுனியா.*

■ **நமது ஓட்டோ ஓட்டுநர்களில் தமது வாகனங்களின் பின்னால் எழுதியுள்ள வாக்கியங்கள் எப்படியுள்ளன...**

● பல சொற்பதம் கொண்டவை. சில அற்புதமானவை.

*நாதன், அளவெட்டி.*

■ **ஜனநாயகம் என்றால் என்ன அர்த்தம்?**

● பண நாயகத்துக்கு வக்காலத்து வாங்கும் அரசியல் அமைப்பு என்பதும் அர்த்தமாக இருக்கலாம்...

*பஸீர், மட்டக்களப்பு.*

■ **வாழ்க்கை என்பது சிறுகதையா? தொடர்கதையா?**

● இரண்டுமல்ல... நிஜக்கதை... இந்தக் கதைக்கு யாவும் கற்பனை என முடிவில் எழுதிவிட முடியாது.

*அலோசியஸ், முல்லைத்தீவு.*

■ **பகல் கொள்ளை என்றால் என்ன அங்கதனே!**

● அரசியல் வாதிகளும், அதிகாரிகளும், பெரும்பாலும் செய்யும் 'நாகரீகமாக' திருட்டு. இதனை ஊழல் மோசடி, லஞ்சம் என்றும் அழைப்பர்.

*கனிமொழி, வவுனியா.*

■ **நான் எனது சமூகத்திற்கு ஏதாவது வகையில் நற்பணியாற்ற விரும்புகிறேன் என்ன செய்யலாம் சொல்லுங்கள்!**

● அரசியல் வாதியாகாமல் இருந்தால் போதும் அதுவே மிகப் பெரிய நற்பணி!

*மதி, நெடுங்கேணி.*

■ **இலங்கைத் தேசம் சிங்களவர்களுக்கானதே என ஞான சார தேரர் கண்டியில் பேசியிருக்கிறாரே?**

● ஞானமற்ற தேரரின் சாரமற்ற பேச்சு அது!.

*இக்பார், மஸ்கெலியா.*

■ **பாடசாலைகளில் மதக் கல்வி அவசியமா?**

● மாணவர்களுக்கு மதம்பிடிக்குமளவிற்கு மதக் கல்வி என்பது ஆபத்தானது. அது மனிதத்தை அழித்து விடும்.

*லக்ஸ்மி, யாழ்ப்பாணம்.*

■ **நிதியமைச்சர் ஒவ்வொரு வரவுசெலவுத்திட்டத்தின் மூலமும் எதைச் சொல்ல வருகிறார்?**

● கடன் வாங்கியெண்டாலும் கல்யாணச்சாப்பாடு போடுவோம் என்பதை சொல்லிவிடுகிறார்!.

*தாசன், கைதடி.*

■ **கல்முனைக் கலவரம் எந்த நிலையில் உள்ளது?**

● அணைந்துவிடவில்லை தணிந்தது போல் கனன்று கொண்டிருக்கிறது. ஊதிப்பெருக்க வைக்க அரசியல் வாதிகளும் மதவாதிகளும் தருணம் பார்த்திருக்கிறார்களா?

*கார்த்திகா, அச்சுவேலி.*

■ **எல்லாப்பிரச்சினைக்கும் நமது தமிழ்த் தலைவர்கள் அறிக்கை விடுவதோடு நின்றுவிடுகிறார்களே!**

● அவர்களுக்குத் தெரிந்ததை செய்கிறார்கள். அதற்குமேல் எதனையும் செய்ய அவர்களின் கையாலாகாத் தனம் அனுமதிக்காதே!

*ஹஸ்மிரா, ஏழாலை.*

■ **இனவெறியை விட மதவெறி படு மோசமானது என்கின்றேன் நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?**

● ஒப்பக்கொள்கிறேன். இனவெறி மனிதரை அழிக்கும், மதவெறி மனிதத்தையே அழித்துவிடும்.

*பாத்திமா, ஏறாவூர்.*

■ **நம் நாட்டில் ஜனாநாயக தர்மம் எந்த நிலையில் உள்ளது அங்கதரே!**

● மக்கள் விரும்பும் நிலையில் இருக்க வேண்டிய ஜனநாயகம், மக்கள் வருந்தும் வகையில் உள்ளது தம்பி.

*சிவா, பருத்தித்துறை.*

■ **தமிழ் ஊடகத்துறை மொழியை வளர்க்கின்றதா?**

● மெற்றோ நியூஸ், மாலை எக்ஸ்பிரஸ், தமிழ்மிரர் யூனியஸ், யூனியர் விகடன், டாக்டர் விகடன், கிச்சன் விகடன், கெல்த்... இவையெல்லாம் தமிழில் வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகளின் பெயர்கள். நீங்களே பதிலை யோசியுங்கள்.

*புனிதா, யாழ்ப்பாணம்.*

■ **இரண்டு இலக்கியப் படைப்பாளிகள் சந்தித்துக் கொள்ளும்போது என்ன பேசிக்கொள்வார்கள்?**

● அவர்கள் விமர்சகர்களாக மாறி இன்னொரு படைப்பாளியையோ அவரது படைப்புக்களையோ மதிப்பீடு செய்கிறார்கள்,

*ஜமுனாநந்தன், வட்டுக்கோட்டை.*

■ **அறிவியலாளர்கள் எப்போது அவமானத்துக்குள்ளாகிறார்கள்?**

● அறிவியல் அழிவியலாளர்களால் பயன்படுத்தப்படும்போது.

*மயூரன், அராலி.*



**அங்கதனிடம் பதில்பெற வேண்டுவோர் உங்கள் கேள்விகளை சரியான பெயர் முகவரியுடன் தெளிவாக எழுதி newsdeepam19@gmail.com என்ற முகவரிக்கோ அல்லது இல.10, வில்வந்தெரு ஒழுங்கை கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

**தூரமான கேள்விகளை அனுப்புவோருக்கு 500 ரூபா பணப் பரிசில் வழங்கப்படும்.**

பெயர் :.......................................

முகவரி :.......................................

:.......................................

தொலைபேசி இல. .............................

# அவர்கள் சொன்னதும் ஐயா சொல்வதும்

● **'விக்னேஸ்வரன் மீண்டும் கூட்டமைப்பில் இணைவதற்கு எமது இனத்தின் தலைமைத்துவ வித்துவக் காய்ச்சல் வாய்ப்பளிக்காது'**
**– சீ.வி.கே.சிவஞானம்**

■ அதென்னடாப்பா தலைமைத்து வித்துவக காய்ச்சல்... எந்த வித்துவத் திறனும் அவர்களின் தலைவர்களுக்கு வித்துவக்காய்ச்சல் இருக்குது எண்டால் வேடிக்கைதான். உது வித்துவக் காய்ச்சலல்ல... பதவிப்பித்து... தலைமை தாங்க தகுதியில்லாதவர்களிடையே இருக்கும் பதவி ஆசை வெறி... யாரையும் அல்லது எதனையும் அங்கீகரிக்காது.

● **தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற மிக மோசமான அரசியலை கூட்டமைப்பினர் செய்து வருகின்றனர்.**
**– வரதராஜப் பெருமாள் கூறுகிறார்.**

■ அவர்கள் மக்களை ஏமாற்றுகிற கேவலமான அரசியலை செய்கிறார்கள் என்று குற்றம் காட்டும் நீங்கள் முதலாவதாக இருந்தபோது உரிமைப்போராட்டத்தையே காட்டிக்கொடுக்கிற கேவலமான அரசியலைத்தானே நடத்தினீங்கள்... இதுவும் கேவலமான செயல்தானே?

● **முஸ்லிம்களின் உதவியின்றி தமிழருக்கு தீர்வ கிட்டாது – ஹாரிஸ் எம்.பி கூறுகிறார். சேய்தி**

■ முஸ்லிம்களின் உதவியில்லாமல் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அழித்திருக்க முடியாது என்று அரசாங்கத்தை சேர்ந்தவர்கள் பலர் வெகு காலத்திற்கு முன்பே சொல்லி இருக்கிறார்களே ஹாரிஸ்... இதுவும் அனைவருக்கும் தெரியும்...

● **இலங்கைத் தேசம் சிங்களவர்களுக்குரியது காவிகளின் உதவியுடன் சிங்கள அரசை அமைப்போம் – ஞானசார தேரர் கூறுநரை– செய்தி**

■ பாவம் தேரருக்கு பௌத்த சிங்கள பேரினவாத வெறி தலைக்கேறிவிட்டது போதும்... அரச வாழ்வே வேண்டாம் என்று அரண்மனையை விட்டு வெளியேறிய புத்தபகவானை வைத்து அரசியல் நடத்த வெளிக்கிடுவது அவரை அவமதிப்பதாகாதா?

● **கம்பரெலியா திட்டத்தின் ஊடாக அரசு தமிழ் மக்களை ஏமாற்றுகின்றது. –**
**அங்கஜன் எம்.பி.**

■ நீங்களும் அரசின் ஒரு அங்கம் தானே! நீங்களே இப்படிச் சொன்னால்... உங்களையும் அரசு ஏமாற்றுகின்றது என்ற தானே அர்த்தம். தெரிந்தும் ஏமாளியா இருக்கிறீங்களா? அல்லது அரசுடன் சேர்ந்து தமிழ் மக்களை கோமாளிகள் ஆக்குகிறீர்களா? கடவுளுக்கே வெளிச்சம்!



-காவலூர் ஞானம்-

# வரும் ஆனால் வராது...


## (கிரிக்கெட்)



எதிர்பார்ப்புகளைப் பொய்ப்பிப்பதில் கிரிக்கெட் விளையாட்டுக்கு நிகர் கிரிக்கெட்தான் போலும். இறுதி மோதலுக்கு வரும் என எதிர்பார்த்த இங்கிலாந்து அணி தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டுவிடுமோ என்ற நிலை முதலில் வந்தது. தட்டுத்தடுமாறிய இங்கிலாந்து அடுத்தடுத்த வெற்றிகளுடன் தப்பிக் கொண்டது. அடுத்துப் பெரிதாக எதிர்பார்க்கப்பட்ட அணி இந்தியா. நேற்று (09.07.2019 - புதன்) நடந்து முடிந்த நல்லதொரு "திரில்லரில்" இந்தியாவை நொக் அவுட்டாக்கி, அதிர்ச்சி அலைகளை எழுப்பி உள்ளது நியூசிலாந்து. இத்தனைக்கும் நியூசிலாந்து 239 ஓட்டங்களை மாத்திரமே ஆடியெடுத்திருந்தது. இந்தத் தொடரில் 5 செஞ்சரிகள் விளாசிய ஷர்மா, ஆட்ட இயந்திரமான கோலி உட்பட மூவர், ஆளுக்கொரு ஓட்டத்துடன், வெளியேற்றபபட்டபோது, ஆரம்பமாகியது இந்தியாவின் பெருவீழ்ச்சி! ஜடேஜாவும்,டோனியும், இந்தியாவுக்கு வெற்றியைத் தேடிக் கொடுக்கப் போகிறார்கள் என்று ஒரு கட்டத்தில் இருந்த ரசிகர்கள் நம்பிக்கை, அடுத்தடுத்து இருவரும்அவுட்டாகிய போது , ஒரேயடியாகத் தகர்க்கப்பட்டது. வரும் என்றிருந்த வெற்றிக் கிண்ணம் இந்திய அணிக்கு வராமலே போய்விட்டது. 2015இல் சாம்பியன் மோதலில் விளையாடிய நியூசிலாந்து அணி, இரண்டாவது தடவையாக 2019இலும் இறுதியாக மோதும் ஓர் அணியாகி இருக்கின்றது. இந்தத் தடவையாவது இவர்கள் கிண்ணத்தைக் கைப்பற்றுவார்களா?







### மழை வில்லனாகுமோ?

இன்றைய நிலையில் , காலநிலை அறிவித்தல் இங்கிலாந்து அணியை கொஞ்சம் நிலை தடுமாற வைத்துள்ளது. வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் அடிக்கடி மழைபெய்யலாம் என்ற வானிலை அறிக்கை, இங்கிலாந்துக்கு விபரீதமாகமாக அமையக் கூடியது. வியாழனும் வெள்ளியும் போட்டி இடம்பெற விடாமல், முரண்டு பிடித்து மழை பெய்தால், முதலாம் இடத்திலிருக்கும், அவுஸ்திரேலியாதான் இறுதி மோதலுக்கும் தெரிவாகும் என்கிறார்கள். உலகக்கோப்பைக்கான தென்ஆபிரிக்கா அணியில் விளை யாடிய இம்ரான் தாஹிர், டுமினி, அணித் தலைவர் டு பிளிசிஸ் ஆகியோர் இந்தத் தொடருக்குப்பின் ஓய்வு பெறுவதாக அறிவித்தனர். அதன்படி டுமினி, இம்ரான் தாஹிர் ஆகியோர் தங்களது ஓய்வு முடிவை வெளியிட்டு ஓய்வு பெற உள்ளனர். இந்த அறிவித்தலின் பின்னர் இளம் வீரர் ஒருவரை அணித் தலைவராக உருவாக்க வேண்டும் என்றால் அவருக்கு அனுபவம் மிக்க ஒருவர் தேவை. இதனால் அடுத்த வருடம் நடைபெறும் 2020 ரி-20 உலகக்கோப்பை தொடர் வரை தனக்கு விளையாட வாய்ப்புள்ளதாக டு பிளிசிஸ் தெரிவித்துள்ளார்.
இலங்கைக்கு எதிரான ஒரு மோதலில் தனது ஐந்தாவது செஞ்சரியை அடித்துள்ள றோகித் ஷர்மா, இலங்கை வீரர் சங்கரக்காரவின் "4 செஞ்சரிகள்" சாதனையை முறியடித்துள்ளார். இச் சாதனை இந்தியா இலங்கை அணியுடன் மோதிய சமயம் சம்பவித்தது. தொடர்ந்து அற்புதமாக ஆடிய இவரை ஓரேயொரு ஓட்டத்துடன் களத்தை விட்டு வெளியேற்றிய நியுசிலாந்து பந்து வீச்சாளரை பாராட்டாமல் இருக்க முடியாது.

### அணியின் வருகையும், அதிரடி நீக்கமும்

3 மோதல்கள் கொண்ட ஒரு தொடரை விளையாடுவதற்காகப் பங்களாதேஷ் அணி இந்த மாதம் 23ஆம் திகதி இலங்கை வருகின்றது. முதலாவது போட்டி 26 ஆம் திகதியும், இரண்டாவது 28 அன்றும், இறுதிப் போட்டி 31 ஆம் திகதியன்றும் இடம்பெறுகின்றன. இலங்கை அணியின் இளம் வீரர் பெர்னான்டோ, தன் திறமையைக் காண்பிக்க இது நல்லதொரு வாய்ப்பாக இருக்கப் போகின்றது. அதே சமயம் தங்கள் பயிற்சியாளரைன ஸ்டீவ் றோட்ஸ் என்பவரை, பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அப் பதவியிலிருந்து அதிரடியாக நீக்கியிருக்கின்றது. அடுத்த ஆண்டு வரை தொடரவுள்ள இந்தத் தலைமைப் பயிற்சியாளர் இப்படி அதிரடியாக நீக்கப்பட்டதற்கு காரணம் உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்களாதேஷ் பெற்ற தோல்விகள்தான்!!

### 9வது தடவை வெல்வாரா?( டென்னிஸ்)



15 வயது பதின்ம வயது ஆட்டக்காரியின் சாகசம் ஒரு முடிவுக்கு கொண்டுவரப்பட்டு விட்டது. **Coco Gauff** விம்பிள்டன் மோதலில் இறுதிப் பதினாறில் தெரிவாகும் வாய்ப்பு, 28 வயதான ரோமானிய டென்னிஸ் வீராங்கனை **Simona Hale** இனால் பறிக்கப்பட்டு விட்டது. 7 ஆம் நிலை வீராங்கனையான சிமோனா ஹாலெப் 15 வயதே ஆன கோரி காஃப்-ஐ எதிர்கொண்டார். இதில் ஹாலெப் 6-3, 6-3 என நேர்செட் கணக்கில் வெற்றி பெற்றார். இறுதியாக சுவிஸ் வீராங்கனையான மார்ட்டீனா ஹிஞ்சஸ் என்பவர்தான், இறுதிப் பதினாறில் தெரிவாகி இருந்தார்.
இதே நேரத்தில் காலிறுதி ஆட்டத்திற்குள் நுழைந்திருக்கும் சுவிஸ் நட்சத்திர வீரர் றோஜர் பெடரருக்கு, இது 99வது விம்பிள்டன் வெற்றி! இந்த ஞாயிறு (14.07.2019) நடக்கும் இறுதி மோதலில் சொக்கோவிச், நடால் அல்லது பெடரரே சாம்பியன ஆவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். இதுவரையில் 8 தடவைகள் விம்பிள்டன் கிண்ணத்தை வென்றெடுத்துள்ள, பெடரர் 9வது தடவையும் கிண்ணத்தை கைப்பற்றுவாரா?

### தங்க பூட்ஸ் வென்றார்(காற்பந்தாட்டம்)

மகளிர் காற்பந்தாட்டத் தொடரும் நிறைவுக்கு வந்துவிட்டது. இறுதி மோதலில் ஒல்லாந்து அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வென்ற அமெரிக்கா, நான்காவது தடவையாகக் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. 34வயதுடைய அணித் தலைவரான **Rapinoe** எனபவரின் சிறப்பான ஆட்டம், அமெரிக்காவின் வெற்றிக்கு படியமைத்துக் கொடுத்துள்ளது. இச் சுற்றுப் போட்டியில் ஆறு கோல்கள் அடித்ததோடு, மறைமுகமாக இரு கோல்கள் அடிக்க உதவிய இவருக்கு தங்க பூட்ஸ் விருது அளித்துள்ளார்கள். இங்கிலாந்தின் லூசி புரொன்ஸ் என்பவருக்கு வெள்ளி பூட்ஸ் விருதும், வெண்கல பூட்ஸ் விருது இன்னொரு இங்கிலாந்து விளையாட்டு வீராங்கனையான எலென் வைற் என்பவருக்கும் போய்ச் சேர்ந்துள்ளது. சுற்றுப் போட்டியில் மூன்றாவது இடம் பெற்றது சுவீடன்
**"Copa America"** என்ற தென் அமெரிக்க காற்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளும் முடிவுக்கு வந்துள்ளன. இதில் தென் மெரிக்க நாடுகளே மோதுகின்றன. பிரேசிலில் ஜுன் 14 தொடக்கம் ஜுலை 7 வரை இடம்பெற்ற மோதல்களில், பிரேசில் கிண்ணத்தின் சொந்தக்காரனாகி இருக்கின்றது. இறுதி மோதலில் பெரு அணியை 3-1 என்ற கணக்கில் வென்றது பிரேசில்!. தங்கள் மண்ணில் போட்டிகளை நடாத்தும் ஒவ்வொரு சமயத்திலும், கிண்ணத்தை வெல்வது பிரேசிலின் வழமையாகி விட்டிருக்கின்றது. மண் ராசி நன்றாகத்தான் வேலைசெய்கின்றது.!























இந்தப் பத்திரிகை இல. 10, வில்வம் தெரு, கொழும்புத்துறை முகவரியிலுள்ள
நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தால் 14.07.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.